
www.padippakam.com

ஆக.-செப்.-அக். '93
மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்
விலை ரூ. 3


P'RAYA
87 RUE DE C[illegible]BES
92600 ASNI[illegible] [illegible]UR -
-SEINE ; FRANCE

# புதிய கலாச்சாரம்




படிப்பகம்

www.padippakam.com



ம.க.இ.க. - RSYF சுவரெழுத்துக்களை ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் தார் பூசி அழித்தனர் (இச்செய்தி ஆர்.எஸ். எஸ். மீது பரிதாபப்படும் பிரபஞ்சனுக்கு காணிக்கை



பெரியாரை இழிவு படுத்தும் இந்து முன்னணியின் திமிர்

# சென்னை: இந்து முன்னணி நடத்திய சுவரெழுத்து அழிப்பு இயக்கம்!

சென்னையில் இந்து முன்னணியின் விநாயகர் ஊர்வலத்தை எதிர்த்து விரிவான அளவில் சுவரெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.. விநாயகர் ஊர்வலத்தன்றும் அதற்கு முந்தைய சில நாட்களிலும் தொடர்ந்து பேருந்துகளில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. பேருந்துகளிலும் ரயில்களிலும் பிரச்சாரம் செய்தபோது மக்கள் முழுமனதாக ஆதரித்தனர்; நன்கொடையும் அளித்தனர்.

பார்ப்பன இந்து முன்னணிப் பேடிகள் தமது 'பாரம்பரியமான' முறையில் ம.க.இ.க.வின் பிரச்சாரத்தை எதிர் கொண்டனர்; இரவோடு இரவாக சுவரெழுத்தை அழித்தனர். அருகாமையிலிருந்த மக்களிடம் விசாரித்தபோது நள்ளிரவில் மாருதி காரில் யாரோ கூட்டமாக வந்து அழித்துச் சென்றதாகக் கூறினர். 'கூட்டம்' அவர்களது கோழைத்தனத்தையும், 'மாருதி கார்' மார்வாடிகளின் ''தயாள சிந்தையையும்'' காட்டுகின்றன.

அழித்த இடங்களுக்கு அருகில் பெரியாரையும், முஸ்லிம் மக்களையும் பற்றிய இழிவான வசைகளை பெயிண்டால் (நாம் அழிக்காமலிருக்க) எழுதிச் சென்றுள்ளனர். அவற்றை நாம் அழிக்கப் போவதில்லை; அவாளின் அரசியல் நாகரிகத்திற்கு சாட்சியாக அவை அப்படியே இருக்கட்டும்.

அவற்றை எழுதிய கைகளையும், உருவாக்கிய மூளைகளையும் விட்டு வைத்துவிட்டு, எழுத்துக்களை மட்டும் அழித்து என்ன பயன்?

# ஆர்.எஸ்.எஸ். காக்கியும் போலீஸ் காக்கியும்

அம்மா கோட்டைக்குப் போய்க் குந்திய நாளிலிருந்து கோவையில் ம.க.இ.க. பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்தது. மற்ற பல ஊர்களில் அனுமதி வழங்கப்பட்டாலும் கோவையில் மட்டும் காவல்துறை அனுமதி மறுக்கக் காரணம் உண்டு. இருபது ஆண்டுகளுக்கு முன் தி.மு.க. ஆட்சியிலேயே காவலர்களுக்கெல்லாம் முழுக்கால் சட்டை கொடுத்து விட்டார்களெனினும், கோவை போலீசு கமிஷனர், உதவி கமிஷனர்களான கணேசன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் மட்டும் 'காக்கி அரை டவுசர்' பேர்வழிகளாக இருப்பதே காரணம். கோவை கிளைச் செயலர் நசீம் இக்மத் மீதும், உறுப்பினர்கள் மீதும் கடந்த இரண்டாண்டுகளில் சுமார் 12 வழக்குள் போடப்பட்டதற்கும், சிறைக்கு அனுப்பப்பட்டதற்கும் கூட இதுவே காரணம்.

ஒவ்வொரு முறையும் பொதுக்கூட்ட அனுமதி கேட்கும் போதும் வாய்வழியாக மறுப்பது, கடிதத்தை பதிவு அஞ்சலில் அனுப்பினால் உடனே யாராவது ஒரு கட்சிக்காரனிடம் அதே தேதியில் அதே இடத்தில் கூட்டம் நடத்தப் போவதாக மனு எழுதி வாங்கிக் கொண்டு, அதையே காரணம் காட்டி எமக்கு அனுமதி மறுத்து விடுவது என்ற தந்திரத்தைக் கையாண்டு வந்தது போலீசு. அத்தேதிகளில் அந்த இடங்களில் கூட்டம் எப்போதுமே நடத்தப்படுவதில்லை.

இவற்றைச் சுட்டிக்காட்டி உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்தவுடன் 16-9-93 அன்று கூட்டம் நடத்திக் கொள்ளலாமென்று 'ஜனநாயக உரிமை'யை போலீசு வழங்கியது.

நீண்ட இடைவெளிக்குப்பின் கோவை ஒண்டிப்புத்தூரில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மாநிலப் பொருளாளர் சீனிவாசன் உரையாற்றினார். பின் கலைநிகழ்ச்சி முடிந்து சர்வதேசியகீதம் இசைக்கப்படும் வரை கூடியிருந்த மக்கள் அசையவில்லை — கலகம் விளைவிக்கப் போவதாக ஆர்.எஸ்.எஸ். கிளப்பியிருந்த வதந்தியையும், பீதியூட்டுவதற்காகவே குவிக்கப்பட்டிருந்த போலீசு பட்டாளத்தையும் மீறி!



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

- போர்: 11
- குரல்: 3-5
- ஆக - அக் '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3
ஆண்டுச் சந்தா: ரூ.36

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 8.5

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

ஆர்.சீனிவாசன்,
45, செங்குன்றம் சாலை,
வில்லிவாக்கம்,
சென்னை-600 049.

# பார்ப்பன பெருச்சாளிகள் பரப்பும் 'பிளேக்' நோய்

கடந்த சில ஆண்டுகளாக சென்னையில் மட்டுமே விநாயக சதுர்த்தி ஊர்வலங்களும் மதவெறி வன்செயல்களும் நடத்தி வந்தது, இந்த மதவெறி பாசிச ஆர்.எஸ்.எஸ்.-இன் ஏவல் படையான இந்து முன்னணி. இந்த ஆண்டு சென்னையில் மட்டுமல்லாது மதுரை, கோவை, திருச்சி போன்ற மாநகரங்களிலும், சிறுசிறு சந்தை நகரங்களிலும் கூட அதை விரிவுபடுத்தி ''வெற்றி''கரமாக நடத்தியிருக்கிறது. ''இது தந்தைப் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆழமாக வேரூன்றியுள்ள தமிழ் நிலம். திராவிட இயக்கங்களின் செல்வாக்குமிக்க மாநிலம். கணிசமான அளவு அம்பேத்கரிசமும், கம்யூனிசமும் வளர்ந்துள்ளது. இங்கே மதவெறிக்கும், மதக் கலவரங்களுக்கும் வாய்ப்பில்லை'' என்று யாராவது தன்மனநிறைவு கொள்வார்களேயானால் அதைத் தகர்க்கும் அளவுக்கு, ஆர்.எஸ்.எஸ். இந்து மதவெறி பாசிசம் பரவிவருவதையே இந்த ஆண்டு விநாயக சதுர்த்தி ஊர்வலங்களும், மதவெறி வன்செயல்களும் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில், திராவிட இயக்கத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஆட்சியைப் பிடித்துள்ள பார்ப்பன - பாசிச ஜெயலலிதா கும்பலின் பங்கேற்புடனும் நயவஞ்சகமான ஒத்துழைப்புடனும் தான் இத்துரிதமான வளர்ச்சியை இந்துமதவெறி பாசிசம் கண்டுள்ளது. தமிழ் மக்களிடம், குறிப்பாக முஸ்லீம் மக்களிடம் நம்பிக்கை துரோகம் செய்து ஓட்டுப் பொறுக்கும் நோக்கத்துடனே தனக்கும் ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவும் தேர்தல் கூட்டு எதுவும் கிடையாது என்று பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் நடித்து வருகிறது. மத நல்லிணக்க, மதச்சார்பற்ற அமைப்புகளும், எதிர்க்கட்சிகளும் கேட்டுக் கொண்ட தன்பேரில் மதவெறி வன்செயல்களைத் தூண்டும் மத ஊர்வலங்களை நடத்த வேண்டாம் என்று முதலில் ஜெயலலிதா அறிக்கை விட்டார். அதை ஏற்று முஸ்லீம்கள் மிலாது நபி ஊர்வலம் நடத்துவதில்லை என்று முடிவு செய்தனர். அதை வரவேற்ற ஜெயலலிதா, தனது கோரிக்கையை ஏற்காது விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடத்தியே தீருவது என்று அடாவடித்தனமாகப் பேசி, தயாரித்து வந்த இந்து முன்னணியின் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்திருக்க வேண்டும். ஆனால் இந்து முன்னணியுடன் இரகசிய உடன்பாடு செய்து கொண்டு, பழநி - ராணிப்பேட்டை தேர்தல்கள் முடியும்வரை மௌனம் சாதித்துவிட்டு, அடுத்தநாளே ஊர்வலத்துக்கு அனுமதி வழங்கினார். 13,000 போலீசாரைக் குவித்து ஏறக்குறைய ஊரடங்கு உத்திரவு போட்டு, முழுப்பாதுகாப்புடன் இதுவரை இல்லாத அளவு 'வெற்றி'கரமாக ஊர்வலம் நடத்தப்பட்டது. ராமபக்தி, ராமன் வழிபாடு தமிழ்நாட்டில் பிரபலமாக இல்லாததால் இங்கு விநாயக சதுர்த்தியும், அதைத் தொடர்ந்து யாத்திரைகளும் நடத்துகின்றனர்.

இதற்காக, கோடிக்கணக்கான ரூபாய் வாரி இறைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் கூலிக்கமர்த்தப்பட்டனர். பார்ப்பன - பாசிச ஜெயா அரசின் ஒத்துழைப்பு காரணமாக, மதவிழா முகமூடி போட்டுக் கொண்டு பொது இடங்களை மட்டுமல்ல; மாற்றுக்கட்சிகள், தனியார் இடங்களையும் உரிமையோடும் அடாவடித்தனமாகவும் ஆக்கிரமித்துக் கொண்டனர். தட்டிக்கேட்டவர்கள், பயங்கரமான ஆயுதங்களால் கொலை வெறியுடன் தாக்கப்பட்டார்கள். துணிச்சலோடு ஆயுதங்களுடன் வாகனங்களில் சுற்றி வந்து, இந்து மதவெறி எதிர்ப்பு சுவரெழுத்துக்களை அழித்தனர். சுவரொட்டிகளைக் கிழித்தனர். கடந்த ஆண்டுகளில் நடந்ததைப் போல சென்னையில் பெரிய அளவில் நடக்கவில்லை என்றாலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் காயல்பட்டிணம், கீழக்கரை, முத்துப்பேட்டை ஆகிய புதிய பகுதிகளுக்குத் தமது வன்செயல்களை விரிவுபடுத்தியுள்ளனர். மொத்தத்தில் ஒரு சிறுபொறி கூட மதவெறிக் கலவரங்களை வெடிக்கச் செய்யுமாறு தமிழ் மண்ணில் வெடிமருந்துகள் தூவி விடப்பட்டுள்ளன. மதவழிபாடுகள், திருவிழா ஊர்வலங்கள் மூலமாக மக்களுக்கு பக்தி போதையூட்டி செல்வாக்குப் பெறுவது; பிறகு மதம் மற்றும் அரசியல் யாத்திரைகளை நடத்தி மதவெறி, மதக்கலவரங்களைத் தூண்டி இந்துக்களின் ஓட்டு வங்கியை உருவாக்கி ஆட்சியைப் பிடிப்பது என்ற தந்திரத்தை அவர்கள் பின்பற்றுகின்றனர்.

இந்து மதவெறி பாசிசத்தை எதிர்த்துப் போராடுவதில் திராவிட - தமிழினவாத இயக்கங்கள் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகள்,போலிப் புரட்சியாளர்களிடையே நிலவும் இரண்டு தவறான அணுகுமுறைகளை இங்கே சுட்டிகாட்ட வேண்டும். பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதோர் என்கிற பொதுவான சூத்திரம் இந்து மதவெறி பாசித்தின் சமூக அடிப்படையை வரையறுப்பதற்கு பிரயோகித்திட முடியாது. சந்தேகத்திற்கு இடமின்றி பார்ப்பன - பனியா பாசிச கும்பலே தலைமை மற்றும் நிதி பலத்தைத் தருவதாக உள்ளது. ஆனால் வியாபாரப் பிரிவைச் சேர்ந்த நாடார்களும், பணக்கார விவசாயிகள், நிலப்பிரபுத்துவப் பிரிவைச் சேர்ந்த வெள்ளாளக் கவுண்டர்களும் மறவர்களும் உதிரித் தொழிலாளர் பிரிவைச் சேர்ந்த பிழைப்புவாத - பொறுக்கி இளைஞர்களும் இந்து மதவெறி பாசிசத்தின் சமூக பலமாகத் திரட்டப்பட்டுள்ளனர். இந்தச் சக்தியையும் எதிர்த்துப் போராடாமல் பார்ப்பன - பனியா பாசிச கும்பலை முறியடிக்க முடியாது. ''பிரிவினைவாத - பயங்கரவாத சக்திகளை எதிர்த்து தேசியம் காப்பது'' என்கிற பெயரில் மதச்சார்பற்ற, ஜனநாயக, புரட்சிகர சக்திகளையும் இனம், மொழி, மதச் சிறுபான்மையினரையும் அடக்கி ஒடுக்குவதே அதன் நோக்கம் என்றாலும் இந்து மதவாதத்தை முன்வைத்தே அதைச் சாதிக்க முனைந்துள்ளது, பார்ப்பன - பனியா பாசிச கும்பல். ஆகவே போலிக் கம்யூனிஸ்டுகள், போலிப் புரட்சியாளர்கள் செய்வதைப்போன்று, ''பெரும்பான்மையினரான இந்துக்களின் மத-கடவுள் உணர்வைப் புண்படுத்தாதவாறு, பொதுவான மதச்சார்பின்மை, மத நல்லிணக்கம்'' பேசி இந்துமதத்தையும் இந்துமதவெறி பாசிசத்தின் அரசியலையும் பிரித்து அம்பலப்படுத்தி முறியடிக்க முடியாது. இந்து மதவாதத்தின் அடிப்படையான பார்ப்பன சனாதன வருணாசிரம - சாதி ஆதிக்கமும், அதன் பாசிச அரசியலும் இணைந்தே உள்ளன. ஆகவே இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிரான அரசியலோடு சுயமரியாதை - சமூகநீதி மற்றும் பகுத்தறிவுப் போராட்டங்கள் நடத்துவது அவசியமாக உள்ளது. இவையின்றி பார்ப்பன - பனியா பாசிச கும்பலைத் தனிமைப்படுத்தி முறியடிக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com

# தாழ்த்தப்பட்டோர் கோவில் நுழைவு
# ஆர்.எஸ்.எஸ். மூதாதையர்களின் முகவிலாசம்

குமரி மாவட்ட நாடார் சமூகத்தைச் சேர்ந்த கணிசமானோர் ''வாங்க ஜீ போங்க ஜீ' என்று ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலுடன் வெட்கமின்றி கைகோர்த்துத் திரிவதனால் தானே ராம. கோபாலன் இப்படிப் பேசமுடிகிறது. நாடார் சமூகத்தினரை தீண்டத்தகாதவர்களாக, நாயினும் கீழாக பார்ப்பனர்கள் நடத்திய வரலாறு ''பாபர் மசூதி விவகாரம்'' போல 400 ஆண்டுகளுக்கு முந்தைய பழங்கதை அல்ல; 50 ஆண்டுகளுக்கு முன்புவரை கூட தமிழகம் கண்ட காட்சி.

இந்து முன்னணி கூடாரத்தில் இன்று ரொம்பவும் 'கவுரமாக' உலவிவரும் இந்த 'ஜீ'க்கள் தங்கள் பாட்டன்மார் பட்ட துயரத்தை கேட்டாவது தெரிந்து கொள்ளட்டும். தாங்கள் பாட்டன் மாரை 'சாணான்' என்று ஏசி கோயிலுக்குள் விடாமல் தடுத்த பார்ப்பன. சாதி வெறியர்களுக்குத் தான் இன்று ஆர்.எஸ்.எஸ். கொடியின் கீழ் நின்று தாங்கள் 'குருவணக்கம்' செய்து கொண்டிருக் கிறோம் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

ஜூலை - 8 '1939. மதுரை மீனாட்சி கோயில். தாழ்த்தப்பட்டவர்கள் 5 பேரும் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர் ஒருவரும் அன்று காலை கோயிலுக்குள் வழிபடச் செல்கின்றனர். அவர்களை அழைத்து வந்தவர்கள் காந்தியால் தோற்றுவிக்கப் பட்ட அரிசன சேவைச் சங்கத்தைச் சேர்ந்த இரண்டு உயர்சாதியினர். கோயிலின் நிர்வாக அதிகாரியாக இருந்த திரு. நாயுடு அவர்களை கோயிலுக்குள்ளே அழைத்துச் சென்றார். அப்போது கருவறையில் இருந்த பொன்னுசாமிபட்டர் என்ற அர்ச்சகர், அவர்களுக்கு பூவும், பிரசாதமும் வழங்கினார். சுமார் அரைமணி நேரத்திற்குப்பின் வழிபாட்டை முடித்துக் கொண்டு அவர்கள் கோயிலை விட்டுச் சென்றனர்.

இப்படியாக ''அரிசன ஆலயப் பிரவேசம்'' மிகவும் சுமுகமாக நடந்து முடிந்து விட்டதைப் போலத்தான் முதலில் தோன்றியது. ''மதுரைக்கு ஒரு இன்ப அதிர்ச்சி - சாதி இந்துகளிடமிருந்து எதிர்ப்பு இல்லை'' என்று தலைப்பிட்டு ''மெட்ராஸ் மெயில்'' பத்திரிக்கை செய்தி வெளியிட்டது. அன்றைய சென்னை மாகாண முதல்வர் (காங்கிரஸ்) ராஜாஜி, தனக்கு 'மகிழ்ச்சியில் பைத்தியமே பிடித்துவிட்டதாக'' குறிப்பிட்டாராம். காந்தி மதுரை திரும்பினார். நிர்வாக அதிகாரி நாயுடுவின் உத்திரவின்படி கோயிலுக்குள் நுழைந்து பூசை செய்வதென அவர் முடிவு செய்தார். அதை மற்ற அர்ச்சகப் பார்ப்பனர்கள் அனைவரும் கடுமையாக எதிர்த்தனர்.

ஜூலை-10 அதிகாலை: அர்ச்சகர்களின் பலத்த எதிர்ப்புகளையும் மீறி நிர்வாக அதிகாரி நாயுடு கோயில் பூட்டுகளை உடைக்க உத்தரவிட்டார். 9-ம் தேதிக்கு உரிய பூசையையும், 10-ம் தேதிக்குரிய காலைப் பூசையையும் சந்து பட்டர் செய்து முடித்தார்.

ஜூலை 9 அன்று வேலைக்கு வராததற்காக முத்துசுப்பர் மற்றும் இரு அர்ச்சகர்களை நிர்வாக அதிகாரி தற்காலிக வேலை நீக்கம் செய்தார். அடுத்தடுத்த நாட்களில் வேலைக்கு வரமறுத்த அர்ச்சகர்கள் வரிசையாகத் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டனர். மீதமிருந்தவர்கள் சந்து பட்டர் மட்டுமே.

பற்றாக்குறையைச் சமாளிக்க திருநெல்வேலியிலிருந்து 12 பார்ப்பன அர்ச்சகர்கள் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு திருநெல்வேலி அர்ச்சகர்கள் 'ஒத்துழைக்கக்' காரணம் மதுரை கோயிலில் கிடைக்கக் கூடிய கொழுத்த வருமானம். அத்துடன் இவ்வாறு வருவதன் மூலம் உள்ளூர் பார்ப்பனர்களின் கடுமையான எதிர்ப்பை சந்திக்க வேண்டிவரும் என்பதையும் அவர்கள் அந்த அளவுக்கு உணரவில்லை.

வேலை நிறுத்தம் செய்த அர்ச்சகர்களை சநாதனிகள் (பார்ப்பன, உயர்சாதி வெறியர்கள்) தீவிரமாக ஆதரித்தனர். இவர்கள் எல்லோருமே அகில இந்திய வருணாசிரம சுயராஜ்ஜிய சங்கத்தின் உறுப்பினர்கள் அல்லது ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இச்சங்கத்தின் தலைவரான என். நடேச அய்யர் என்னும் மதுரை வழக்கறிஞர் 'அரிசன ஆலயப் பிரவேசம்' தொடர்பாக தனிப்பட்ட முறையில் நிர்வாக அதிகாரி நாயுடுவைக் குறிவைத்து தாக்கினார். தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைந்ததால் கோயில் தீட்டாகிவிட்டது என்றும், தெய்வங்கள் கோயிலைவிட்டு வெளியேறிவிட்டன என்றும், முறையான தீட்டுக்கழிப்பு சடங்கு (சம்புரோட்சணம்) நடத்தப்பட்டால்தான் தாங்கள் கோயிலுக்குள் நுழைவோம் என்றும் பகிரங்கமாக அறிக்கை விட்டார்.

ஜூலை 13 அன்று நடேச அய்யரின் உதவியுடன் இரண்டு அர்ச்சகர்கள் மதுரைச் சப் கோர்ட்டில் நிர்வாக அதிகாரி நாயுடுவுக்கெதிராக ஒரு வழக்கு தொடர்ந்தனர். தீட்டுக்கழிப்புச் சடங்கை நடத்த அவர் அனுமதிக்க வேண்டும் என்றும், அதற்குரிய செலவுத் தொகையையும் தர வேண்டும் என்றும் தங்கள் மனுவில் அவர்கள் கோரியிருந்தனர். ஆனால் ஜூலை 17-ம் தேதியன்று சென்னை மாகாண அரசு அவசரச்சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது. தாழ்த்தப்பட்டவர்களை கோயிலுக்குள் அனுமதித்த காரணத்திற்காக (குற்றத்திற்காக) யார் மீதும் வழக்கு தொடர்வதை அச்சட்டம் தடை செய்தது. இதன் காரணமாக நடேச அய்யரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜூலை 29-ம் தேதி காலை நடேசய்யர் தலைமையில் சில அர்ச்சகர்களும், சநாதனிகளும் (சாதி வெறியர்கள்) மீனாட்சி கோயில் வாசலில் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினர். கோயிலுக்கு உள்ளே சென்று தீட்டுக்கழிப்பு சடங்கு நடத்த தங்களை அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கோரினர். நிர்வாக அதிகாரி நாயுடு கோயிலை இழுத்துப் பூட்டினார். வேலை நீக்கம் செய்யப்பட்ட அர்ச்சகர்கள் உள்ளே நுழைய முடியாது என்றும், தீட்டுக்கழிப்பு சடங்கு எதையும் நடத்த அனுமதிக்க முடியாது என்றும் திட்டவட்டமாக அறிவித்தார். இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் சில அர்ச்சகர்கள் உள்ளே நுழைய முயன்றபோது அவர்களையும் நாயுடு தடுத்து திருப்பி அனுப்பினார்.

அடுத்து ஆகஸ்டு 19 அன்று ஆவணி மூலத்திருவிழா தொடங்கியது. பிரச்சினைகளும் தொடங்கின. கோயிலுக்கென்று பரம்பரையாக வேதம் ஓதுகின்ற பார்ப்பனர்கள் (இவர்கள் அர்ச்சகர்கள் அல்ல) மதுரைக் கோயிலுக்கு இருந்தனர். திருவிழாக்களில் சாமி ஊர்வலத்தின் பின்னே வேதம் ஓதிச் செல்வது இவர்களது பணி. இவர்களும் வேலை செய்ய (!) மறுத்துவிட்டதால் வேறு சில பார்ப்பனர்களை நாயுடு இதற்கு ஏற்பாடு செய்தார்.

இந்தத் திருவிழாவிற்கென திருப்பரங்குன்றத்திலிருந்து முருகன் சிலையையும், திருவாதவூரிலிருந்து மாணிக்கவாசகர் சிலையையும் மதுரைக்குக் கொண்டு வருவது மரபு. இதையும் தடுப்பதற்குப் பார்ப்பனர்கள் சதி செய்தனர். நாயுடுவின் முன்யோசனையில் இந்தச் சதியும் முறியடிக்கப் பட்டது. தங்களது தோல்விகளால் ஆத்திரம் அடைந்த சநாதனிகள் திருவிழாவைப் புறக்கணிக்குமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தனர்; ஆனால் இந்த ''அறைகூவலும்'' தோல்வியடைந்தது.

''அரிசன ஆலயப் பிரவேசம்''தொடர்

படிப்பகம்

www.padippakam.com

பாக சென்னை மாகாண அரசு ஜூலை மாதம் கொண்டுவந்த சட்டம் செப்டம்பரில் பிரிட்டிஷ் வைசிராயின் ஒப்புதலைப் பெற்றது. இதற்கெதிராக சென்னை மாகாண கவர்னருக்கும், வைசிராய்க்கும் நடேசய்யர் அனுப்பிய மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆனால் நடேசய்யர் விடுவதாக இல்லை. மதுரை கோயிலுக்கு அளித்து வந்த மானியங்களை நிறுத்தி விடுமாறு கொச்சி, மைசூர் மற்றும் சிவகங்கை மன்னர்களை வேண்டினார். இவையும் வெற்றியடைந்ததாகத் தெரியவில்லை.

டிசம்பர் இறுதியில் மதுரைக் கோயிலுக்கு வந்த ஒரு பிரிட்டிஷ் அதிகாரி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார் "கோயிலுக்கு வருபவர்கள் பெரும்பாலும் நாடார் சமூகத்தினர்தான்; மற்ற உயர்சாதியினர் வேண்டுமென்றே கோயிலை புறக்கணிக்கின்றனர்" அர்ச்சகர்கள் மற்றும் பார்ப்பன சநாதனிகளுக்கெதிரான போராட்டத்தில் கோயில் நிர்வாக அதிகாரி நாயுடு பெருமளவு வெற்றி பெற்றிருந்தாரெனினும், நகரத்தின் உயர்சாதி இந்துக்களை பார்ப்பன அர்ச்சகர்களும், சநாதனிகளும் தங்களுக்கு ஆதரவாகத் திரட்டியிருந்தார்கள் என்பதும் உண்மை.


இத்தனை எதிர்ப்புகள் இருக்கும் போது ஜூலை 8-ம் தேதி கோயிலில் நடந்ததுதான் என்ன? தாழ்த்தப்பட்டவர்களும், நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் கோயிலுக்குள் நுழைந்ததுதான் எப்படி என்ற கேள்விகள் எழுகின்றன.

"தாழ்த்தப்பட்டவர்களும் நாடார் சமூகத்தவரும் கோயிலில் நுழைவது பற்றி அன்றைக்கு அர்ச்சகராக இருந்த பொன்னுசாமி பட்டருக்கு நன்றாகத் தெரியும்" என்கிறார் நிர்வாக அதிகாரி நாயுடு. "ஆனால் நடேச அய்யர் குற்றம் சாட்டுவது போல் இந்த ஆலயப்பிரவேசம் குறித்து முன்கூட்டியே தனக்கு எதுவும் தெரியாது" என்றும் கூறுகிறார் நாயுடு.

கோயிலுக்குள் வந்திருப்பவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் நாடார்கள் என்பது தனக்கு முதலில் தெரியாது என்றும், இந்த உண்மை தெரியவந்தவுடன் சுந்தரேசர் சந்நிதியில் வழிபாடு. நடத்ததான் அவர்களை அனுமதிக்கவில்லை என்றும் கூறுகிறார் பொன்னுசாமிபட்டர். ஜூலை 9-ம் தேதி முதல் 'அரிசன ஆலயப் பிரவேசத்திற்கு' எதிரான சநாதன வெறியர்களுடன் இவர் சேர்ந்து கொண்டார் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

1943 இல் இது தொடர்பான வழக்கொன்று நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது பார்ப்பன அர்ச்சகர்கள் தங்கள் தரப்பை தெளிவாக முன்வைத்தனர். "தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் நாடார்களை தெரிந்தே நாங்கள் கோயிலுக்குள் அனுமதிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று திட்டவட்டமாகக் கூறினர்.

நிர்வாக அதிகாரியால் கோயிலை விட்டு நீக்கப்பட்டபின் அர்ச்சகர்கள் பல்வேறு தீவிர நடவடிக்கைகளில் இறங்கினர். அரிசன ஆலயப் பிரவேசத்திற்குப்பின் சாதிக்கட்டுப்பாட்டை மீறி கோயிலுக்குச்




சென்று பூசை செய்த சந்து பட்டரையும் அவரது குடும்பத்தையும் சாதிப்பிரஷ்டம் (சமூகப் புறக்கணிப்பு) செய்தனர். திருமணம் மற்றும் சாவுக்கு செல்வது, பிறப்பு - இறப்புக்கு தீட்டு அனுசரிப்பது ஆகியவைகளை நிறுத்தினர். இந்த சாதிப்புறக்கணிப்பு இன்று வரை தொடர்கிறது. (இப்போதுதான் ஓரிரு அர்ச்சர்கள் சந்துவின் வாரிசுகளை தங்கள் வீட்டு திருமணத்திற்கு அழைத்துள்ளனர்)

சந்து பட்டரையும், திருநெல்வேலியிலிருந்து அழைத்து வரப்பட்ட பார்ப்பன அர்ச்சகர்களையும் மற்ற அர்ச்சகர்கள் அடியாட்களை வைத்து தாக்கினர். திருநெல்வேலி அர்ச்சகர்கள் அரிவாள் வெட்டு, கத்திக் குத்துக்கு இலக்காகினர்.

சட்ட நடவடிக்கைகளும் தொடர்ந்தன. சப்-கோர்ட்டின் தள்ளுபடி செய்யப்பட்ட தனது வழக்கை நடேசய்யர் மாவட்ட நீதி மன்றத்திற்குக் கொண்டு சென்றார். 1942-இல் அது தள்ளுபடி செய்யப்பட்டது. சென்னை உயர்நீதி மன்றத்திற்கு செய்யப்பட்ட மேல்முறையீடு 1944-இலும், ஃபெடரல் நீதிமன்றத்திற்கு செய்யப்பட்ட மேல்முறையீடு 1946-இலும் தோல்வியடைந்தன. அரசு பிறப்பித்த சட்டம் சரியென்றும், தீட்டுக்கழிப்புச் சடங்கு நடத்தச் சொல்லி நிர்வாக அதிகாரி உத்தரவிட முடியாது என்றும் இரு நீதிமன்றங்களுமே தீர்ப்பளித்தன.

வேலை நீக்கம் செய்யப்பட்ட பார்ப்பன அர்ச்சகர்கள் இந்து அறநிலையத் துறைக்கு செய்த மேல்முறையீடு நிராகரிக்கப்பட்டதால் அவர்கள் மதுரை முன்சீப் கோர்ட்டில் வழக்கு தொடுத்தனர். தாங்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டது சட்டவிரோதமானது என்று வாதாடினர். முன்சீப் கோர்ட் அர்ச்சகர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தது. நிர்வாக அதிகாரி மாவட்ட நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்தார். முன்சீப் கோர்ட்டின் தீர்ப்பையே உறுதி செய்த மாவட்ட நீதிமன்றம் "தீட்டுக்கழிப்பு சடங்கு நடத்தாமல் பூசைகள் செய்ய முடியாது என்று அர்ச்சகர்கள் மறுத்தது சரியே" என்று கூறியது. இத்தீர்ப்பைத் தொடர்ந்து ஜனவரி 1944-இல் அர்ச்சகர்கள் வேலைக்குத் திரும்பினர்.

நிர்வாக அதிகாரி நாயுடு உடனே உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்தார். "நிர்வாக அதிகாரியின் உத்திரவுகள் கோயிலின் சம்பிரதாயங்களுக்கேற்ப உள்ளன என்பதை முடிவு செய்யும் தகுதி. நீதி மன்றங்களுக்கு இல்லை; அதே சமயம் கோயிலுக்குள் யாரை அனுமதிக்கலாம் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் நிர்வாக அதிகாரிக்கு உண்டு" என்று உயர்நீதி மன்றம் ஜூலை 1944-இல் தீர்ப்பு கூறியது. ஆகஸ்டு மாதம் பார்ப்பன அர்ச்சகர்கள் மீண்டும் கோயிலைவிட்டு வெளியேறினர்.

ஆகஸ்டு, 1945-இல் ஒரு சமரசத்தீர்வு காணப்பட்டது. "தீட்டுக் கழிப்புச் சடங்கு நடத்தப்படமாட்டாது. ஆனால் அர்ச்சகர்கள் வழக்கம்போல பூசைகளை நடத்த வேண்டும்; நிர்வாக அதிகாரியின் சட்டபூர்வமான உத்திரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்ற நிபந்தனையின் அடிப்படையில் செப்டம்பர் '1945-இல் பார்ப்பன அர்ச்சகர்கள் 6 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் 'வேலைக்கு' சேர்ந்தனர். திருநெல்வேலியிலிருந்து கொண்டுவரப்பட்ட அர்ச்சகர்கள் வேறு சிறிய கோயில்களுக்கு அனுப்பப்பட்டனர்.

ஆனால் பிரச்சினைகள் ஓயவில்லை. ஆகஸ்டு 1939 ஆலயப் பிரவேசத்தைத் தொடர்ந்து அர்ச்சனை டிக்கெட் முறையை நாயுடு அறிமுகப்படுத்தினார். ஒரு அர்ச்சனை சீட்டின் விலை 3 அணா என்றும், இதில் ஒரு அணா அர்ச்சகர்களுக்கும் இரண்டணா கோயில் நிதிக்கும் என பகிர்ந்தளித்தார். 1944-இல் - இடையில் 8 மாத காலத்திற்கு - பணிக்குத் திரும்பிய அர்ச்சகர்கள் இதை ஏற்க

www.padippakam.com

ஒரு அர்ச்சனைக்கு இரண்டணா வீதம் அவர்கள் கோயிலுக்கு பணத்தைத் திருப்பித்தர வேண்டும் என்று மாவட்ட நீதி மன்றத்தில் நாயுடு வழக்கு தொடர்ந்தார். இது கோயில் சம்பிரதாயத்துக்கு எதிரானது என்று அர்ச்சகர்கள் வாதாடி வழக்கில் வெற்றியும் பெற்றனர்.

நாயுடு உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார். அர்ச்சனை சீட்டு முறையை அறிமுகப்படுத்த நிர்வாக அதிகாரிக்கு சட்டபூர்வ உரிமை உண்டு என்றும், மேற்படி தொகையை அர்ச்சகர்கள் கோயிலுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் உயர் நீதி மன்றம் 1953-இல் உத்தரவிட்டது.

அதேபோல கோயிலின் பல இடங்களில் நாயுடு உண்டியல்களை நிறுவினார். பக்தர்கள் அர்ச்சகர்களிடம் காணிக்கைத் தொகையைத் தருவது அல்லது கருவறைக்குள் வீசுவது என்ற பழக்கம் இதனால் ஒழிக்கப்பட்டது. இது அர்ச்சகர்களின் ஆத்திரத்தைக் கிளறியது.

மேலும் கோயிலுக்கு வருகின்ற பிரமுகர்களை தலைமை அர்ச்சகர் தான் வரவேற்க வேண்டும் என்று இருந்த பழக்கத்தை நிறுத்தி அந்த உரிமையை நிர்வாக அதிகாரிக்கு நாயுடு மாற்றித்தந்தார்; கோயிலின் பேஷ்காராக (அதிகாரி) பார்ப்பனர் தான் இருக்க வேண்டும் என்ற மரபை உடைத்து 1945-இல் பார்ப்பனரல்லாதவர் ஒருவரை நியமித்தார். "ஒரு பார்ப்பனரல்லாதவரின் அதிகாரத்தின் கீழ் பார்ப்பனர்கள் வேலை செய்ய முடியாது" என்றனர் அர்ச்சகர்கள். இதற்கும் நாயுடு மசியவில்லை. நினைத்த நேரத்தில் கோயிலுக்கு வருவது என்று தம் விருப்பம் போல ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த அர்ச்சகர்களுக்கு 'பணி நேர அட்டவணை" போட்டு, அவர்கள் ஒழுங்காக வேலைக்கு வருகிறார்களா என்பதை பேஷ்கார் மூலம் கண்காணித்தார்.

ஆண்டுதோறும் கோயிலில் நடைபெறும் முடிசூட்டுவிழாச் சடங்கின்போது கோயிலின் சார்பில் மன்னனுக்கு செங்கோல் வழங்கப்படுவது மரபு. இந்தச் செங்கோல் அரசின் பிரதிநிதி என்ற முறையில் நிர்வாக அதிகாரிக்கு வழங்கப்பட வேண்டும் என்று நாயுடு உத்தரவு பிறப்பித்தார். இது நாள் வரை நாயக்க மன்னர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வந்த செங்கோலை நாயுடுக்கு அளிக்க நேர்ந்ததை எண்ணி பார்ப்பன அர்ச்சகர்கள் பெரிதும் பொருமினர்.

தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் நாடார் சமூகத்தினரின் ஆலய நுழைவு வேறொரு துணிவினையும் ஏற்படுத்தியது. ஏற்கனவே கருவறைக்கு அருகே சென்று வழிபடும் உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே இருந்தது. பார்ப்பனரல்லாதார் குறிப்பிட்ட தூரத்திற்குத் தள்ளி நின்றே வழிபட முடியும். இதில் ஆகமவிதி கறாராகப் பின்பற்றப் பட்டது. ஆலய நுழைவுக்குப் பின் இவ்விதி தகர்ந்து அனைவரும் கருவறையின் அருகில் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்பட்டது.

1939-க்கு முன்னர், 1897-இலேயே கமுதி நகரின் சிவன் கோயிலில் நாடார் சமூகத்தினர் தடையை மீறி நுழைந்தனர். இது தொடர்பான வழக்கு லண்டன் பிரிவி கவுன்சில் வரை சென்றது. வழக்கை விசாரித்த பிரிட்டிஷ் பிரிவி கவுன்சில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கியது. 'மதுரை மாவட்டத்திலுள்ள சைவ வழிபாட்டுக்காரர்களால் அதிகார பூர்வமானது என்று கருதப்படும் ஆகம விதிகளின்படி நாடார்கள் கோயிலுக்குள் நுழைவது தடை செய்யப்பட்டுள்ளது"

ஆனால் அர்ச்சனை சீட்டு விவகாரத்தை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம், இத்தகைய முறைகளை அறிமுகம் செய்ய நிர்வாக அதிகாரிக்கு உரிமை உண்டு என்று தீர்ப்பு கூறியது. இதன் மூலம் சாத்திரங்கள் மற்றும் மரபுகளுக்கு அர்ச்சகர்கள் சொல்வதுதான் விளக்கம் என்ற நிலையை சென்னை உயர்நீதிமன்றம் மாற்றியது.

இந்த ஆலய நுழைவைப் பொருத்த வரையில் ஏதோ தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் நுழைந்துவிட்டார்கள் என்று மட்டுமல்ல, பார்ப்பன அர்ச்சகர்களின் ஆத்திரத்திற்குக் காரணம். கோயில் விவகாரங்களில் அவர்களுடைய அதிகாரம் கேள்விக்கு உள்ளாகிப் போனதும் கூடத்தான்.

ஆங்கிலேயரான இந்த நூலாசிரியரிடம் ஒரு பார்ப்பன அர்ச்சகர் கூறினாராம் "1947-இல் இறக்கப்பட்டது உங்கள் கொடி மட்டுமல்ல, எங்கள் கொடியும்தான்!"

**(இக்கட்டுரை C.J. ஃபுல்லர் எழுதிய 'தேவியின் சேவகர்கள்' (Servants of the Goddess) என்ற நூலின் ஒரு பகுதியின் சுருக்கப்பட்ட மொழியாக்கம். நூல் வெளியீடு: கேம்ப்ரிட்ஜ் யுனிவர்சிட்டி பிரஸ் - 1984.)**

**நூலாசிரியரின் குறிப்பு: இக்கட்டுரையில் அரிசனங்கள் என்ற சொல் நாடார் சமூகத்தினரையும் சேர்த்தே குறிக்கிறது.**

● *மருதையன்*

## விலையேற்ற அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே,

புதிய கலாச்சாரம் இதழின் விலையை இந்த இதழ் முதல் ரூ. 3 ஆக உயர்த்துகிறோம். விலை உயர்வைத் தவிர்க்கவும் தள்ளிப் போடவும் முயன்றோம்; முடியவில்லை.

ஒவ்வொரு மாதமும் முறையாக இதழ் வெளியாகும் என்று பல முறை உறுதிகூறியும் அதை நிறைவேற்ற இயலவில்லை. இயன்ற அளவு விரைவாக இக்குறையைச் சரிசெய்து இதழை முறையாகக் கொண்டு வருகிறோம்.

இவண்
ஆசிரியர் குழு



## ஒரு பார்ப்பன மோசடி அரிசன சேவா சங்கம்

இக்கட்டுரையைப் படிப்பவர்கள் ராஜாஜி தலைமையிலான சென்னை காங்கிரஸ் அரசு மிகவும் நாணயமாக நடந்து கொண்டதாக நினைக்கக்கூடும். உண்மை அதுவல்ல!

மதுரை ஆலயநுழைவை தலைமையேற்று நடத்திய அரிசன சேவா சங்கம் என்ற அமைப்பு தீண்டாமைக்கும், நால் வருண முறைக்கும் எதிராக அம்பேத்கார் தொடுத்த தாக்குதலிலிருந்து மக்களை திசைதிருப்புவதற்காகவும் அம்பேத்காரின் தலைமையிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பிரிவினரை பிரிப்பதற்கும் திட்டமிட்டே காந்தியால் உருவாக்கப்பட்டது. தீண்டாமையை எதிர்த்து தாழ்த்தப்பட்டவர்கள் கூண்டோடு இந்து மதத்தை விட்டு விலகி விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகத்தான் இந்த 'ஆலய நுழைவு' சீர்திருத்தத்தை ஒரு பிரிவு பார்ப்பனர்கள் வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டனர்.

ஆலய நுழைவை கடுமையாக எதிர்த்த "அகில இந்திய வர்ணாசிரம சுயராஜ்ஜிய சங்கத்தை" (இக்கட்டுரையில் கூறப்படும் அமைப்பு) சேர்ந்தவர்கள்தான் இன்றைய இந்து முன்னணி — ஆர்.எஸ்.எஸ். கும்பலின் மூதாதையர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# ஆலய நுழைவு காந்தியின் நாடகம்

1920 களில் தொடக்கத்தில் தீண்டப்படாதவர்கள் கோயிலினுள் நுழைவதைக் காந்தி ஆதரிக்கவில்லை; சமபந்தி உணவு உண்பதையும் எதிர்த்தார். முக்கியமான காங்கிரசுத் தலைவர்களும் கோயில் நுழைவு இயக்கத்தை எதிர்த்தனர்.....

1930 மார்ச்சு மாதம் நாசிக்கில் அம்பேத்கர் தொடங்கிய கோயில் நுழைவுப் போராட்டத்தையும், 1931 நவம்பரில் குருவாயூரில் கேளப்பன் நடத்திய கோயில் நுழைவுப் போராட்டத்தையும் காங்கிரசுக்காரர்கள் இதுவரை புறக்கணித்தே வந்தனர். 1932 செப்டம்பர் மாதம் 21-ஆம் நாள், தீண்டப்படாதவர்களுக்குக் குருவாயூர் கோயிலைத் திறந்துவிடாதவரையில் உண்ணா நோன்பு இருக்கப்போவதாக அறிவித்துக் கேளப்பன் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். தீண்டப்படாதவர்களுக்குக் குருவாயூர் கோயிலைத் திறந்துவிடாவிட்டால், 1933 சனவரி முதல் நாள் கேளப்பனோடு சேர்ந்து தானும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் காந்தி தந்தி மூலம் தந்த உறுதிமொழி காரணமாக, செப்டம்பரிலிருந்து மூன்று மாதங்களுக்குத் தன் உண்ணாநோன்பைக் கேளப்பன் ஒத்திப் போட்டார்.....

"பொன்னாணி வட்டத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தி அதில் தீண்டப்படாதவர்கள் குருவாயூர் கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று பெரும்பான்மையினர் கருத்துத் தெரிவித்தால் நான் மேற்கொள்வதாக உள்ள உண்ணாநோன்பினைக் கைவிட்டு விடுவேன்" என்று காந்தி அச்சமயம் யோசனை கூறினார். ஆனால் பொன்னாணி வட்டக் கருத்துக் கணிப்பில் பெரும்பான்மையினர் கோயில் நுழைவுக்கு ஆதரவளித்தனர். ஆயினும் சாமரின் இளவரசர் பெரும்பான்மையினரின் கருத்துக்கு இணங்கிட மறுத்துவிட்டார். அவ்வேளையில் இந்திய மத்திய சட்டசபையில் ரங்கா அய்யர் தீண்டாமை ஒழிப்பு மசோதா ஒன்றை முன்மொழிந்திருந்தார்.....

இத்தகைய நிலைமைகளில் காந்தி முன்பு அறிவித்திருந்தவாறு 1933 சனவரி முதலாம் நாள் உண்ணாநோன்பைத் தொடங்கப் போவதில்லை என்றும், கவர்னர் ஜெனரலின் முடிவுக்காகக் காத்திருக்கப் போவதாகவும் கூறி உண்ணாநோன்பினைத் தள்ளிப் போட்டார். "காந்தி இந்தியாவின் முடிசூடா மன்னர் என்பதும் அவர் வைத்ததே இந்தியாவில் சட்டம் என்பதும் உண்மையாக இருக்குமானால் ஏன் இந்தக் குளறுபடியும் அலம்பலும்?" என்று அம்பேத்கரின் ஆதரவாளர்கள் கேட்டனர்.....



டாக்டர் சுப்பராயன், ரங்கா அய்யர் ஆகியோரின் மசோதாக்களுக்கு ஆதரவளிக்குமாறு காந்தி அம்பேத்கரிடம் கேட்டார். சுப்பராயன் முன்மொழிந்துள்ள மசோதாவிற்கு, ஆதரவளிக்க முடியாது என்று திட்டவட்டமாக அம்பேத்கார் மறுத்தார். ஏனெனில் அம்மசோதாவில் தீண்டாமை ஒரு பாவம் (குற்றம்) என்று கண்டிக்கப்படவில்லை. மேலும் கோயில் நுழைவைக் கருத்துக் கணிப்பு ஆதரித்தால் மட்டுமே தீண்டப்படாதவர்களுக்குக் கோயில் திறந்து விடப்படும் என்று அம்மசோதா கூறுகிறது. ஆனால் கோயிலில் உள்ள கடவுளைத் தொழுகின்ற உரிமையைப் பற்றி அதில் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்ற காரணங்களை அம்பேத்கர் எடுத்து விளக்கினார்.....

அம்பேத்கா காந்தியை நோக்கி முக்கியமானதொரு வினாவை முன் வைத்திருந்தார். அது இதுதான்: "நான் இப்பொழுது கோயில் நுழைவை ஏற்றுக்கொண்டு, அத்துடன் நால்வருணமும் சாதி முறையும் ஒழிய வேண்டும் என்று போராடினால் - காந்தி அதில் எந்தப் பக்கம் நிற்பார்? அவர் எனக்கு எதிரணியில் இருப்பாரானால், நான் இப்போது, அவர் அணியில் இருக்க இயலாது'.....

அம்பேத்கரின் கேள்விக்குப் பதிலளித்துக் காந்தி ஓர் அறிக்கையை வெளியிட்டார். "இந்து மதத்தில் பிறந்த காரணத்தால் மட்டுமே நான் ஒரு இந்துவாக இருக்கவில்லை. அதை நான் விரும்பித் தேர்ந்தெடுத்து நம்புகின்றவன் என்பதால் நான் ஓர் இந்து. என் கருதுகோளின்படி இந்து மதத்தில் உயர்வு தாழ்வு கிடையாது. வருணாசிரமத்தையே எதிர்த்துப் போராட வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் விரும்புகின்ற போது நான் அவருடைய அணியில் இருக்க முடியாது. ஏனெனில் இந்து மதத்தின் பிரிக்க முடியாத கூறு வருணாசிரமம் என்று நம்புபவன் நான்" என்பதே காந்தியின் கூற்றாகும்.....

காழ்ப்பேறிப்போன சனாதனிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. ஆனால் அரைகுறையான சமூகச் சீர்திருத்தவாதிகளும் கூட ரங்கா அய்யரின் கோயில் நுழைவு மசோதாவை எதிர்த்தனர். இப்பிரச்சனையை மசோதாவில் கண்டுள்ளபடி கருத்துக் கணிப்பின் மூலம் தீர்மானிக்கக்கூடாது என்று கூறினார்கள். சட்டம் மதம் தொடர்பானவற்றில் அரசு தலையிட இடந்தரக் கூடாது என்றனர். ரங்கா அய்யரின் மசோதாவைத் திரும்பப் பெற வேண்டும் என்று பண்டித மாளவியா மிகுந்த சினத்துடன் காந்திக்கு ஒரு தந்தி அனுப்பினார். கோயில் நிர்வாகத்தில் மறைமுகமாகக் கூட அரசு தலையிடுவது என்ற கொள்கையை எதிர்ப்பதாகவும், பம்பாயில் அளித்த உறுதிமொழிக்கு ஏற்ப இந்த 'மசோதா இருக்க வேண்டிய தேவையில்லை என்றும் அத்தந்தியில் மாளவியா குறிப்பிட்டிருந்தார்.....

இம்மசோதா சில மாதங்கள் இழுத்தடிக்கப்பட்டு இறுதியில் கைவிடப்பட்டது.....

(இக்குறிப்புகள் தனஞ்செய் கீர் அவர்கள் எழுதிய "டாக்டர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு" எனும் நூலிலிருந்து தொகுத்து வெளியிடப்படுகின்றன. அம்பேத்கரிடம் நேரடியாகப் பேட்டி எடுத்தும், அய்யங்களை தெளிவுபடுத்திக் கொண்டும் தான் இந்நூலை அவர் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.)

ஆதாரம்: "டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு" - ஆங்கில மூலம்: தனஞ்செய் கீர், தமிழாக்கம்: ம. முகிலன்

வெளியீடு: மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி, 5, லால்பேகம் தெரு, சென்னை - 600 005. விலை: ரூ. 2-40.

## அசுரகானம்: போலிகள் குறித்த எச்சரிக்கை!

பார்ப்பன மதவெறிக்கு எதிராக ம.க.இ.க. வெளியிட்டுள்ள 'அசுரகானம்' பாடல் ஒலிப்பேழை பெரும் வரவேற்புடன் விற்பனையாவது நீங்கள் அறிந்ததே. ஒலிப்பேழை தேவைப்படுவோர் எம்மை அணுகுமாறும், பிரதி எடுப்பது எமக்கு நட்டத்தை ஏற்படுத்தும் என்றும் அந்த ஒலிப்பேழையிலேயே அறிவித்திருந்தோம்.

ஆனால் அட்டை உட்பட அச்சிட்டு ரூ. 29 விலையில் ஒலிப்பேழைகள் சில கடைகளில் விற்பனையாகின்றன. "மெகில் காசெட்ஸ், பெரிய மேடு, சென்னை" என்ற நிறுவனம் வெளியிட்ட காசெட் என்று அதில் அச்சிடப்பட்டுள்ளது. இதில் கண்டுள்ள முகவரி பொய்யானது என்பதை சொல்லத் தேவையில்லை.

வாசகர்கள் இந்த போலி காசெட்டைப் புறக்கணிக்கக் கோருகிறோம். இந்த மோசடிப் பேர்வழிகளைப் பற்றித் தகவல் கிடைத்தால் தெரிவிக்கக் கோருகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# ஃபிலார்மோனிக்கிலிருந்து பண்ணைப்புரம் வரை

திருச்சி-பெல் (BHEL) அக்கிரகாரத்தை சேர்ந்த குழுவொன்று பாலே நடன நிகழ்ச்சிக்கு சிம்பனி இசைத்துணுக்குகளை சேகரித்துத் தொகுக்க (திருட) ஒரு பாடல் பதிவுக் கூடத்திற்கு வந்தது. ஆங்கிலப் படங்களின் சிம்பனி இசை ஒலிக்கத் தொடங்கியவுடனே ஒரு பிராணி வாய் திறந்தது. "ஆகா... என்ன இமாஜினேஷன்! (கற்பனை). என்னமோ இளையராஜா இளையராஜாங்கறாளே. அவனால இப்படி யோசிக்க முடியுமா?"

தங்களுக்குப் புதியதொரு இசை மேதை கிடைத்துவிட்டானென மகிழ்கிறது லண்டன் பிலார் மோனிகாகுழு. "உலகத்தில் சொல்ல வேண்டியதை யெல்லாம் 3000 வருடங்களுக்கு முன்பே கங்கைக் கரையிலும் காவிரிக்கரையிலும் சொல்லி முடித்துவிட்டதாக மமதை கொண்டிருக்கும் அரிசி உணவை உட்கொள்ளும் பிராணிகளோ" (புதுமைப்பித்தன்) சங்கடத்தில் நெளிகின்றன.

இளையராஜாவின் சிம்பனி பற்றி எழுத வேண்டும்; ஆனால் எழுதக்கூடாது. இதை சனாதனிகள் செய்து விட்டார்கள் எழுத வேண்டியதை எழுதாமல் இருட்டடிப்பு செய்தது மூலம்.

ர்ராக் என்றால் என்ன? ராப் என்றால் என்ன? மைக்கேல் ஜான்சன் கொண்டு வரும் இசைக் கருவிகளின் மொத்த எடை என்ன? பாபாசெகல் வெற்றியின் ரகசியம் என்ன? - என்று கூவத்தில் முக்குளித்து முத்தெடுக்கும் பார்ப்பனப் பத்திரிக்கைகள், சிம்பனி என்றால் என்ன, இளையராஜாவின் சாதனையின் பரிமாணம் என்ன என்ற கேள்விகளை மட்டும் எழுப்பிப் பரிசீலிக்கவில்லை. இந்த மவுனத்திற்குக் காரணம் அழுக்காறு, அச்சம்.

அவாள், ஆசார, நியமங்களை மீறி கடல் கடந்தார்கள்; ஆங்கிலக்கல்வி கற்றார்கள்; குடுமியை மறைத்து டர்பன் கட்டினார்கள்; கோட்டு, சூட்டு போட்டார்கள் வெள்ளைக்காரியைக் கூத்தியாளாக வைத்து குடித்தனம் நடத்தினார்கள். எல்லாம் சரிதான், ஒரு சிம்பனி இசை அமைக்க முடியவில்லையே ஏன்? செம்மங்குடியிடமும், பாலமுரளியிடமும் 'நீங்கள் ஏன் இதுவரை சிம்பனி அமைக்கவில்லை' என்று பேட்டி எடுத்து இருக்கலாமே. 'சரிகமபதநி'க்குள் சகலமும் அடக்கம் என்கிறீர்களே சிம்பனி அதற்குள் அடங்குமா? அடங்காதா? "சிவ பெருமான் அருளிய இசையில் சிம்பனி உண்டா" என்று ஆய்வுக் கட்டுரை எழுதியிருக்கலாமே. இவை எதையும் மேற்படி பத்திரிக்கைகள் செய்யவில்லை. தங்கள் சங்கீத கலாநிதிகளுக்கும் சிம்பனிக்கும் காததூரம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஏனென்றால் இசை இதயத்தின் மொழி; ஆன்மாவின் கவிதை. சனாதனிகளுடைய ஆன்மாவின் மொழியோ அக்கிரகாரத்தைத் தாண்டியதில்லை. இசையை மட்டுமல்ல, இந்தியச் சமூகத்தையே எந்தத் துறையிலும் வளரவிடாமல் தடுப்பது இந்த பார்ப்பன இந்துப் பாரம்பரியம்தான். இந்த உண்மையை அம்பேத்கார், துணிந்து வெளியிட்ட போது அதையும் இருட்டடிப்பு செய்தார்கள். அன்று அம்பேத்காருக்குச் செய்ததைத்தான் இன்று இளையராஜாவுக்குச் செய்கிறார்கள். அதனால் தான் உயிர் வாழும் பிணமான சங்கராச்சாரி முன்னால் மணிகணக்கில் மண்டியிட்டுக்கிடக்கும் தொலைக்காட்சி காமிரா இளையராஜாவை ஏறெடுத்தும் பார்க்க மறுக்கிறது.

ஒருவேளை "இசை முழுவதுமே சிம்பனி உட்பட தியாகப்பிரும்மத்துக்குள் அடக்கம்" என்று இளையராஜா சரணடைந்து இருந்தால் அவாள், ஆசீர்வதித்திருக்கக் கூடும். மாறாக, ஹேய்டன், பாக், மொசார்ட், பீத்தோவன் ஆகியோரின் வரிசையில் தியாகய்யரையும் சேர்த்தார் இளையராஜா. அப்படிச் சேர்த்தது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. (தியாகய்யரைப் போய் அம்மேதைகளுடன் சேர்த்தது நமக்கும்தான் பொறுக்கவில்லை)

அவர்களைப் பொறுத்தவரை 'கர்நாடக இசையென்னும் மந்திரச் சிமிழுக்குள், உலகமே அடக்கம்'. 'சரஸ்வதி மஹாலின் சமஸ்கிருத ஓலைச்சுவடியைத் திருடிச் சென்றுதான் வெள்ளைக்காரனே ராக்கெட் விட்டான்'




சங்கராபரணம், தில்லானா மோகனாம்மாள் என்று டஜன் கணக்கில் படமெடுத்து, அவற்றில் இரண்டு மேற்கத்திய இசைத் துணுக்குகளை இசைத்துக் காட்டி எல்லாம் எமக்குள் அடக்கமென்று அற்பத்தனமாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். அல்லது மேற்கத்திய இசையை விபசாரத்திற்கு இணையாக வைத்து கொச்சைப் படுத்தினார்கள். இதையெல்லாம் நடுவீதியில் போட்டு உடைத்தார் இளையராஜா. அந்த ஆத்திரம்தான் இந்த மகா மவுனத்திற்கு காரணம்.

மக்கள் எல்லா அறிவையும் பெற உரிமை படைத்தவர்கள்; இசைத் துறையிலும் மக்களின் பாமரத்தனத்தை அகற்ற வேண்டும். அதைச் செய்யாமல் மக்களின் அறியாமை குறித்து வருந்திப் பயனில்லை. ஆனால் மெல்ல மெல்ல அறிவொளி பெறத் தொடங்கும் மக்களை முட்டாள்களாகவே வைத்திருப்பது எப்படி என்று கவலைப்படுகிறார்கள் சனாதனிகள். இல்லையென்றால் பார்ப்பனர் களிலேயே நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேருக்கு பரிச்சயமில்லாத கர்நாடக இசையைப் பற்றி பக்கம் பக்கமாக விமர்மனம் எழுதுபவர்கள் சிம்பனியை அறிமுகப்படுத்தி ஏன் எழுதக் கூடாது?

சிம்பனி இசை வடிவம் ஐரோப்பிய பாரம்பரியம். 200 ஆண்டு பாரம்பரியம் இருந்தும் இந்த இசையை ரசிக்கத் தெரிந்தவர்கள் அங்கேயே குறைவு. இசை அமைக்கத் தெரிந்தவர்களோ வெகுகுறைவு. இது ஆசியர்களுக்கு, இந்தியருக்கு, தமிழருக்கு வெகுதூரம்; தாழ்த்தப்பட்டவர்களுக்கோ வெகு வெகு தூரம்.

உலகளவில் விஞ்ஞானிகளோ, ஓவியர்களோ, திரைப்பட இயக்குநர்களோ தத்தம் துறை பற்றி ஒன்றாகக் கூடி விவாதித்து விட முடியும்; ஆனால், இசைத்துறை அப்படியல்ல. இசை விவரணைக்கு அடங்காதது. உணர்ச்சிச் செறிவானது வேறு எந்த வடிவத்திலும் சொல்ல முடியாததை இசை சொல்கிறது. மங்கலான மேக வலைப் பின்னல்களாக நம்மைச் சுற்றிக் கவியும் இசை மாயத் தோற்றமல்ல; உண்மை. சுலபமாக உணர்ந்து மற்றவர்க்கும் எடுத்துச் சொல்ல இசை கணிதமல்ல. விஞ்ஞானங்களில் ஆகத் துல்லியமானது கணிதம்; கலைகளில் ஆக சூக்குமமானது இசை.

மார்க்சிய இசையறிஞர் ஐஸ்லர் சொல்வது போல ஐன்ஸ்டினின் "ஆற்றல் பற்றிய விதி"யைக்கூட ஜனரஞ்சமாக விளக்கிவிடலாம். ஆனால் பீத்தோவனின் ஆக்கத்தை அவ்வாறு எளிதாக விளக்கிவிட முடியாது.

இத்தகையதொரு துறையில்தான் இளையராஜா சாதனை படைத்திருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

பாக், மொசார்ட், பீத்தோவனை ரசிக்கத் தெரிந்தவர்களெல்லாம் புதிதாக சிம்பனியைப் படைத்துவிட முடியாது. அதற்குப் பயிற்சியும், ஆற்றலும் மட்டுமல்ல, மன எழுச்சியும் வேண்டும். அது கர்நாடக இசை 'மேதை'களிடம் கிடையாது. செக்குமாடுகள் மான்களாக முடியாது. கர்நாடக இசையில் செய்வதாகச் சொல்லி கொள்ளப்படும் புதுமுயற்சிகள் கூட வெறும் கழைக்கூத்துகளே.

இன்னொருபுறம் அவர் பாவலருடன் இசைக் குழுவிலிருந்தார். இசையுடனேயே வளர்ந்தார். இன்று சிம்பனி அமைத்துவிட்டார் என்று கூறுவது பாமரத்தனமானதும் அவரது கடும் முயற்சியைக் குறைத்து மதிப்பிடுவதுமாகும்.

இசைபற்றிய நமது அறிவை, ரசனையை விரிவாக்கிக் கொள்ளும் போது தான் நமக்கு மறுக்கப்பட்ட அறிவின் பரிமாணம் புரியும். இல்லையேல் நாளை ராஜாவின் சிம்பனி வெளிவந்து அதை உலகமே ரசிக்கும் போது நாம் ரசிக்க முடியாது. நம் மூர் ஆள் போட்ட சிம்பனியை நம் காதிலேயே நுழையவிடாமல் இசை மடமை நம் காதை அடைத்துக் கொண்டிருக்கும்.

திரை இசை இல்லாமல் தனியான தொரு மேதமையிலிருந்து ஊற்றெடுத்து சிம்பனி வந்து விடவில்லை. இதை இளையராஜாவே கூறுகிறார். நமக்குத் தெரிந்த இளையராஜா சினிமா இசை அமைப்பாளர் தான். பல படங்களில் அவரது பின்னணி இசையைக் கேட்கும்போது காட்சியைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொள்ளத் தோன்றுகிறது. பாடல் இசை அமைப்புக்களைக் கேட்கும்போது அந்தப்படத்தைப் பார்த்துவிடக்கூடாது என்ற உணர்வேற்படுகிறது. ஒரு சில இயக்குனர்களின் படங்களைத்தவிர மற்ற எல்லாவற்றுக்கும் இது பொருந்தும். அவரது இசை பிரும்மாண்டமான வண்ண ஓவியமாக விரிகிறது என்றால் திரைப்படத்தின் காட்சிகள் பொங்கல் வாழ்த்து அட்டைகளை நினைவுபடுத்துகின்றன. இந்தக் கணிப்பில் ஒருவேளை சில பிழைகள் இருக்கலாம்; ஆனால் பொதுவில் இதுவே உண்மை.

அப்படி அவர் இசையில் என்னதான் இருக்கிறது? 'வீட்டுக்கு வீடு வாசப்படி வேணும், தெருக்கூத்துக்கும் பாட்டுக்கும் தாளகதி வேணும்?' - இயற்கையில் தாளகதி இருக்கிறது; மனித உடலின் உள் இயக்கத்தில் இருக்கிறது; மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள உறவில் இருக்கிறது. மனித உணர்ச்சிகளுடன் ஒட்டிப்பிறந்தும் அதன் ஒரு வெளிப்பாடும் தாளம். 'காட்டுவழி போற புள்ளே கவலைப்படாதே' போன்ற ராஜாவின் பழைய பாடல்களிலும், 'பண்ணைப்புற ராசாவே, கட்டின மெட்டிது லேசா', 'நட்டுவச்ச ரோசாச்செடி ஆமா, ஆமா' போன்ற சமீபத்திய பாடல்களிலும் விதவிதமான தாளகதிகள் வருகின்றன. பறையின் தாளஒலியைக் கேட்டுக் கொண்டிருக்கும்போதே, இமைக்கும் நேரத்தில் ஆப்பிரிக்கப்பழங்குடி மக்களின் ஆட்டம் தாளகதியாகக் காதில் பாய்கிறது. வெகு இயல்பாக ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தாவிச் செல்கிறது.

ஆனால், செவ்வியல் (CLASSICAL) இசை உயர்ந்தது, நாட்டுப்புற இசை தாழ்ந்தது என்ற திமிர்த்தனம் கொண்ட சனாதனிகள் இந்த 'அநீதி' கண்டு கொதிக்கிறார்கள். 'குனித்த புருவமும்' வேகம் குறைந்த கதியில் தொடங்கி, 'ராக்கம்மா கையத்தட்டு' என்ற வரிகளின்போது துரிதகதியில் 'டப்பாங்குத்து' தாளத்துக்கு தேவாரத்தை இழுத்துச் சென்றிருப்பதை அவர்களால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? காட்சியில் தேவாரத்திடம் டப்பாங்குத்து மனதைப் பறிகொடுப்பது வேறு விஷயம்.

ஆம்! மேட்டுக்குடி வர்க்க வாழ்க்கை இயக்கத்தின் கதி யும், உழைக்கும் மக்களின் வாழ்க்கை இயக்கத்தின் கதியும் வேறு. இயக்குனர் பாலசந்தர் சொல்தைக் கேட்டுக் கொண்டு, தியாகய்யரின் கீர்த்தனைகளை தமிழாக்கி சேரிக்கு சேரி ஒலிபரப்பினாலும் சத்தம்தான் சேரிக்கு சேருமேயொழிய சரக்கு சேரிக்கு சேரவே சேராது.

உட்கார்ந்து தின்பவனின் நிதானம் உழைப்பவர்கள் வரழ்க்கையில் இருக்காது. அவர்களது இசையின் தாளத்திலும் இருக்காது. ஒன்று மற்றொன்றுக்கு உறுத்தத்தான் செய்யும். அதேபோல, மேற்கத்திய 'ராக்' போன்ற இசை வடிவங்களின் வெறி கொண்ட தாளம் ஏகாதிபத்தியத்தின் வெறித்தனம் மற்றும் அராஜகத்தின் வெளிப்பாடுதான். நமக்குப் பழக்கமான, நமது வாழ்க்கைக்கு நெருக்கமான தாளகதியில் காலூன்ற வைத்து இசை உலகத்தை நமக்குச் சுற்றிக்காட்டுகிறார் ராஜா. தற்போது அமைத்துள்ள சிம்பனி பற்றி கருத்து கூறும்போது மைக்கேல் டவுன் எண்ட் (இவர் ராஜாவின் சிம்பனிப் பதிவு இயக்குனர்) அவற்றில் இளையராஜா பயன்படுத்தியுள்ள தாள வகைகளையே குறிப்பிட்டுச் சொல்லுகின்றார்.

அப்படியானால், தாளம்தான், அவரது தொழில் ரகசியமா? 'அன்னக்கிளி' வந்தபோது அப்படித்தான் பலர் சொன்னார்கள். "இது தவுல் கம்பெனி, ரொம்பநாள் நிக்காது" என்றார்கள். தமிழ்த்திரை இசைக்கு வடக்கே இருந்து ஷெனாய் வந்தது; ஐரோப்பாவிலிருந்து பியானோ, அக்கார்டியன் வந்தது. ஆப்பிரிக்காவிலிருந்து டிரம்ஸ் வந்தது; ஆனால் உள்ளூர் (மன்னிக்கவும் ஊர் அல்ல சேரி) தப்பும் பம்பையும் உறுமியும் மட்டும் வரவில்லை. அதற்கு 'உரியவர்'தான் அவற்றை எடுத்து வந்து தமிழகத்தை ஆக்கிரமித்திருந்த இந்தி மயக்கம் என்னும் பேயை விரட்டினார். இதற்கு முன்னாலும் திருவிழாவில் தலைகாட்டுவதுபோல அந்த இசைக்கருவிகள் தமிழ்ச்சினிமாவிலும் தலைகாட்டியிருக்கலாம். ஆனால் அந்தத்தவில் வேறு, இந்த மேளம் வேறு, அந்த நாதஸ்வரம் வேறு, இந்த நாயனம் வேறு; இரண்டுக்கும் கொடுக்கப்பட்ட மரியாதைகளும் வேறு வேறுதான்.

பலர் விரும்பியதைப்போல அவர் வெறும் 'தவுல் கம்பெனி'யாக மட்டும் இருந்திருந்தால் 750 படங்களுக்கு இசை அமைத்திருக்க முடியாது. 'அன்னக்கிளி'க்கு முன்பு ஜி.கே.வெங்கடேஷ் குழுவில் இசைக்கலைஞனாகப் பணியாற்றிய போதே பல இசைத் துணுக்குகளை எழுதி சக கலைஞர்களுடன் சோதனை செய்து பார்த்திருக்கிறார்.

## ஹேய்டன் - மோசார்ட் - பீத்தோவன்

மத்தியகால ஐரோப்பிய இசை மரபில் வடிவ - உள்ளடக்கங்களில் மிகப்பெரிய மாற்றத்தையும், வீச்சையும் கொண்டு வந்தவர்கள் வியன்னா இசைக்கலைஞர்கள், அவர்களில் ஹேய்டன், மோசார்ட், பீத்தோவன் முக்கியமானவர்கள்.

இவர்கள் சோனடா, சிம்பனி வடிவங்களில் மாபெரும் சித்திரங்களைத் தீட்டினார்கள். சோனடா வடிவம் மூன்று அல்லது நான்கு இசையோட்டங்கள் கொண்டவை. முதல் ஓட்டம் எக்ஸ்போசிஷன் - அறிமுகம்; இரண்டாவது - டெவலப்மெண்ட் - வளர்ச்சி; முதல் பகுதி கருக்கள் இரண்டாவது பகுதி வழியாக வளர்ந்து மூன்றாவது பகுதியான ரீகேபிச்சுலேசன் என்ற நினைவு கூறுதலில் புத்தம் புதிதாக மாறுகிறது. சிம்பனி வடிவம் சோனடா போன்றதே — ஆனால் விரிவாக, பல இசைக்கருவிகளுக்காக எழுதப்படுவது. மேலே சோனடாவில் சொன்ன முதல் இரண்டு இசையோட்டங்களோடு, மூன்றாவதாக லேசான பாணியில் மினுவெட் - செர்கோ பகுதியும், நான்காவதாக முரண்பாடுகள் தீர்க்கப்படும் ஃபைனேல் என்ற முடிவுரைப் பகுதியும் சேர்ந்ததே சிம்பனியாகும்.

சர்ச்சு இசை மரபை முதலில் உடைத்து முதலடி வைத்து வழிகாட்டியவர் ஹேய்டன்; தனது 6-வது வயதில் இசைக்கத் தொடங்கி, 35 ஆண்டு வாழ்க்கையில் மகிழ்ச்சி, எழில், உருகும் சோகம், வெற்றி - வீரம் - பேரறிவு என்று விதவிதமான உணர்ச்சிகளை அள்ளித் தந்து வரலாறு படைத்தவர் மோசார்ட்; சமூகப்புயலின் இடையே பிறப்பெடுத்த இசைப்புயல பீத்தோவன் - நெப்போலியனை வரவேற்று காணிக்கை செலுத்தி 'எராய்கா' (EROCA - வீரஎழுச்சி) என்ற மூன்றாம் சிம்பனி படைத்தார். ஆனால் பேரரசனாக அவன் முடிசூட்டிக் கொண்டதும், 'மனிதகுல எதிரிக்கு நான் எதிரி' என்று கூறி பீத்தோவன் அந்த காணிக்கையைக் கிழித்தெறிந்தார்; சமூகம் முன்னேறும் இயங்கியலை அவர் தனது 9-வது சிம்பனியில் கொண்டு வந்தார்; ஷில்லரின் 'மகிழ்ச்சிக்கொரு பாட்டு' என்ற பாடலுக்கு சிம்பனி எழுதி அதில் கருவிகளோடு, மனித கூட்டுக் குரலையும் இணைத்ததன் மூலம் எதிர்காலம் பாட்டாளிகளுக்கானது என்ற செய்தியை இசையால் அறிவித்தார் பீத்தோவன்.

மூவரின் பங்களிப்புகளையும் நாம் என்றும் நன்றியோடு நினைவு கூற வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

இளம் இசையமைப்பாளர் இசைவாணன் கூறுவதைப்போல ''அன்னக்கிளி முதல் வள்ளி வரை அவர் அள்ளி வழங்கியிருப்பவை விதவிதமான ஹார்மனி நெசவுகள். நாட்டுப்புற இசையோடு ஹார்மனியை இணைத்து நெய்து கொடுத்திருப்பது அன்னக்கிளியின் சிறப்பம்சம். முதல் படத்தில் அடிவைக்கும்போதே 'அடாஜியோ' என்ற குறைந்த வேகத்திலமைந்த 'அன்னக்கிளி உன்னைத் தேடுது' என்ற சோகப் பாடலை முயற்சித்தது அவரது துணிச்சலான செயல்''

துணிச்சலுக்குக் காரணம் புதிய முறைகளை சோதனை செய்து பார்ப்பதில் அவருக்கிருந்த ஆர்வம், தன்னம்பிக்கை. 'இளமை எனும் பூங்காற்று பாடியது ஓர் பாட்டு' என்ற பாடலில் திரையில் பிளாஷ் பேக்கில் கதை காட்சிகளாக நகர்ந்து செல்லும்போது அதன் பின்புலத்தில் ஓவர்ச்சர் என்னும் (ஓபரா இசை நாடக முன்னுரைப் பாணி சிம்பனிக்கு முன்னோடியானதொரு வடிவம்) இசை நகர்ந்து செல்லும்.

'நிழல்கள்' படத்தில் இந்திய இசை முறைகளை கையாண்டும், 'மூடுபனி'யில் ஏற்கனவே புழக்கத்திலுள்ள ராகங்களுக்குப் பதிலாக காட்சியின் தேவைக்கேற்ப புதிதாக 'இசைக்கரு'க்களை (Theme) உருவாக்கியும் காட்டினார். 'ராஜபார்வை'யில் இந்திய, மேற்கத்திய தாளகதிகளையும், ஹார்மனி யையும் சோதனைக் களன்களாக்கினார்.

நெசவில் டெக்ஸ்ச்சர்—இழைநயம் என்று கூறுவார்களே, அதை இசையில் காட்டுகிறது 'பூமாலையே தோள் சேரவா' என்ற பாடல். இப்பாடலில் பண்மிசைப்பண்ணாக, ஒன்றின் மீது இன்னொரு பண் உராய்வின்றி மிதந்து செல்லும் அழகைக் காணலாம். ராஜா பெரிதும் போற்றும் இசை மேதை பாக்-கை 'பண்மிசைப் பண்ணின் (Counter Point) தந்தை' என்பார்கள். தந்தைக்கேற்ற தனயன்.

பரிச்சயமற்ற சொற்றொடர்களால் ராஜாவின் இசையை விளக்கிக் கொண்டிருப்பது ஏன் என்று வாசகர்கள் வியக்கலாம். இவை இசையின் நவீன வடிவங்கள், ஆழமானமுறைகள்.

மனோடனி என்பது இசையின் புராதன வடிவம். கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவை இந்த ரகம்தான். ஸ,ரி, க,ம,ப,நி என்ற ஏழு சுரங்களில் கர்நாடக இசையில் ஒரு தருணத்தில் ஒன்று மட்டுமே ஒலிக்கும். ஒன்றுக்கொன்று இணையாகவோ, ஒன்றின் மீது ஒன்று தவழ்ந்தோ இந்தச் சுரங்கள் வராது. ஒன்றையொன்று பின் தொடர மட்டுமே செய்யும். இந்த இசையை நீண்ட நேரம் கேட்கும்போது அலுப்பு ஏற்படக் காரணம் இதுதான். 'மனோடனஸ்' என்ற ஆங்கில சொல்லுக்கு 'சலிப்பூட்டுவது' என்பதுதானே பொருள்!

மோனோடோனுக்குப்பின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்கள் ஒரே நேரத்தில் இசைக்கப்படும் பாலிபோனி (Polyphony) பிறந்தது.

ஹார்மனி, இவையிரண்டிலிருந்தும் வேறுபட்டது. ஒரு பண், சுர இயைபுகளோடும் (Chords) வேறு உதிரி ஒலிகளுடனும், (இசைக்கருவிகளுடனும்) இசைய நெய்யப்படுவதே ஹார்மனி. தற்போது ராஜா அமைத்துள்ள சிம்பனியில் 80-க்கும் மேற்பட்ட இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்கிறார்கள்.

நாம் பெருமிதம் கொள்வது கருவிகளின் எண்ணிக்கையினால் அல்ல; அவை பயன்படுத்தப்பட்டுள்ள - சிம்பனி - இசை வடிவம் காரணமாகத்தான்.

மேலும் 10 இசைக் கருவிகளைக் கூட்டி 90 ஆக்கி 'நம்மூர்' கர்நாடக சங்கீத வித்வானின் கையில் கொடுத்தால் என்ன நடக்கும்? மதுரை சோமு கச்சேரியை எட்டால் பெருக்கினால் என்ன விடை கிடைக்குமோ அதுதான் கிடைக்கும். 'எந்தரோ மகானுபாவுலு' என்று செம்மங்குடி முதல் குரல் கொடுத்தால் 90 கருவிகளும் பள்ளிக்கூட கடவுள் வாழ்த்து போல அதையே திரும்பச் சொல்லும். அவ்வளவுதான். அதாவது, 'அறுக்கமாட்டாதவன் இடுப்பில் 58 கருக்கரிவாள்'.

கர்நாடக இசையைக் கேவலப்படுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை; (இனி மேல் நாம் வந்து கேவலப்படுத்த அதில் ஏதும் மிச்சமில்லை என்பது வேறு விவகாரம்) அதன் வரம்பு அவ்வளவுதான்.

கர்நாடக இசையில் பாடகன்தான் (அல்லது முக்கிய கருவி) சர்வாதிகாரி. மற்றவை பக்க வாத்தியங்கள் மட்டுமே. அவற்றுக்கு 'தனி உரிமைகள்' கிடையாது. ஆனால் ஹார்மனி ததும்பும் சிம்பனியில் எத்தனை கருவிகள் உண்டோ அத்தனைக்கும் தனிப்பங்கும் பாத்திரமும் உண்டு. அதனால்தான் சிம்பனி இசைப்பதிவு முடிந்தபின் அதில் பங்கேற்ற ஒரு கலைஞர் தனது கருவிக்கு வாய்ப்பு கொடுத்ததற்காக ராஜாவிடம் நெகிழ்ச்சியுடன் நன்றி சொல்லிருக்கிறார். பக்கவாத்தியக்காரரை முக்கியப் பாடகர் கச்சேரியினூடாகவே கவிழ்ப்பதும், மிரட்டுவதுமே கர்நாடக இசை மரபு.

பத்து வண்ணங்களில் பட்டு நூலைக் கட்டுக்கட்டாகக் கொண்டுவந்து கொடுத்தால் கர்நாடக இசை அதை தாம்புக்கயிறாக்கும்; நூல் மிச்சமிருந்தால் இன்னும் தடியாக முறுக்கித் தேர்வடமாக்கும்.

ஆனால் சிம்பனியோ அதைத் தறியில் கொடுத்து நெஞ்சை அள்ளும் வண்ணத்தில் புடவையாக நெய்து காட்டும். பார்டராக, குறுக்குக் கோடுகளாக, புட்டாக்களாக, அள்ளி இரைக்கப்பட்ட புள்ளிகளாக... ஒவ்வொரு வண்ணமும் ஒரு தினுசு (Design) காட்டும். இந்தத் தினுசுகள்தான் சிம்பனியின் கருக்கள் (Theme). மொத்தப் புடவையும் தோற்றுவிக்கும் அழகியல் உணர்வுதான் ஒரு குறிப்பிட்ட சிம்பனி சொல்லும் செய்தி.

கர்நாடக இசையில் பாடகன் எஞ்சின்; பக்கவாத்தியங்கள் அவன்பின்னே பிணைக்கப்பட்ட பெட்டிகள். சிம்பனியின் செய்தி என்பது சாலை விதி. அதை மீறாமல் சீறியும், பறந்தும், சுணங்கியும், நிதானமாகவும் செல்லும் பலவகை வாகனங்கள்தான் சிம்பனியின் உட்கூறுகளான இசைக்கருவிகள்.

இப்போது ராஜாவின் 'நட்டுவச்ச ரோசாச்செடி' 'பூமாலையே' போன்ற பல பாடல்களை மீண்டும் கேட்டுப் பாருங்கள். நெஞ்சை அள்ளும் விதவிதமான வண்ணங்கள் உங்கள் மனக்கண்ணில் விரியும்.

இந்த 'வித்தை' நமது சங்கீத மும்மூர்த்திகளில் முதல்வரான தியாகய்யருக்குப் பிடிபடாமல் 'எவனோ ஒரு' பீத்தோவனுக்கும் மொசார்ட்டுக்கும் கைவந்தது எப்படி? சிம்பனி திருவையாற்று காவிரிக்கரையில் அவதரிக்காமல் வியன்னாவில் பிறந்தது

இளையராஜா ஓய்வில்லாது பயிற்சி எடுக்கும் ஒரு களம்: தமிழ்ச் சினிமா



படிப்பகம்

www.padippakam.com

ஏன்? சங்கீத சிரோன்மணிகளைக் குடையும் கேள்வி இது.

ஏனென்றால் இரண்டு காதும் கேட்காத பீத்தோவன் ஐரோப்பாவின் உள்ளக் குமுறலை தன் இதயத்தால் கேட்டார்; தியாகய்யரின் காதில் காலை நேர கோயில்மணி சத்தமும், மதியத்து ஒற்றைக்காக்கை அழைப்பும், இரவில் காவிரிக்கரை தவளைகளின் இரைச்சலுமே விழுந்தது.

எழுச்சிபெறும் தொழிலாளி வர்க்கத்திற்கே எதிர்காலம் என்று முன்னறிந்த பீத்தோவன் 'தொழிலாளர் படையே வருக' என்று தனது 9-வது சிம்பனியையே அதற்கு வரவேற்பிசையாக்கினார். 'எச்சரிக்ககா ரா... ரா... ஹே ராமச்சந்திரா' (பார்த்து வாப்பா ராமா) என்று மோட்டுவளையைப் பார்த்துக் கதறிக் கொண்டிருந்தார், தியாகய்யர்.

முடியரசர்களின் தலையை அப்புறப்படுத்திவிட்டு, குடியரசு அமைக்கும் பாதையில் ஐரோப்பா நடைபோட்டுக் கொண்டிருந்தது; மணிமுடியை பிரிட்டிஷ்காரனிடம் போக்கியத்துக்கு விட்டுவிட்டு, அவனுடைய எச்சில் காசில் வாழ்ந்த 'சரபோஜி'க்கள் தாங்களும் மகாராஜாக்கள் என்று இங்கே கம்பீரமாக நடமாடிக் கொண்டிருந்தனர் (சரபோஜி—தியாகய்யர் காலத்து தஞ்சை மன்னன்)

பீத்தோவனின் மூளையில் மின்னலாக வெட்டி பின்னர் பற்றிக் கொண்ட தீப்பிழம்பல்ல சிம்பனி; மொசார்ட்டுக்கு கர்த்தர் அதை அருளிச் செய்யவுமில்லை. மன்னனுக்கும் மக்களுக்கும் அன்று நடந்த யுத்தத்தில் அவர்கள் மக்கள் பக்கம் நின்றார்கள்; ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுத்த ஃப்ரீமேசோனியச் சிந்தனைகளை ஆதரிக்கிறார்கள்; அதைப் பிரகடனமும் செய்தார்கள்.

''சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்; இயற்கை - பகுத்தறிவு - பேரறிவு'' என்ற தங்கள் நம்பிக்கையை இசையில் வடித்தார்கள். 'அடிமைத்தனம் - வருணதருமம் - இந்துராஷ்டிரம்; பிரம்மம் - பரப்பிரம்மம் - அத்வைதம்'' என்று நாடகமாடியவர்களிடமிருந்தும், ஆடிக் கொண்டிருப்பவர்களின் இதயத்திலிருந்தும் சிம்பனி ஊற்றெடுக்க முடியாது. எந்த 'பெரியவாளும்' இதற்கு ஆசீர்வதிக்கவும் முடியாது.

இதுதான் காரணம்; இதுவே உண்மை. 'வேதகணிதம்' பற்றிப் பிதற்றிக் கொண்டிருக்கும் இந்துராஷ்டிர பயித்தியங்கள் 'வேதகாலத்திலேயே சிம்பனி இருந்திருக்க வேண்டும்'' என்று எங்கோயாவதொரு மூலையில் ஓலைச்சுவடிகளைக் கிளறிக் கொண்டிருக்கும் அபாயம் உண்டு.

இத்தகைய பயித்தியங்கள் கர்நாடக இசைக்கு முட்டுக்கொடுப்பதற்காகவே எடுக்கப்பட்ட 'சிந்துபைரவி' படத்தை இன்னொரு முறை தரிசித்தால் பித்து தெளியக்கூடும்.

'மகா கணபதிம்' என்று சிவகுமார் கச்சேரியை துவங்கியவுடன் காமெராமேன் காமெராவைத் தூக்கிக் கொண்டு காட்டுக்கு ஓடுகிறார்; தொலைக்காட்சியாக இருந்தால்



**ராசய்யா புத்தம் புதிதாகச் சிம்பனி இசை அமைக்கும் இடம்: லண்டன் ராயல் ஃபில்ஹார்மோனிக் ஆர்க்கெஸ்ட்ரா:**

பாடகரின் முகத்தையே ஒரு மணிநேரம் காட்டிக் கொண்டிருக்கலாம். இது சினிமாவாயிற்றே. காமெரா கடல், மலை, ஆறு, பிள்ளையார் கோயில் மீண்டும் ஆறு, மலை, கடல், பிள்ளையார் கோயில் என்று திரும்ப திரும்ப காட்சிப் படிமங்களைத் தேடி அலைந்து சோர்ந்து கடைசியில் பாடகர் காலிலேயே வந்து விழுகிறது. காரணம் என்ன? இகலோகத்து மாந்தர்களுக்கும் இந்த இசை - கீர்த்தனைக்கும் எள்ளளவும் சம்பந்தம் கிடையாது.

மன்னர்கள், பிரபுக்களின் ஒற்றை ஆணைக்குரலை மீறி பல்வேறு மக்கட் பிரிவினரின் குரலும் ஒலிக்கத் தொடங்கியதன் சமூக விளைவு: புரட்சி - ஜனநாயகம். மோனோடோனின் கையிலிருந்த சவுக்கைப் பிடுங்கி எறிந்ததன் மூலம் புரட்சியானது இசைத்துறையில் ஹார்மனியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டது. சமூகத்தைப் போலவே இசையும் அடுத்த நிலைக்கு முன்னேறியது.

இப்படி 18-ம் நூற்றாண்டில் நிகழ்ந்த, இசைத்துறை முன்னேற்றம் தான் ஹார்மனி. இதன் முக்கிய அங்கமான சுருதிக்கும் ஸ்தாயிக்குமுக்குள்ள உறவை தேவதூதன் பிறப்பதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்னரே ஆராய்ந்தான் பித்தகோரஸ். (செங்கோண முக்கோணத் தேற்றம் - பிதாகரஸ்தான்) வெவ்வேறு அளவில், கம்பிகளை இழுத்துக் கட்டி ஸ்வர வரிசையை எழுப்பினான். செவியால் உணரக்கூடிய ஒலியை கணிதத்தால் அளந்தான். இசையே கணிதம் என்றான்; அவன் ஒரு தத்துவஞானி. எனவே ஒரு படி மேலே போய் 'எல்லாம் கணிதமே' என்றான். ஏறத்தாழ அதே காலகட்டத்தில் நம் 'பாரத தத்துவஞானி' கிருஷ்ண பரமாத்மா 'எல்லாம் நானே' என்று அர்ச்சுனன் தலையில் மிளகாய் அரைத்துக் கொண்டிருந்தான்.

2500 ஆண்டுகளுக்கு முன் தன் புருவத்தை நெறித்து [illegible] ஆராய்ந்து அறிவித்த அந்த மேதையின் வீரம் நம்மை சிலிர்க்கச் செய்கிறது. ஆம்! அறிவியல் துறைகளிலேயே துல்லியமான கணிதம் பேரண்டத்தின், புற உலகின் இயக்கத்தை புரிந்து கொள்ள முயல்கிறது; கலைத்துறை அனைத்திலும் சூக்குமமான இசை, மன உலகின் உணர்வுகளை புரிந்து கொள்ள முற்படுகிறது.

இசையில் கணிதம் உண்டு; ஆனால் இசையே கணிதமல்ல. தாளகதியும் ஸ்வரமும், ஸ்தாயியும் கணிதத்தால் கட்டுப்படுத்தப்படுபவை. இசையைத் தூண்டும் மன உணர்வுகளும், இசையால் தூண்டப்படும் மன உணர்வுகளும் கணிதத்திற்குக் கட்டுப்படாதவை. இதை 2500 ஆண்டுகளுக்கு முன் பித்தகோரஸ் சிந்தித்திருக்க முடியாது.

''என்ன பெரிய இளையராஜா? பீத்தோவன் காலத்தில் கம்ப்யூட்டர் கிடையாது; இளையராஜா கையில் கம்ப்யூட்டர் இருக்கிறது. சிம்பனி அமைப்பதில் என்ன கஷ்டம்?'' என்று சில மேதாவிகள் தங்கள் அறிவியல் ஞானத்தை காட்டுகிறார்கள். 'அமெரிக்காவில் 'டியூன் வங்கி'யில் ஒரு லட்சம் மெட்டுகளை கொட்டி வைத்திருக்கிறார்கள். வேண்டியவர்கள் வேண்டியதைப் பொறுக்கிக் கொள்ளலாம்' என்கிறது விகடன்.

பொறுக்குபவர்கள் தங்கள் தேவைகளுக்கும் தம்மையொத்த பொறுக்கிகளையே பொறுக்கி எடுக்கிறார்கள். மணிரத்னம், ஷங்கர் வகையறா தங்கள் அலைவரிசையில் ரகுமானைக் கண்டுபிடித்துச் சேர்த்துக் கொண்டதில் வியப்பில்லை.

ஏற்கனவே ஒரு லட்சம் மெட்டுகள் உள்ளன என்றால் 'லட்சத்து ஒன்று' என அடுத்தபடியில் கால் வைப்பவன்தான் இசையமைப்பாளன். புதிதுபுதிதாய் தன் கண் முன்னே விரியும், வாழ்க்கையை, அதன் உணர்வுகளை பிரதிபலிப்பவனே கலைஞன். 'எல்லாம் கங்கைக்கரையி

படிப்பகம்

www.padippakam.com

லேயே சொல்லியாகிவிட்டது' எனும் கூட்டம்தான் 'எல்லாம் கம்ப்யூட்டருக்குள்' இருப்பதாகவும் கூறுகிறது.

ஹார்மனியில் ஒலி உடன்பாடு, ஒலி முரண்பாடு இரண்டின் இயக்கத்தையும் ஆய்வு செய்த மாபெரும் சிம்பனி இசை ஓவியங்களைத் தீட்டிய மொசார்ட்டும், பீத்தோவனும் இசையின் இயக்கத்தைக் கணக்காக நிருபித்த பித்தகோரசையே தம் முன்னோடியாக அறிவித்தார்கள்.

ராஜாவை இருட்டடிப்பு செய்ய முயல்வோர் பித்தகோரஸின் சமகாலத்திய கிருஷ்ண பரமாத்மாவின் வாரிசுகளாக இருக்கிறார்கள்! வரலாற்றின் நகைச்சுவை தான்!

ஹார்மனி ததும்பும் இசைக்கோர்வைகள் திரையிசையில் வந்து விழ விழ ''என்ன, எல்லாம் சினிமா குப்பை தானே'' என்று அவாள் முனகிக் கொண்டனர். ஆனால் தனி இசையாக 'என்ன பெயரிட்டு அழைப்பது' (How to Name it), 'காற்றைத் தவிர வேறில்லை (Nothing but wind) - ஆகிய இரு இசைப்பேழைகள் வந்தவுடன் இசையறிஞர்கள் திரும்பிப் பார்த்தார்கள்; அவாளோ முகம் திருப்பிக் கொண்டார்கள். இப்போது 'கிராண்ட் சிம்பனி' ஒலிப்பேழையாக வருவதற்கு முன்பே 'இது கலவை இசைதான்' (Fusion) என்று 'கிசுகிசு' பரப்புகிறார்கள். 'அக்மார்க்' அய்யர்வாள் எல். சுப்பிரமணியம் போன்றோரே செய்யத்துணியாத, முடியாத ஒன்றை 'பண்ணைப்புரத்தான்' செய்வதா என்ற வக்கிரம் தவிர இது வேறென்ன?

தற்போது இளையராஜா அமைத்திருக்கும் சிம்பனி ஐந்து இசையோட்டங்களில் அமைந்த முற்றிலும் மேலை இசை முறையிலானதுதான். எனினும் இந்திய இசை மரபிலிருந்து பெற்ற தாளமுறைகள், பாணி, அலங்காரங்கள் ஆகியவை நிறைந்து காணப்படுவதாக பிலார்மோனிக் இசைக்குழுவினர் கூறுகின்றனர். அந்த சிம்பனியின் ஒலிப்பேழை வெளிவரும்போது தான் அதன் செய்தி (உள்ளடக்கம்) குறித்து நாம் அறிய இயலும்.

''சிறந்த இசைக்கு வார்த்தைகளின் துணை தேவையில்லை'' என்கிறார் ராஜா. அதாவது, தன்னளவில் முழுமை பெற்ற சுயேச்சையான கலை வடிவம்தான் இசை. மார்க்சிய இசை அறிஞரும், ஜெர்மானிய இசையமைப்பாளருமான ஐஸ்லர் ''திரைப்படத்தில் பின்னணி இசை என்பது காட்சிக்கு கனம் கூட்டுவதாக மட்டும் இருக்கக் கூடாது. காட்சியின் மீதான விமரிசனமாக இருக்க வேண்டும்'' என்கிறார்.

ஆனால், நமக்குக் கோபத்தைத் தூண்டாத காட்சியில் ராஜாவின் இசையில் கோபம் கொப்புளிக்கிறது! நமக்கு அருவெறுப்பூட்டும் காதல் காட்சிகளில் அவரது இசை கொஞ்சுகிறது! நம்மைச் சிரிக்கச் செய்யும் சோகக் காட்சிகளில் அவரது இசை கண்ணீர் விடுகிறது. நாய்க்குடைகளாய் மறைய வேண்டிய பாடல்வரிகள் இசைய முதம் பருகி ஆலமரமாய் நிலை பெறுகின்றன. ராஜாவின் இசையெனும் நறுமலர்கால் மூடப்பட்ட மலங்கள் வாழ்வு பெற்று விடுகின்றன.

நாம் காறி உமிழ்ந்துவிட்டு அரங்கை விட்டு வெளியேறும் காட்சிகளிலிருந்து 'உணர்வெழுச்சி' பெற்று அவரால் எங்ஙனம் இசையமைக்க முடிகிறது? ''நான் ஈடு பாட்டோடுதான் செய்கிறேன்'', என்கிறார் ராஜா. இது அதிர்ச்சியூட்டுகின்ற, ஆனால் நாணயமான பதில். ரே, கோடார்டு, ∴பெலினி என்று பத்திரிகைகளில் அறிவுஜீவியாக நடித்துவிட்டு, திரையில் ஜிகினா உடையில் அற்பர்களாக வாழும் வேடதாரிகளை ஒப்பிடும்போது இந்தப்பதில் நாணயமானது; அதே நேரத்தில் மசாலாக்களுக்கு ஈடுபாட்டோடு இசையமைக்கும் நபர் சிம்பனி படைக்கும் கலைஞனாக எங்ஙனம் உயர முடியும் என்பது முரண்பாடு.

''அற்பமான காட்சிகளுக்கு இவர் இவ்வளவு சிரமப்பட்டு ஏன் விரிவாக இசையமைக்கிறார்?'' என்று அதிசயிக்கிறார் ராஜாவின் நண்பர் பம்பாய் இசையமைப்பாளர் சந்த்வார்க்கர். ''நான் பரிசோதனைகள் செய்து பார்க்கிறேன்'' என்கிறார் ராஜா. அந்த முரண்பாட்டுக்கு இதுவே பதில். திரையில் ஓடும் காட்சிகளுக்கல்ல, அவை தன் மனக்கண்ணில் தோற்றுவிக்கும் காட்சிகளுக்குத்தான் அவர் இசையமைக்கிறார். காட்சியின் சிறுமை இசையால் பெருமைப்படுத்தப்படுகிறது. இசையின் பெருமை காட்சியால் சிறுமைப்படுத்தப்படுகிறது.




பாடல்களைப் பொறுத்தவரை, கதை, காட்சியமைப்பு பற்றித் தெரிந்து கொண்டு அவற்றை இசைப் படிமங்களாக்குகிறார் ராஜா. இவ்வாறு ஒலியின் கவிதை எழுதப்பட்டபின் அதன் பரிமாணத்தை எட்டிப்பிடிக்க முடியாமல் சொல்லின் கவிதை (பாடல்) தடுமாறுகிறது. இசைப்படிமங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் காட்சிப்படிமம் தோற்று விழுகிறது.

மலங்களும் குப்பைகளும் 'சாகாவரம்' பெறுவது இப்படித்தான் என்று நாம் விளங்கிக் கொள்ளலாம்; ஆனால் இவற்றுக்கு ராஜா ஏன் சாகாவரம் 'அருள' வேண்டும்? வியாபாரம் — அதுதான் பதில். அற்ப உணர்வுகளை காசாக்கும் நோக்கத்திற்காகவே படம் எடுக்கும் தயாரிப்பாளன், அவற்றின் நெடியைக் கூட்டத்தான் இளையராஜாவை அமர்த்திக் கொள்கிறானேயன்றி, ஐஸ்லர் கூறுவது போல இசை விமரிசனம் எழுதி வாங்குவதற்கு அல்ல.

இளையராஜா மட்டுமின்றி தொழில் முறைக் கலைஞர்கள் அனைவருமே சந்திக்கும் பிரச்சினை இது. எனினும் கவிதையும் ஓவியமும் பேசும் மொழி இசையைக் காட்டிலும் துல்லியமானது; அது சமூகத்தின்மீது ஏற்படுத்தும் தாக்கமும் கூர்மையானது. இசையோ சூக்குமமானது. எளிதில் பிடிக்கு அடங்காதது.

வர்த்தக ஏடுகளின் கதை, கவிதைகளின் கருத்துக்கு ஏற்ப ஓவியம் வரையும் ஓவியன் தன் சொந்தக்கருத்தைச் சொல்ல ஓவியக்காட்சி வைக்கிறான்! ராஜா சிம்பனி அமைக்கிறார்!

எனினும் இந்தக் கலை வியாபாரத்தில் ஒரு கலைஞன் செய்து கொள்ளும் சமரசத்தின் அளவு அவனுடைய நாணயத்தையும், ஆளுமையையும், 'சகிப்புத்தன்மை'யையும் அளவிடும் அளவு கோலாகிறது. ''என்சீர் விருத்தம் பாடுவதற்காக நான் சினிமாவுக்கு வரவில்லை'' என்ற வாலியின் 'பிரகடனம்'தான் இதன் பாதாளம் - ஆழம்.

அதே நேரத்தில், இந்தக் 'குப்பைகளில்' விழுந்து புரளாமல், மியூசிக் அகாதமியிலும் திருவையாற்றிலும் கச்சேரி நடத்திக் கொண்டிருந்திருப்பாரானால், சத்தியமாக ராஜா சிம்பனி அமைத்திருக்க முடியாது. ஏனெனில் சினிமா - கோணல் மாணலாக வாவது - மக்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கிறது. தூய கலையோ தந்தக் கோபுரத்திலிருந்தபடியே குப்பையை சகித்துக் கொண்டிருக்கிறது. கோடம்பாக்கம் இகலோகத்திலேயே 'போகாத ஊருக்கு' வழிகாட்டுகிறது; நுங்கம்பாக்கமோ - சங்கீத வித்வ சபை - பரலோகத்திற்கு 'இல்லாத ஊருக்கு' வழி காட்டுகிறது. ஈயத்தைப் பார்த்து பித்தளை இளிக்கக்கூடாது.

இசைதான் சூக்குமமேயொழிய இளையராஜாவின் உலகக் கண்ணோட்டம் 'பூதக் கண்ணாடி' வைத்து கண்டுபிடிக்குமளவு சூக்குமமானதல்ல; அவர் பெரிதும் விரும்புகின்ற ஐரோப்பிய இசைமேதை பாக் கைப் போலவே ராஜாவிடமும் ஆன்மீகமும் மனிதாபிமானமும் கலந்தே இருக்கிறது.

பார்ப்பன மரபுக்கெதிராக சிறுமியை வேதம் சொல்ல வைக்கிறார்; 'நான் இந்து அல்ல' என்று பிலார்மோனிக் குழுவினரிடம் கூறுகிறார்; கர்நாடக இசைக்கு கேவலம் சினிமாக்காரர்களாகிய நாங்கள் 'உயிரூட்ட' முடியுமா என்று அடிவெட்டு வெட்டுகிறார். கர்நாடக இசையின் சம்பிரதாயங்களை உடைத்து சநாதனிகளைச் சீண்டுகிறார்; கர்நாடக இசையின் வரம்புகளைக் கூறி அதன் முட்டாள்தனமான தன்னகங்காரத்தைச் சாடுகிறார்; 'கர்நாடக வித்துவான்கள் பாடும் இசையைப் போலவே நாய்கு

படிப்பகம்

www.padippakam.com

ரைப்பதும் ஒரு இசைதான்' என்று அத்வைதிகளின் மொழியிலேயே வியாக்கியானம் செய்து அவாளின் வெறுப்பைத் தேடிக் கொள்கிறார்.

புகழ்மிக்க பாடகர்களும், இசையமைப்பாளர்களும் 'இசையுலகின் சூத்திரர்களாக' அவாளிடம் கைகட்டி நிற்கும் திரையுலகில் இது அதிசயம்தான்; மேடைக் கச்சேரியொன்று நடத்தி வசிட்டர்களின் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் வாங்குவதை வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருக்கும் அடிமைத்தனத்தின் மத்தியில் இது கலகம்தான்; இதுதான் இசைத்துறையின் உன்னதமான சிம்பனி எனும் உண்மையை நோக்கி அவரை நகர்த்தியிருக்கிறது.

சிம்பனி - அது தன்னுடைய ஆன்ம விடுதலையை சூனியத்தில் தேடியலைந்த தனியொரு இதயத்திலிருந்து கசிந்த இசை வடிவமல்ல; தங்கள் கைகளைப் பிணைத்திருந்த சங்கிலிகளை நொறுக்கி அதன் மூலம் ஆன்ம விடுதலையை சாதிக்க முயன்ற மனிதகுலத்தின் இதயத்திலிருந்து பீறிட்டுக் கிளம்பிய உணர்ச்சி வெள்ளம். அது இறைவனின் படைப்பாற்றலின் முன் வியந்து மண்டியிட்ட மனிதனின் அவலமல்ல; தன்னுடைய படைப்பாற்றலை அறிவித்த மனித குலத்தின் கம்பீரம்.

மேலைநாட்டின் புரட்சிகர இசைமரபுடன் நமது பறையும், குழலும் இணைந்து உருவாக இருக்கும் ஒரு பிரம்மாண்டமான இசை ஓவியம் நம் கண்முன் மங்கலாக விரிகிறது. இளையராஜாவின் ஆற்றல் இதைச் சாதிக்கும். அந்த ஓவியம் உருவாக்குவிருக்கும் உணர்வை அவரது சித்தாந்தம் தீர்மானிக்கும்.

அம்பேத்கரின் அரசியல் சட்டத்தை பத்திரப்படுத்திக் கொண்டு, இந்து மதத்தின் மீதான் அவருடைய தாக்குதலை இருட்டடிப்பு செய்தது பார்ப்பனியம்! இளையராஜாவின் ஆன்மீகத்தையும் சீரங்கம் கோபுரத்துக்குக் கொடுக்கும் காசையும் வெட்கமின்றி பயன்படுத்திக் கொள்ளும் பார்ப்பனக்கும்பல், தன் இசை மடமையின் மீதும், போலித்தனத்தின் மீதும் இளையராஜா தொடுக்கும் தாக்குதலை மட்டும் கவனமாக இருட்டடிப்பு செய்கிறது. அதன் கோரமுகத்தைப் பச்சையாக உரித்துக்காட்ட இளையராஜா தயங்கினாலும், தனது எதிர் நடவடிக்கை மூலம் பார்ப்பனியம் தன் அற்பத்தனத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிக் கொள்கிறது.

''இருபத்தியொன்றாம் நூற்றாண்டெங்கும் உலகம் இளையராஜாவின் இசையில் திளைக்கும்'' என்கிறார் பிலார்மோனிக் குழுவின் நடத்துனர். இருபது நூற்றாண்டுகளாக முகவரியில்லாதவர்கள், வருணத்தில் சேராதவர்கள், என்று யாரை இருட்டடிப்பு செய்ததோ அவர்களின் ஒருவரின் பெயரை 'மேற்பார்வை முகவரி'யாகப் போட்டுத்தான் இசை உலகில் இன்று தன்னை பார்ப்பனக்கும்பல் அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'மேஸ்டிரோ' என்று அன்பு கலந்த மரியாதையுடன் அழைக்கிறார்கள் பிலார்மோனிக் குழுவினர்; ஆசியன் என்கிறது உலகம்; இந்தியன் என்று அவசரமாக முத்திரையிடுகிறது, பாராளுமன்றம்; அதுவும் ஒரு தமிழன் முன்மொழிந்தபிறகு. தமிழன் என்று அரவணைக்கிறது தமிழகம்.

ஆனால், பண்ணைப்புரத்தில், ராசய்யாவின் (இளையராஜா) சகோதரர்கள் மற்ற மனிதர்களுக்குச் சமமாக தேநீர்க்கடையில் ஒரே குவளையில் தேநீர் அருந்த இன்றும் விவசாயிகள் விடுதலை முன்னணி போராடிக் கொண்டிருக்கிறது.

அவர்களுக்கு முளைப்பாரி தெரியும்; தெம்மாங்கு தெரியும், ஒப்பாரி தெரியும்; இரண்டாயிரம் ஆண்டுகளாய் தங்கள் பாட்டன்மார் என்ன மெட்டுகளில் பாட்டுக் கட்டினார்களோ அவையெல்லாம் தெரியும்; அவை மட்டும்தான் தெரியும். அவர்கள் கைமாற்றி தந்து சென்ற பறை தெரியும்.

அவர்களுக்கு சிம்பனி தெரியாது; புரியாது; அவர்களுக்கு இப்போது தேவைப்படுவதெல்லாம் ஒரு மெட்டு; இரண்டாயிரம் ஆண்டுகளாய் தங்களை அழுத்தும் சோகத்தை, தாங்கள் அழுத்தி வைத்திருக்கும் கோபத்தைப் பகிர்ந்து கொள்ள ஒரு மெட்டு - ஹார்மனியில் ஒரு இழை.

மாபெரும் மேதைகளின் வரிசையில் இன்னொருவன் உருவாகிவிட்டான் என்று பிலார்மோனிக் கலைஞர்கள் பெருமைப்படுகிறார்கள்; பண்ணைப்புரத்துப் பண்ணைகளோ கவலைப்படுகிறார்கள் - இன்னொரு ராஜா உருவாகிவிடக் கூடாதே என்று.

● *மருத்துவன்*

# சங்கராச்சாரி வாக்குமூலம் ஆ.விகடனுக்கு ஒரு சவால்

*தாழ்த்தப்பட்ட மக்களையும், நாடார் சமூகத்தினரையும் கோயிலுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று வெறித்தனமாக எதிர்த்தவர் 'நூறுவயது' சங்கராச்சாரி. பிரபலமாகப் பேசப்படும் 'காந்தி - சங்கராச்சாரி' சந்திப்பின் போது சங்கராச்சாரி காந்தியிடம் சொன்னதும் இதைத்தான். ஆனால் அந்த சந்திப்பின்போது வேறு யாரும் உடனிருக்கவில்லை என்றால் ''ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை சங்கராச்சாரியார் எதிர்க்கவில்லை'' என்றும் ''இம்மாதிரி சீர்திருத்தங்களைச் செய்யும்போது பெரும்பான்மை இந்துக்களின் மனவுணர்வை கணக்கில் எடுத்துக் கொள்ளுமாறு மட்டுமே கூறினார்'' என்றும் இன்றைக்குத் திரித்துக் கூறுகிறது, பார்ப்பனக் கும்பல்.*

*1932-இல் (அதாவது காந்தி சந்திப்பிற்குப் பிறகு) சென்னையில் சங்கராச்சாரி ஆற்றிய உரைகளின் தொகுப்பை ''மதராஸ் லா ஜர்னல் ஆபீஸ், மைலாப்பூர்'' 1933-இல் வெளியிட்டுள்ளது. அவற்றில் 7.11.32 அன்று ஆற்றிய உரையிலிருந்து மட்டும் சில பகுதிகளை கீழே தொகுத்துத் தருகிறோம்.*

*சங்கராச்சாரியின் நூற்றாண்டை யொட்டி அவர் ஆற்றிய உரைகளை பல்வேறு தலைப்புகளில் ''அருள் உரை'' என்று தொகுத்து வெளியிட்டு வரும் ஆனந்த விகடன், 'ஆலயப் பிரவேசம் அல்லது தீண்டாமை என்ற தலைப்பில் கீழ்க்காணும் 'அருள்' உரையை துணிவிருந்தால் அப்படியே வெளியிடட்டும்.*

***சாதித் திமிர் பிடித்த இந்த சாதிப் பிண்டத்திற்கு கனகாபிஷேகம் செய்ய வேண்டுமா, கம்பி எண்ண வைக்க வேண்டுமா என்பதை தமிழ் மக்கள் முடிவு செய்வார்கள்.***

ஒரு நாள் ஸ்ரீ சங்கராசார்யர்கள் (ஆதிசங்கரர்) ஸ்நானத்துக்குப் போனார்கள். அப்பொழுது ஒரு பறையன் வேண்டுமென்றே அவர் பக்கத்தில் வந்தான். அவனைப் பார்த்து எட்டிப்போ என்று ஸ்ரீசங்கரர் சொன்னார். அவன் உடனே சில கேள்விகள் கேட்க ஆரம்பித்தான்.

''எதையோ போகச் சொல்லுகிறீரே; எதிலிருந்து எதை எட்டிப் போகச் சொல்லுகிறீர். சாதம் சாப்பிட்டு அதனாலுண்டான எலும்பு, மாம்ஸம் முதலியவைகள் உள்ள ஒரு கூட்டுக்கு அதே மாதிரி எலும்பு மாம்ஸம் உள்ள ஒரு கூடு தூரத்தில் இருக்க வேண்டும் என்பது உம்முடைய அபிப்பிராயமா? அல்லது அந்தக் கூட்டுக்குள் உள்ள சைதன்யமானது (ஆன்மா) கிட்டவரக் கூடாது என்பது அபிப்பிராயமா? எது உம்முடைய அபிப்பிராயம். ஏ! பிராம்மணோத்தமா! பதில் சொல்லும், எதை தூரப் போகச்சொல்ல அபிப்பிராயப்படுகிறீர்? போபோ என்று சொல்லுகிறீரே'' என்று அவன் கேட்டான். அந்தப் பறையன் கேட்ட கேள்வியிது.....

இந்தக் கேள்விக்குத் தர்ம சாஸ்திர ரீதியாகப் (மனுதர்மப்படி) பதில் வருமென்று எல்லாரும் எதிர்பார்க்கலாம். ஆனால் ஸ்ரீ ஆசாரியர்வர்கள் ஞான ரீதியாகப் பதில் சொன்னார்கள். அந்தக் கேள்வியும் ஞான ரீதியாகத் தான் இருக்கிறது. உடனே ஸ்ரீ ஆசாரியர்கள் ''தாங்கள் இப்பேர்ப்பட்டவர்களா? இப்படிப்பட்ட ப்ரம்மவித்துக்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தான் எனக்குக் குரு ஸ்தானம்'' என்று சொன்னார்.

நாமும் இப்படிப்பட்டவர்களை நமஸ்கரிக்கத்தயார். எல்லாரும் தயாராக இருக்க வேண்டும். அந்த ஞானம் வந்த நிலையில், சண்டாளன் சண்டாளன் இல்லை. பிராம்மணன் பிராம்மணன் அல்ல, வேதம் வேதம் அல்ல என்று வேதம் சொல்லுகிறது. அதைத்

படிப்பகம்

www.padippakam.com

தான் ஸ்ரீ சங்கரரும் இந்தப் பறையனுக்குச் சொன்னார். ஐந்து சுலோகங்கள் பதிலாகச் சொன்னார்.....

அவை மநீஷா பஞ்சகம் என்று சொல்லப்படும். அந்தப் பறையன் யார்? விச்வேசுவரரே (இறைவனே).....

முதலில் ஸ்ரீ சங்கராசார்யர்கள் லோகஸீத்க்காக (உலக நடப்பையொட்டி) எட்டிப்போ என்று சொன்னார். அவனுடைய க்ஷேமத்திற்காகவும் அப்படிச் சொன்னார். அவன் அபேத (ஞான) நிலையை அடைந்தவன் என்று தெரிந்து கொண்டதும் இப்படிச் சொன்னார். "தாங்கள் வாஸ்தவமாக இப்படிப்பட்ட நிலையை அடைந்தவர்களானால்", என்று அதற்காகத்தான் சொன்னார்கள்.

இந்த சுலோகத்தை வைத்துக் கொண்டு ஸ்ரீ ஆசாரியர்கள் தீண்டாமையை ஒழித்து விட்டதாக சிலர் அர்த்தம் செய்கிறார்கள். சுலோகம் தீண்டாமையை ஸ்தாபிப்பதாக நமக்குத் தோன்றுகிறது. எந்த ஸித்தாந்தத்தில் ஒருவருக்கு ஆசை இருக்கிறதோ அதற்கு தகுந்தபடி அவர்கள் சுலோகங்களுக்கு வேறு அர்த்தம் செய்து கொள்வார்கள். தீண்டாமை க்ஷேமகரமானது (மிகவும் நல்லது) என்ற எண்ணம் நமக்கு இருப்பதால் அநாதியாக நாம் இப்படி அதற்கு அர்த்தம் செய்கிறோம். நம்முடைய அர்த்தத்திற்கு ஒரு சிபாரிசு (அடிப்படை) இருக்கிறது. இத்தனை நாள் நாம் இப்படித்தான் அர்த்தம் பண்ணிக் கொண்டு வருகிறோம். அனுஷ்டானம் செய்து கொண்டும் வருகிறோம். அவர்கள் புதிதாக அர்த்தம் செய்கிறார்கள்.....

தின்பதில் சில பதார்த்தங்களை விலக்கி வைக்க வேண்டும். அப்படி விலக்கப்பட்ட ஸாமான் வந்தால் நடுங்க வேண்டும். அவ்வளவு பழக்கம் ஏற்படும்படி விலக்க வேண்டும். சுரணை என்பது அவசியமாக இருக்க வேண்டும். அது இப்பொழுது குறைந்து கொண்டு வருகிறது. எல்லாவற்றிலும் கட்டுப்பாடு (Restriction) இருக்க வேண்டும். இன்ன ஜாதியில்தான் கல்யாணம் செய்ய வேண்டும் என்ற விவஸ்தை இருக்க வேண்டும். மனது போனபடி நடக்காமல் ஆசையைப் பலவழிகளில் குறைத்துக் கொள்ள வேண்டும்.....

# அகில இந்தியப் புரட்சிப் பண்பாட்டு மையத்தின் 10-வது மாநாடு

**ஐதராபாத், அக்டோபர் 9-10, 1993**

**ராணா பிரதாப் சிங் அரங்கம் அம்பர்பேட்டை**

**புரட்சி வாழ்த்துக்கள்! — ம.க.இ.க., தமிழ்நாடு**

ஒவ்வொரு ஜாதி ஸமூஹத்தினிடையிலும் தனித் தனியாகச் சிறப்புக் கடமையாகப் பரம்பரையாய் வந்து கொண்டிருக்கின்றன. அப்படியிருப்பவர்கள் எல்லாரோடும் கலந்து தொட்டுக் பழகாமலும் கலந்து உண்ணாமலும் கலந்து விவாஹம் செய்யாமலும் இருந்தால்தான் அந்த அந்த அனுஷ்டான நியமங்களைப் பரம்பரையாகச் சுத்தமாக ரக்ஷித்துக் கொண்டு வர முடியும்.....

ஒரு சீர்திருத்தக்காரர் (Reformer) ஒன்றை உடைத்தால் அடுத்தபடி வருகிறவர் அவர் அதை உடைத்தாரே இதையும் ஏன் நாம் உடைக்கக் கூடாது என்று பாக்கி உள்ளதையும் உடைக்க ஆரம்பிப்பார். "நாலைந்து வேலிகள் இருக்கின்றனவே. ஒன்று உடைந்தால் என்ன? அது தானாகவே உடைந்து போனால் என்ன பண்ணுவீர்கள்!" என்று கேட்கிறார்கள். எல்லாம் உடைந்தால் தான் என்ன பண்ணப்போகிறோம்? நாம் அழப்போகிறதில்லை. உடைக்கக் கூடாதென்று நினைத்து உடையாமல் இருப்பதற்கு வேண்டிய பிரயத்தினம் செய்ய வேண்டும்.....

மனஸில் தோன்றியதை யெல்லாம் செய்ய ஆரம்பித்ததனால்தான் இந்த நிலை வந்துவிட்டது. ஒரு வேலியை உடைத்து விட்டால் எல்லா வேலியும் காலக்கிரமத்தில் போய்விடும். ஒரு விஷயத்தை மீறும் துணிவு முதலில் ஏற்பட்டால் அதுவே பாக்கி எல்லாவற்றிற்கும் வந்துவிடும்.....

நம்முடைய தேசத்தில் இப்பொழுது பறையர்கள் தாம் அதிக ஆஸ்திகர்களாக இருக்கிறார்கள். பிராம்மணர்களில்தான் தங்களுக்கேற்பட்ட நடைகளை விட்டுப் புது நடைக்காரர்கள் அதிகப் பேர் இருக்கிறார்கள். பறையர்களில் அவ்வளவு இல்லை. கிளர்ச்சிக்காரர்கள் அவர்களுடைய (பிரியர்களுடைய) பெயரை வைத்துக்கொண்டு பிரசாரம் செய்கிறார்கள். நம்முடைய தர்மத்தை எடுத்துச் சொன்னால் பிராம்மணனைவிட பறையர்கள்தாம் அதிகமாகக் கேட்பார்கள்.....

மனீஷா பஞ்சகத்தால் தீண்டாமை போயிற்றென்று சொல்லுவது தவறு. நம்மை மீறி ஓர் அதர்மம் உலகில் ஏற்பட்டு வந்துவிட்டால், அதைத் தடுக்க முடியாமலும் போய்விட்டால், அந்தக் காரணத்தைக் கொண்டு அதுதான் நியாயம், அதைத்தான் செய்ய வேண்டும் என்று சொல்லுவது தப்பு. நாம் நம்முடைய பரம்பரை தர்மத்தை நம்மால் கூடியவரையில் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.....

இப்பொழுதுள்ள சீர்திருத்தக்காரர்கள் நீங்கள் கலப்புக் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டாம். சேர்ந்து போஜனம் பண்ண வேண்டாம். தீண்டாமையை மட்டும் விட்டு விடுங்கள் என்று சொல்லுகிறார்கள்.....

அடுத்தபடி அதுவும் பரவாயில்லை என்று யாராவது சொன்னால் அதையும் ஸரியென்று சொல்லுவார்கள்.....

எவ்வளவோ பணத்தைச் செலவழித்து ஆலயங்களைக் கட்டியிருக்கிறார்கள். சாஸ்திரத்தை நம்பி அப்படிக் கட்டியிருக்கிறார்கள்.....

ஆகம சாஸ்திரங்களில் எந்த விதி சொல்லப்பட்டிருக்கிறதோ அப்படியே நடந்துவரும் என்ற நம்பிக்கையுடன் அந்தப் பணத்தைச் செலவழித்திருக்கிறார்கள். அந்தச் சாஸ்திரங்களில் நம்பிக்கை இல்லாதவர்கள், யாருக்கு அவைகளில் நம்பிக்கை இருக்கிறதோ அவர்களுடைய அனுஷ்டானங்களில் புகுந்து தொந்திரவு கொடுப்பது நியாயமில்லை. கோயில் தங்கள் உரிமைகளை ஸ்தாபிக்கும் இடங்களல்ல. பக்தி பண்ண ஏற்பட்ட இடங்கள். இப்பொழுதுள்ள கிளர்ச்சிக்காரர்கள் தரிசனத்துக்காகக் கோயிலுக்குப் போகும் சிரத்தையுடையவர்கள் அல்ல. பறையர்களைக் கோயில்களுக்குள் விடும் பாத்யஸ்தாபனத்திற்காகவே (உரிமையை நிலைநாட்டவே) இப்பொழுது வருகிறார்கள்.....

சாஸ்திரத்தில் நம்பிக்கையில்லாதவர்களுக்குக் கோயிலில் என்ன காரியம்? முதலில் அவர்களை விடாமல் போனால் பறையன் தானே நின்று கொள்ளுவான். நாம் ஸத்தியமாகவும் சாஸ்திரத்தின்படியும் நடக்கிறோமென்று தெரிந்தால் அநாசாரப் பிரசங்கிகளுக்குத் தானாகப் பயம் ஏற்படும். நாம் இப்படிக் கடுமையாக ஆரம்பித்தால்தான் இந்த முயற்சிகளெல்லாம் நின்று போகும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய ஸ்வாமிகளின்



அருள் உரை 35 36

(புத்தகம் ஒன்றின் விலை ரூ. 3/-)

"கல்யாணத்தைப் பொருளாதாரப் பிரச்னையாகப் பண்ணியிருப்பது அக்கிரமம். 'அக்கிரமம்' என்கிற வார்த்தையைத்தான் சொல்ல வேண்டும். அவரவரும் ஆணோடு பெண்ணோடு பிறந்தவர்கள்தானே? நமக்கும் பெண்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க, ஷைலக் மாதிரி கண்டிஷன் போட்டுப் பெண் குழந்தைகளைக் கல்யாணமாகாமல் கண்ணைக் கசக்கும்படியாகப் பண்ணுவதை மன்னிக்கிறதற்கேயில்லை."

இப்போது வேகமாக

வெள்ளிதோறும்

விகடன்

படிப்பகம்

www.padippakam.com

# ஜென்டில் மேன்: 21-ஆம் நூற்றாண்டின் சாணக்கியன்

**'வியட்நாம் வீடு'**
பிரஸ்டீஜ் பத்மநாபன் ।ஜென்டில் மேன்;
'கவுரவம்' - பாரிஸ்டர் ரஜனிகாந்த் - ஜென்டில்மேன்; 'ஜென்டில்மேன்'' கிச்சாவும் ஜென்டில் மேன் - வியத்தகு முன்னேற்றம்!

எந்த நயவஞ்சகம் பித்தலாட்டம் ஆகிய இழிகுணங்களுக்காகப் பார்ப்பனியம் வெறுக்கப்பட்டதோ, அவற்றையே தலைசிறந்த ஒழுக்க நெறிகள் என்று சினிமாஸ்கோப்பில் அறிவிக்கிறது ஜென்டில் மேன் - ''சாணக்கியனாக இரு''!

படம் துவங்குகிறது. கதாநாயகன் கொள்ளையடிக்கிறார்; அப்புறம் 'கணபதி ஹோமம்' செய்கிறார்; கனவு சீனில் டூயட் பாடுகிறார்; அப்பளம் விற்கிறார்; மறுபடி கொள்ளையடிக்கிறார்; மறுபடி கூட்டமாக டூயட் பாடுகிறார் - ஏன், எதற்கு என்று ரசிகர்கள் யாரும் விசிலடித்து கேள்வி கேட்கவில்லை. கதையை பிட்நோட்டீஸ் அடித்து படம் முடிந்தபின் ரசிகர்களுக்கு விநியோகித்து வீட்டில்போய் படித்துக் கொள்ளச் சொல்லியிருந்தாலும் ரசிகர்கள் ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்றே தோன்றுகிறது. கடைசியில் ஏன் என்ற கேள்வியை கதாநாயகி கேட்டுவிடுவதால் வேறுவழியின்றி கதையை அவிழ்த்து விடுகிறார் இயக்குனர்.

படம் பார்த்திராத வாசகர்களுக்காக கதைச் சுருக்கம்; இரண்டு நண்பர்கள், ஒருவர் பார்ப்பனர்; இன்னொருவர், அதாவது கதாநாயகன் கிச்சா, பார்ப்பனரல்லாதவர். (பார்ப்பனரல்லாதவர் என்றால் என்ன சாதி என்று கேட்காதீர்கள். 'இந்து ஒற்றுமை சகாப்தத்தில்' சாதி பெயர் சொல்லி சிக்கிக் கொள்வதற்கு இயக்குனர் முட்டாளல்ல, சாணக்கியன்)

மாவட்டத்திலேயே முதல் இரண்டு மாணவர்களாகத் தேர்ச்சி பெறும் இருவருக்கும் டாக்டராகிவிட ஆசை. மருத்துவக் கல்லூரியில் இடம் தருவதாகக் கூறும் மந்திரி, வழக்கம் போல ஆசைநாயகியின் அணைப்பில் இருந்தபடியே வில்லத்தனமாக லட்சக்கணக்கில் லஞ்சம் கேட்கிறார். கொடுக்க இயலாத பார்ப்பன மாணவன் 'கேவலம்' அப்பள வியாபாரியாக வாழ மறுத்து தற்கொலை செய்து கொள்கிறான். (நீதி: கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே)



இயக்குனர் ஷங்கர்

பார்ப்பனரல்லாத மாணவன் கிச்சாவின் தாயான சத்துணவு ஆயா தன்னையே எரித்துக் கொண்டு மந்திரிக்கு லஞ்சப்பணம் சேர்த்துத் தருகிறாள். அந்தப் பணமும் போதாதென்று மந்திரி விரட்டிவிடுவதால் கிச்சா 'ஜென்டில்மேனாக' உருவாகிறார். இல்லை, உருவாக்கப்படுகிறார். (மந்திரியாகப்பட்டவர் அளவோடு லஞ்சம் பெற்று 'நாணயமாக' கிச்சாவுக்கு சீட் கொடுத்திருந்தால் நாம் ஜென்டில்மேனைக் காண நேர்ந்திருக்காது)

பார்ப்பன மாணவனின் தந்தை என்கிற 'சாணக்கியனுடைய' சொல்படி கிச்சா என்கிற 'சந்திரகுப்தன்' பகலில் அப்பள வியாபாரமும் இரவில் கொள்ளையும் நடத்துகிறார். லட்சியம் மௌரியப் பேரரசல்ல; 40 கோடி செலவில் ஏழைகளுக்கான 'காலணா வாங்காத கல்வி நிலையம்'. (படிப்பு முடிந்தபின் வேலைக்கு லஞ்சம் தர வேண்டுமே என்ன செய்ய? அதற்கு ஜென்டில்மேன் II வருவார்)

கைது செய்யப்படும் கிச்சா நீதி மன்றத்தில் ஆற்றும் எழுச்சி உரையினால் உந்தப்பட்ட ஒரு மாணவன் மனித வெடி குண்டாக மாறி முதலமைச்சரைக் கொல்கிறான். சிறைமீண்ட கதாநாயகன் கல்வி நிலையத்தை திறக்கிறார் - லட்சியம் வெற்றி!

ooo

படம் முடிந்து, கண்ணைக் கூசும் எதார்த்த உலகினுள் நுழைந்து கொண்டிருந்த இளைஞர்களெல்லாம் மெடிக்கல் காலேஜ் சீட் கிடைக்காதவர்கள் தானோ, என்று ஐயுற்று விசாரித்தபோது அப்படியொன்றுமில்லையென்றும், தங்களில் பலர் மெடிக்கல் காலேஜ் கட்டிடத்தையே திரையில்தான் முதன்முதலாகப் பார்ப்பதாகவும் கூறியவாறே 'கவுதமியை' விட்ட இடத்திலிருந்து துரத்தியபடி பிரபுதேவாவின் பின் சென்றனர்.

> ஊழலில் இருந்து பூணூல் ஒரு கேடயமாகப் பயன்படுவதுதான் நடப்பு: ஆனால் நீதிக்குப் போராட கையில் அரிவாள், மார்பில் பூணூலுடன் நிற்கிறது படத்தின் கட்-அவுட்: அது எவ்வளவு தான் பிரமாண்டமாக இருந்தாலும் நிஜமல்ல வெறும் அட்டைதான் — பாரதிய ஜனதாவைப் போல

படம் பயங்கரவாதத்தையும், கொள்ளையையும் தூண்டுவதாக மந்திரிகளோ, கல்வி வள்ளல்களோ கூடப் புகார் செய்யவில்லை. ஆனந்த விகடன் 50 மார்க் அள்ளிப் போட்டு உச்சிமோந்து பாராட்டிவிட்டது.

'செம்மலர்' கோர்ட் சீனில் கிறங்கிவிட்டது. எனினும் கிச்சாவின் நீதிமன்ற உரையினால் 'கிளர்ச்சியூட்டப்பட்ட' மாணவர்கள் குறைந்தபட்சம் இரண்டு சுயநிதிக் கல்லூரிகளின் சன்னல்களையாவது கல்லெறிந்து உடைத்ததாகக் தகவல் இல்லை. திருச்சியில் டிக்கெட் வாங்குவதற்கான மோதலில் ஒரு ரசிகர்தான் கொல்லப்பட்டிருக்கிறார்.

ஆனால் படத்தின் இயக்குனரோ ''காலணா வாங்காத கல்வி'' என்ற தனது கதையின் நீதியை மக்கள் அமோகமாக வரவேற்பதாக மார்தட்டுகிறார்.

லஞ்சத்தினால் பாதிக்கப்பட்ட யாரோ ஒரு மாணவன் இத்தகைய 'ஜென்டில் மேன்' வேலைகளில் இறங்குவதாக கதை அமைந்திருந்தால், இதை வழக்கமான வீர சாகச மசாலா என்று ஒதுக்கிவிட்டுப் போயிருக்கலாம். அப்படி ஒதுக்க முடியவில்லையே!

கதையோ, கவிதையோ, சினிமாவோ எதுவானாலும் அது தோன்றிய சமூக நிலையில் வைத்து பரிசீலிக்கும் போது மட்டும் தான் அதன் சுயரூபம் வெளிப்படும். இருபதாண்டுகளுக்கு முன் சென்னையில் தோன்றிய திடீர் பிள்ளையார்களின் நோக்கம் — உண்டியல். இன்று இந்து முன்னணி தொழிற்சாலையில் தயாராகிவரும் ஆயிரக்கணக்கான திடீர் பிள்ளையார்களின் கோரிக்கை - முஸ்லீம் ரத்தம், அரசியலதிகாரம். பிள்ளையாரென்னவோ அதே பிள்ளையார்தான்!

இட ஒதுக்கீடு எதிர்ப்பு, பாரதிய ஜனதாவின் அரசியல் கனவு, பார்ப்பன எதிர்ப்பு, கல்விக் கொள்ளை, எம்.டி.வி - ஆகிய சம்பந்தமில்லாத ஆனால் சம்பந்தமுள்ள பல விசயங்கள் நடைபெறும் இன்றைய காலகட்டத்தில் அவதரித்திருப்பவர் தான் இந்த ஜென்டில்மேன் என்பதைப்

படிப்பகம்

www.padippakam.com

புரிந்து கொண்டால்தான் 'அவதார ரகசி யம்' பிடிபடும்.

படத்தில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக, பார்ப்பனருக்கு ஆதரவாக ஒரு வசனம் உண்டா? எப்படி இருக்கும்? வசனம் பால குமாரனாயிற்றே! சொல்ல வேண்டிய செய் தியைத்தான் சொல்லுக்குள் அர்த்தம்போல சொல்லாமல் சொல்லி விடுகிறார்களே.


வசனமில்லாமல் காட்சிப் படிமங்கள் மூலமாகவே ஆழ்மனதில் திருட்டுத்தன மாக கருத்தைப் பதித்துவிடுவது என்பது அமெரிக்காவின் கருத்துப் 'போராட்ட' முறை. விளம்பர யுத்தங்களின் ஆயுதமும் அதுவே. 21-ம் நூற்றாண்டின் சாணக்கிய மும் அதுவே.

எனவே, படத்தைப் பார்த்துவிட்டு வெளியே வரும் ரசிகர்கள் ''பிராமணர் சங் கம் வாழ்க! பெரியார் ஒழிக!'' என்று கோஷம் போட்டுக் கொண்டு வருவார்கள் என்று நினைத்து யாரும் சினிமா கொட்ட கைக்கு அலைய வேண்டாம். ரசிகன் மன தில் பதிக்கப்பட்ட படிமம் ஒரு நச்சுக்கிருமி. பொருத்தமான நேரத்தில்தான் அது வேலையைத் தொடங்கும்.

இனி படத்துக்குள் உள்ள படங்களுக் குள் போவாம்.

தன் காதலியின் தங்கையை பலாத்கா ரம் செய்யும் ரவுடிகளுடன் கிச்சா மோதும் காட்சி. கிச்சா குறுக்கிடுகிறார். ஒரு ரவுடி கிச்சாவின் பூணூலை இழுத்து அறுக்கிறான். அதற்குப் பிறகுதான் ஆவேசம் கொண்டு திருப்பித் தாக்குகிறான் கிச்சா.

வில்லனின் அடியில் உதடு கிழிந்தவு டன் தான் எம்ஜியாருக்கு 'வெறி' வரும். கிச்சாவுக்கோ பூணூல் அறுந்தவுடன்! இந் தக் காட்சிக்கு பொழிப்புரை என்ன? 'இனி மேலும் பொறுக்கமாட்டான் பார்ப்பான்' என்பதா? சாந்தத்தின் (சத்துவம்) உத்திர வாதமாகிய பூணூலை எடுத்தவுடன் மூர்க் கத்தனம் (ரஜோகுணம்) பீறிட்டு விட்ட தென்பதா? அல்லது 'காயத்ரி சொல்லு வோம் கராத்தேயும் பயில்வோம்' என்ற



இலக்கிய விபச்சாரியுடன் இசை விபச்சாரி

பிராமணர் சங்க முழக்கத்தின் காட்சி வடி வமாகக் கொள்வதா? சீரங்கத்துப் பார்ப்ப னர்களைக் கேட்போம்: ரங்கநாதனின் தூய் மையைக் கெடுத்த சூத்திரர்களை ரத்தம் சொட்டச் சொட்ட அடித்த சாகசக்காட்சி யினை திரும்ப நிகழ்த்தியதுபோல இருந்தி ருக்கும் அவர்களுக்கு. கேட்டவர்க்கு கேட் டபடியெல்லாம் வரும் காட்சியல்லவா?

தன்னுடைய ''சினிமாஸ்கோப் சமூக உணர்வுக்கு'' இயக்குனர் ஏன் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காத பிரச்சினை யைத் தேர்ந்தெடுத்தார்? ஐம்பது சதவிதம் பேருக்கு அரிச்சுவடிக்கு வழியில்லாத நாட் டில் இது கொண்டை பூவுக்கு அழுத கதை யல்லவா?

தினமணி பேட்டியில் காரணம் சொல் கிறார் இயக்குநர் ஷ(ச)ங்கர்.

''நான் தியாகராய நகரில் பல குடும் பங்கள் கொண்ட இடத்தில் தங்கியிருந் தேன். ஒவ்வொரு குடும்பத்தில் உள்ளவர்க ளும் தங்களது குழந்தைகளின் படிப்புக்காக படும் கஷ்டத்தை நேரில் பார்த்திருக்கிறேன்.

நான் கூட 6-வது வரை பணம் கட்டி கான்வென்டில் படித்தேன். அதன்பிறகு பீஸ் கட்ட முடியாமல் தமிழ் மீடியத்தில் சேர்ந்தேன்...

நான் டி.எம்.இ.யில் முதல் ரேங்கில் பாஸ் செய்திருந்தும் பி.இ. படிப்புக்கு சீட் கிடைக்கவில்லை. அதிக டொனேசன் கேட் டனர். திறமையிருந்தும் வசதி இல்லாத தால் படிப்பைத் தொடர முடியவில்லை''

சென்னையைப் பற்றி தெரியாத வாச கர்களுக்கு ஒரு குறிப்பு: தி.நகர் என்பது சென்னையின் சிந்து கங்கை சமவெளி. வியாசர்பாடி என்றொரு பகுதியும் சென் னையில் உண்டு. அங்கே உள்ள மக்கள் (பெரும்பாலும் தாழ்த்தப்பட்டவர்கள்) தங் கள் பிள்ளைகளுக்கு இரண்டு வேளை சோறு போடவே கஷ்டப்படுகிறார்கள். இயக்குனரைப் போன்ற மேற்படி தி.நகர் வாசிகளுக்கு பம்பாய், டில்லி, வாஷிங்டன் கூடத் தெரியும்; வியாசர்பாடி தெரியாது.

தமிழ் மீடியத்தில் படிக்க நேர்ந்த இழி நிலை குறித்து இயக்குனர் குமுறுவதிலி ருந்தே 'அப்பளம் விற்கவா பிறந்தேன்' என்று தற்கொலை செய்து கொண்ட பார்ப் பன மாணவன் வேறுயாருமல்ல, அவர் தான் என்பது புரிகிறது. தற்கொலை வீர னின் சாகச தாகம்தான் கொள்ளைக்காரன் கிச்சா. அவனுடைய 'ஆவி' என்பதனால் தான் கிச்சாவுக்கு பூணூல். தற்கொலை வீர னின் 'பழிவாங்கும் வெறி'தான் மனிதகுண் டாக வரும் பார்ப்பன மாணவன். எனவே தன் சொந்த அனுபவம்தான் கதை என்று இயக்குனர் கூறுவது ஏற்கத்தக்கதே!

அடுத்து, திறமையிருந்தும் சீட் கிடைக் காத 'இடஒதுக்கீட்டுக் கொடுமை'. அதை வெளிப்படையாகச் சொல்ல முடியாததால் ஊழலைச் சொல்கிறார். மந்திரிக்குக் கொடுத்தால் லஞ்சம். தனியார் கல்லூரிக்கு கொடுத்தால் நன்கொடை. அப்படி 'நன் கொடை' கொடுத்து படிப்பவர்களில் கணிச மானோர் யார்? சுயநிதிக் கல்லூரிகளைச் சாடி, 'கல்வி அடிப்படை உரிமை' என்று

## சாணக்கியனுக்கு ஒரு தரகு வேலை

செம்மலர்
SEMMALAR
சரம் : 24
மலர் : 5
செப்டம்பர், 1993

❑ ஜே. ரத்தினசாமி, காஞ்சிபுரம்

*ஜென்டில்மேன் படம் சக்கைபோடு போடுகிறதே...?*

ஆங்காங்கே விரசம் தட்டினா லும் அநீதிகளை எதிர்க்க குறுக்கு வழி காட்டினாலும் நல்லதொரு விஷயத்தை நோக்கி படம் கச்சி தமாய் தாவுவதால் அனைவரின் சுர்ப்பையும் பெற்றுவருகிறது. அந்த நீதிமன்ற காட்சி அருமை! 'கல்வி யையும் ஓர் ஆடம்பரப் பொருளாக ஆக்கிவிட்டார்களே' எனும் சுதாநா யகனின் குமுறல் காலத்திற்கேற்ற பிரதிபலிப்பு!

படிப்பகம்

www.padippakam.com

உச்சநீதி மன்றம் தீர்ப்பொன்று கொடுத்த போது. "பணம் கொடுத்து படிப்பது என் பிறப்புரிமை; அதை நீதிமன்றம் பறிக்க முடியாது" என்று இந்தியன் எக்ஸ்பிரசுக்கு வாசகர் கடிதம் எழுதியவர்கள் யாரோ அவர்கள் (அவாள்) தான்.

இயக்குனருக்கு விசயம் புரியாமலில்லை. கதை மக்கள் மனதைத் தொடாமல் போய்விடுமோ என்ற சந்தேகம் அவரை வாட்டுகிறது. இதன் விளைவுகள் இரண்டு.

முதலாவது ரசிகர்களின் நெஞ்சைப் 'பிழியும்' முயற்சி. கிச்சாவின் தாய் எரியும் காட்சியை விலாவாரியாகக் காட்டுவதும், நண்பனுடைய பிணத்தை மூடியிருந்த துணியை விலக்கி... கட்டுகளைப் பிரித்து... முகம் இருக்க வேண்டிய இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ரத்தம் தோய்ந்த பஞ்சை எடுத்துப் பார்த்து... அப்புறம்தான் கதறுகிறார் கதாநாயகன். பார்ப்பன அவலத்தின் மீது இரக்கத்தை வரவழைக்கத்தான் எத்தனை சிரமப்பட வேண்டியிருக்கிறது!

இரண்டாவது. ரசிகர்களின் நெஞ்சத்தை கிள்ளும் முயற்சி. கதாநாயகன் 40 கோடி கொள்ளையடிக்க நியாயம் (சினிமா மொழியில் ஜஸ்டிபிகேஷன்) கிடைத்துவிட்டது. விநியோகஸ்தர்கள் கொள்ளையடிக்க வேண்டுமே! கூப்பிடு ரகுமானையும், பிரபு தேவாவையும்.

ரசிகர்களுக்குப் பரிச்சயமான நாட்டுப்புற, உள்ளூர் தாளகதி என்னும் தண்டவாளத்தின் மீது, பரிச்சயமாகிக் கொண்டிருக்கிற எம்.டி.வி. மைக்கேல் ஜாக்சன் வகையறாவின் சவாரி. சுதேசி எம்.டி.வி. 'சைடுரீலாக' பிரபு தேவாவின் பொம்பிளை துரத்தும் நடனம். டெல்லி பெண்ணின் புது விளையாட்டுகளால் இருமடங்காகப்பட்ட செந்தில் - கவுண்டமணி விரசம்.

மூளைக்கு அநாவசியமாக வேலை வைக்காமல் நர்சரி ரைம், கானா பாடல்கள் பாணியில் வைரமுத்துவும், வாலியும் பாட்டெழுதியிருக்கிறார்கள். பஞ்சு மிட்டாயை குழந்தைகள் விரும்பக் காரணம் எதுவோ அதுவேதான் ரசிகர்கள் ஜென்டில்மேன் இசையில் கிறங்குவதற்கும் காரணம்,

இந்த வகையில் இது ஒரு துவக்கம் தான். ரகுமானின் கம்ப்யூட்டரில் (சிந்தசைஸர்) நிறைந்திருப்பவை கிருமிகளே. 'ஜாஸ்' என்ற ஆப்பிரிக்க பழங்குடி மக்களின் இசையை அமெரிக்கா எப்படி வெறும் போதை வெறியாகக் குறைத்ததோ, அப்படியே ரகுமானும் செய்வார் என்று எதிர்பார்க்கலாம்.

லட்சியப் படம் என்பதால் கதாநாயகன் போர்வை போர்த்தியபடி வந்து படத்தின் கொள்கையை விளக்கி ஒரு தத்துவப் பாடல் பாடுவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம். படம் முடியும் தருவாயில்தான் 'லட்சியமே' தெரியவருகிறது என்பதால் பாட்டுக்கு நேரமில்லை.

பாடல்களைக் கழித்துவிட்டால் படம் ஓடுமா? ஓடாது. பிறகு கதையைப் பற்றி அநாவசியமான கவலை எதற்கு என்று கேட்கலாம். 'அருவி, அறுத்த எலுமிச்சை, அரைநிர்வாணக் குளியல் காட்சி' ஆகியவற்றைக் கண்டு களித்ததுடன் நிறுத்திக் கொண்டு மக்கள் லிரில் சோப் வாங்காமல் இருப்பார்களேயானால் நாமும் கதையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

"என்ன? கொள்ளைக்காரன் ஒரு பிராமினா!" என்று அதிசயிக்கிறார் போலிசு அதிகாரி. இல்லை பாலகுமாரன் அவர்களே. ஆனால் அவனுக்கு 'கீதோபதேசம்' செய்து திருடனாக்கியவன் பார்ப்பான்.

ஊழல் மந்திரிக்கு மனித குண்டு. திருடன் கிச்சாவுக்கு 6 ஆண்டு சிறை; திட்டம் போட்டுத்தந்த பார்ப்பானுக்கு? அர்சத் மேத்தா கதைதான்.

"பிரதமரின் நிவாரண நிதிக்கு பணம் கொடுக்கவேதான் பங்கு மார்க்கெட்டைச் சூறையாடினேன்" என்று ஒரு அடி அடித்து அவனும் தப்பியிருக்கலாம்; ஜென்டில்மேன் ஒரு ஆண்டு முன்பே வெளிவராதது அர்சத் மேத்தாவின் துரதிருஷ்டம்!

ஊழலிலிருந்து தப்பிக்க பூணூல் ஒரு கேடயமாகப் பயன்படுவதுதான் நடப்பு. ஆனால் நீதிக்குப் போராட கையில் அரிவாள், மார்பில் பூணூலுடன் நிற்கிறது படத்தின் கட்-அவுட். அது எவ்வளவுதான் பிரம்மாண்டமாக இருந்தபோதிலும் நிஜமல்ல; வெறும் அட்டைதான் - பாரதிய ஜனதாவைப்போல.

"சத்ரியனாக இருக்காதே - சாணக்கியனாக இரு" "மசூதியை இடிப்போம் என்று சொல்லாதே, பஜனை என்று கூறி கடப்பாரையோடு போ' "இடித்தவுடன் கூட்டத்தோடு சேர்ந்து கண்ணீர் விடு; சத்தம் ஓய்ந்தபின் இடித்ததில் என்ன தவறு என்று திருப்பு" "நனவில் கணபதி ஓமம் - கனவில் அரை நிர்வாண நடனம்"

இது 21-ம் நூற்றாண்டின் சாணக்கியம் அல்லது என்.ஆர்.ஐ. இந்து ராஷ்டிரம். சந்திரகுப்தன், சிவாஜி...... இன்று ஜென்டில்மேன்.

இது முழுப்படமல்ல, வரத்துடிக்கும் "70 எம்.எம். இந்து ராஷ்டிரத்துக்கு" முன் வந்திருக்கும் சினிமாஸ்கோப் டிரெயிலர்.

○ மருதையன்

## பிரபஞ்சன்: மேடைக்கொரு வேடம்!

'ஜென்டில் மேன்' திரைப்படத்திற்கு உண்மை இதழில் (செப். 16-30) விமரிசனம் எழுதியிருக்கிறார் பிரபஞ்சன். பார்ப்பனக் கும்பலின் சாணக்கியத்தையும் சதை வியாபாரத்தையும் சரியாகவே சாடி 'பார்ப்பானின் உபதேசம் எங்களுக்குத் தேவையில்லை' என்று மிகச்சரியாக அதை நிராகரிக்கவும் செய்கிறார். அப்புறம்... பார்ப்பன ஆதிக்கத்தையும் உபதேசத்தையும் எதிர்க்கும் 'நாங்கள்' யார் என்று விலாசம் சொல்கிறார். அங்கேதான் பிரச்சனையே.

"நாங்கள் தமிழர்கள். நாங்களும் பின்வாங்கும் பதுங்கும் காலம் ஒன்று உண்டு. நாங்கள் பதுங்குகிறோம் என்றால், அது பாய்வதற்காக. அது ஒளிவதற்காக அன்று. நாங்கள் சத்திரியர்கள்!"

பிரபஞ்சன் அவர்களே, 'நான் சத்திரியன்' என்று சொல்லிக் கொள்பவன் பார்ப்பானின் தாசனாகவும் பிற சாதிகளை ஆதிக்கம் செய்வதில் அவனுடைய கூட்டாளியாகவும் இருக்கிறான். இது பார்ப்பனருக்கு விடப்படும் சவால் என்றால் அதுவே சூத்திரருக்கும், பஞ்சமருக்கும் விடப்படும் மிரட்டல், தன்னை சத்திரியன் என்று பெருமையாக சொல்லிக் கொள்வோர் இருக்கின்ற இடமும், இருக்கப் போகின்ற இடமும் ஒன்றே. அது பாரதிய ஜனதா. பெண்ணுக்கும், பொன்னுக்கும் மயங்கி பார்ப்பன சேவை செய்த 'முடியுடை மூவேந்தர்களை' தலையில் வைத்து கூத்தாடியவர்களுக்கு சூடு கொடுத்திருக்கிறாரே பெரியார், 'பெரியாரிஸ்டான' உங்களுக்கு தெரியாதா?

சத்திரியத் தமிழன், பஞ்சமத் தமிழன் என்று இருக்கலாமெனில், சத்திரிய இந்து, சூத்திர இந்து, பஞ்சம இந்துவாகவும் இருப்பதில் என்ன நட்டம்? பஞ்சம இந்துவுக்கும், பஞ்சமத் தமிழனுக்கும் சேரி ஒன்றுதானே! 'வன்னிய குல சத்திரியர்' என்று சொல்லிக் கொள்பவர்கள் எப்படி பெரியாரிஸ்டுகளாக முடியும் என்று ராமதாஸ் அவர்களை 'மடக்கிய' தி.க.வின் மேடையிலிருந்தே சத்ரிய பிரகடனம்!

"இல்லையில்லை தமிழன் வீரத்தைக் குறிப்பதற்காக மட்டுமே அந்தச் சொல்லைப் பயன்படுத்தினேன்" என்று நீங்கள் கூறுவதாக இருந்தால் அம்பேத்காரைப் படியுங்கள், சூத்திரருக்கும் பஞ்சமருக்கும் கல்வியை மறுத்த பார்ப்பனின் 'அறிவு' எவ்வளவு மேன்மையானதோ, அதே அளவிற்குத்தான் அம்மக்களுக்கு ஆயுதம் தரிக்கும் உரிமையை மறுத்த சத்திரியனின் 'வீரமும்' மேன்மையானது. உங்களால் சாடப்படும் பார்ப்பன விஷமி மணிரத்னம் தன் படமொன்றிற்கு 'சத்திரியன்' என்று புரியாமலா பெயர் சூட்டினார்?

கோபம் தலைக்கேறினாலும் 'கீழ்' சாதிக்காரனை சாதிப் பெயர் சொல்லித் திட்டுவது உண்மையான சாதி மறுப்பாளனுக்கு சாத்தியமில்லை. பெருமிதத்தின் உச்சியில் நின்றாலும் அவனுக்கு குலப்பெருமை பேச வராது. எனவே, இது தற்செயலான பிழையல்ல.

'நான்தலித்' 'நான் சூத்திரன்' 'நான் சத்ரியன்' என்று யாரும் மேடைக்கொரு அவதாரம் எடுக்க முடியாது; அது 'பகவானுக்கு' மட்டுமே சாத்தியம்.

அடுத்தது, 'தமிழன் பதுங்குவது' குறித்த அறிவிப்பு. இதைப் பல ஆண்டுகளாகவே கேட்டு வருகிறோம். மீண்டுமா? தமிழன் பதுங்கு குழியிலேயே உயிர்விடும் அபாயம் உள்ளது என்பதை கவனத்தில் கொள்க!

படிப்பகம்

www.padippakam.com

# எய்ட்ஸ்: தமிழகத்தை சூழ்ந்த அபாயம்

அமெரிக்க உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்கு 'எயிட்ஸ்' பற்றிய பாலியல் கல்வியோடு இது பரவாமல் தடுக்கும் சாதனமான 'ஆணுறை'யையும் வழங்குகிறார்கள்; மாணவ - மாணவிகள் கூச்சமின்றி நீண்ட வரிசையில் நின்று பெற்றுச் செல்கிறார்கள்! ஆச்சரியப்படாதீர்கள், இக்காட்சியை நமது நாட்டிலும் பார்ப்பதற்கு காலம் வெகு அருகில்தான்! மணிப்பூரில் கணிசமான மாணவ - மாணவிகளுக்கு போதை மருந்து ஊசி மூலம் எயிட்ஸ் நோய் கிருமி (ஹெச்.ஐ.வி) பரவியுள்ளது. பெற்றோர்களே தங்களது பிள்ளைகளை போதை பழக்கத்திலிருந்து மாற்ற முடியாமல் அரசு சீர்திருத்த சிறைகளில் கொண்டுவந்து விட்டுப்போகிறார்கள்.

சென்னையில் 12-லிருந்து 24 வயதுக்குள் உள்ள 356 மாணவர்களை பரிசோதித்ததில் 7 பேருக்கு ஹெச்.ஐ.வி. உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். சென்னை விலைமாதர்களில் ஆயிரக்கணக்கானோரில் நூற்றுக்கணக்கானவர்கள் கல்லூரி மாணவிகள் என்று கண்டுபிடித்துள்ளனர். கடந்த மே மாதம் மதுரையில் 'நண்பன்' என்ற நிறுவனத்தினர் ஆயிரத்திற்கும்மேற்பட்ட சிறுவர்-சிறுமியரை (குழந்தை உழைப்பாளிகள்) அணுகி நடத்திய ஆய்வில் 73 சதவிகிதம் சிறுவர்களும், 53 சதவிகிதம் சிறுமிகளும் தவறாமல் போதை மருந்து உபயோகிப்பதாகத் தெரியவந்தது.

எண்பதுகளின் தொடக்கத்திலேயே 'எயிட்ஸ்' நோய் பற்றிய அபாய ஒலி ஒலித்தது: அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகி எண்ணற்றோர் இறந்தனர். வரைமுறையற்ற பாலுறவு குறிப்பாக ஓரினச் சேர்க்கையுள்ளவர்கள் பலருக்கு எயிட்ஸ் கிருமி பரவுவதாகச் செய்திகள் வந்தன. ''இது மேலைநாட்டு பிரச்சினை'' என்று உதாசீனப்படுத்திய இந்தியர்கள், 1986-ல் பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதியில் பலருக்கு எய்ட்ஸ் உள்ளதாகக் கண்டுபிடித்த பின்னரே கவனம் செலுத்த ஆரம்பித்தனர். (1985 நவம்பர் புதிய கலாச்சாரம் இதழிலேயே, இந்தியாவிலும் எயிட்ஸ் பரவக் கூடிய அபாயம் குறித்து கட்டுரை வெளி வந்தது. இன்று பம்பாய் காமாட்டிபுராவில் 3 லட்சம் விபச்சாரிகளில் 20 சதவிகிதம் பேருக்கு எயிட்ஸ் கிருமி உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். இவ்வாண்டு பிப்ரவரி மாதம் எடுத்த ஆய்வின்படி இந்தியாவில் 11.673 பேரில் 54 பேருக்கு எயிட்ஸ் கிருமி உள்ளதாகத் தெரியவந்துள்ளது. அதாவது ஆயிரம் பேரில் 5 பேருக்கு எயிட்ஸ்! இது ஓரினச் சேர்க்கை, பலருடன் உடலுறவு உள்ளவர்களுக்கு வரும் நோய் என்றில்லாமல் ரத்தம், ஊசி, விந்து மூலமாக அப்பாவிகளுக்கும், குழந்தைகளுக்கும் பரவி பலர் இறந்த செய்தி எட்டிய பின்னரே எல்லோரும் அலறத் தொடங்கினர். ஆனாலும் நகரத்திலேயே எண்ணற்றோர் இந்நோயின் அபாயம் பற்றி அறியாமல் இருப்பதும் கிராமங்களில் இந்நோய் பற்றியே தெரியாமல் இருப்பதும் வேதனைக்குரிய விசயம்.

காலரா, பிளேக் நோய் போல கிராமங்களில் எய்ட்ஸால் கும்பல் கும்பலாக சாகும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவ்வளவு விரைவாகப் பரவுவதற்குரிய வாய்ப்புகளும் அடிப்படைகளுமே இங்கு உள்ளன. இந்தியாவிலேயே பம்பாய்க்கு அடுத்து போதை மருந்தும், விபச்சாரமும் அதிகம் புழக்கத்திலுள்ள மணிப்பூர், கல்கத்தா, டில்லி போன்ற பகுதிகளிலும் கோவா, பாண்டிச்சேரி போன்ற சுற்றுலா பகுதிகளிலுமே இந்நோய் பரவியது. இன்று எயிட்ஸ் இல்லாத மாநிலமே இல்லை.

தமிழகம் எயிட்ஸ் கிருமி தாக்கியவர்கள் வரிசையில் எண்ணிக்கையளவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 5.16,057 பேருக்கு சோதித்ததில் 2340 பேருக்கு எய்ட்ஸ் கிருமி உள்ளது கண்டுபிடிககப்பட்டது. மதுரை நகரில் மட்டும் 16,000 பேர் சோதிக்கப்பட்டதில் 425 பேருக்கு எயிட்ஸ் கிருமி பாதிப்புள்ளது என்றும் மதுரையருகே உள்ள மேலூர் பகுதியில் உள்ள கல்லுடைக்கும் தொழிலாளர்களிடத்தில் 11 பேருக்கு ஹெச்.ஐ.வி. பாதிப்புள்ளது என்றும் தெரிந்தது. தென்னாற்காடு மாவட்டத்தில் 300 பேரில் 25 பேருக்கும் கோவையில் 300 பேரில் 30 பேருக்கும் எயிட்ஸ் கிருமி உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். பழனி, ராமேஸ்வரம், கன்னியாகுமரி, மதுரை - கேரளா எல்லையிலுள்ள தேனி ஆகிய பகுதிகளிலும் ஏறக்குறைய இதே அளவு எயிட்ஸ் கிருமி பாதிக்கப்பட்டவர்கள் உள்ளதாக கண்டுபிடித்துள்ளனர். இப்புள்ளி விவரங்கள் எல்லாம் விபச்சாரிகள், போதை பழக்கமுள்ளவர்கள், காசுக்காக ரத்ததானம் கொடுப்பவர்களை மட்டுமே அணுகி எடுக்கப்பட்ட ஆய்வாகும். இவர்கள் மூலம் பிறருக்கும், அப்பாவிகள் - குடும்பஸ்தர்கள், பெண்கள், குழந்தைகளுக்கும் பரவியுள்ளதா என்றும் அப்படி பரவியிருந்தால் அதன் அளவு என்ன என்பதும் இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை.

''பம்பாயில் காமாட்டிபுரா என்று ஒரு தனி பகுதி இருப்பதால் எளிதாக எயிட்ஸ் கிருமி எத்தனை பேருக்கு உள்ளது என்று ஆய்வு செய்ய முடிந்தது; அதைத் தடுப்பதற்கான கல்வியும் - முறைகளும் போதிக்க முடிந்தது; ஆனால் தமிழ்நாட்டில் அப்படி ஒரு பகுதியில்லாததால் தரகர்கள், ஆட்டோ டிரைவர்கள், லாரி டிரைவர்கள் மூலமாக அறிந்துதான் விலைமாதர்களைக் கண்டு பிடிக்க முடிந்தது; அவர்களும் ஒரே இடத்தில் இல்லாமல் மாவட்டம் விட்டு மாவட்டம் நகர்வதாக இருப்பதால் சரியாக ஆய்வு செய்ய முடியவில்லை'' என்கிறார் சென்னை வந்து ஆய்வு செய்த பம்பாயைச் சேர்ந்த டாக்டர் ராபர்ட்.

சென்னையில் தெருவோரத்தில் 'தொழில்' நடத்தும் பெண்கள் குறைந்தது 800 பேர். விடுதிகளுக்கு, வீடுகளுக்கு



**15 வயது சிறுமிக்கும் எய்ட்ஸ் தாக்குதல் எல்லை மீறியது அபாயம்**

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்நாடு கூவகம் விழாவில் அலிகள்: எய்ட்ஸ் கிருமி சுமப்பவர்கள்

சென்று 'தொழில்' புரியும் நடுத்தர வர்க்கப் பெண்கள் 1,500 பேர். அன்றாடம் குறைந்தது 4500 ஆண்கள் விலைமாதர்களிடம் உறவு கொள்ளப் போகிறார்கள். சென்னையில் விலைமாதர்களில் 10 சதவிகிதம் பேர் எயிட்ஸ் கிருமியால் தாக்கப்பட்டுள்ளனர். எனவே மாதம் ஒன்றுக்கு சராசரி 180 ஆண்கள் எய்ஸ்ட் கிருமியைப் பெறுகிறார்கள். இதேபோல் மதுரையில் 5000-த்திற்கும் குறையாத விலைமாதர்கள் இருக்கிறார்கள். இவர்கள் மூலம் மாதந்தோறும் 300 பேர் எயிட்ஸ் கிருமியைப் பெறுகிறார்கள். விலைமாதர்களிடம் செல்லும் ஆண்கள் மூலமாக அவரது மனைவிக்கும், அவர் பெற்றெடுக்கும் குழந்தைக்கும் எய்ட்ஸ் கிருமி பரவுகிறது.

அண்மையில் சோமாலியாவிற்கு "அமைதிகாக்க" என ஐ.நா. படை சார்பாக சென்று திரும்பிய இந்திய ராணுவத்தினர் பலருக்கு எய்ட்ஸ் கிருமி உள்ளதாக கண்டு பிடித்துள்ளனர். இது ராணுவத்தினருக்குள்ளான ஓரினச் சேர்க்கையின் மூலமே பெற்றிருக்க வாய்ப்பு உண்டு. ஏனெனில் அமெரிக்க ராணுவத்தில் ஓரினச் சேர்க்கையும் எயிட்ஸ் கிருமியும் பெருகி அமெரிக்காவிற்கு பெரும் தலைவலியாகியுள்ளது. இந்தியாவில் ஓரினச் சேர்க்கை என்பது அதிகம் ராணுவம் - போலீசு - சிறை துறைகளிலேயே காணப்படுவதாக ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

விபச்சாரம், தகாத உறவு என்பவை ஏதோ மக்களிடத்தில் உள்ள பிரச்சினை மட்டுமல்ல; முக்கியமாக மேட்டுக் குடியினர் மத்தியில், ஐந்து நட்சத்திர விடுதிகளில் பங்களாக்களில் நூறு சதவிகிதம் உள்ள பிரச்சினை. மருத்துவர்களும், பத்திரிக்கையாளர்களும் இவர்களிடத்தில் ஆய்வு நடத்தச் செல்வதில்லை என்பதாலேயே நமக்கு வெளியே தெரிவதில்லை. சென்னையில் மேட்டுக்குடி குலக்கொழுந்துகள் படிக்கும் உயர் கல்வி நிறுவனங்கள் பலவற்றில் 'எய்ட்ஸ்' தாக்கிய மாணவர்கள், மாணவிகள் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களது குடும்பத்துக்கு தெரியாமல் சிகிச்சையும் தரப்படுகிறது.

மேல் நாடுகளைப் போலவே இந்தியாவிலும் ஓரினச் சேர்க்கையாளர்கள் பல பெருநகரங்களில் சங்கங்கள் அமைத்துள்ளனர். 'உரிமையை' பாதுகாத்துக் கொள்ள போராட்டங்களும் நடத்துகின்றனர். பல ஆங்கில ஏடுகள் இதனை அனுதாபத்துடன் அணுக வேண்டிய சமூகப் பிரச்சினை என்பதுபோல் சித்தரித்து கட்டுரைகள் வெளியிடுகின்றன. வசதியுள்ள மேட்டுக்குடியினர் பலர் ஏழைச் சிறுவர்களை விலைக்கு வாங்கி தங்கள் முறைகேடான உறவுக்கு பயன்படுத்துவது குறித்த செய்திகளும் பல நகரங்களில் வெளியாகின்றன.

ஆனால இவர்கள் உயர்ந்த - அதி நவீன முறையிலான மருத்துவ வசதிகள் மூலமாக தங்களது சாவை தள்ளிப் போட்டுக் கொள்கிறார்கள். தங்களுக்கு எய்ட்ஸ் என்பதும் தெரியாத வண்ணம் வேறு காரணம் சொல்லி இருட்டடிப்பும் செய்ய முடிகிறது. (அண்மையில் இறந்த குண்டு ராவ் விற்கு எயிட்ஸ்தான் காரணம் என்ற 'வதந்தியும்' அடிபடுகிறது). எய்ட்ஸ்-ஐ கட்டுப்படுத்தி சாவைத் தள்ளிப்போடும் ஏ.இசட்.டி (AZT) என்ற மருந்தை ஒருமுறை ஊசி மூலம் போட்டுக் கொண்டால் ஆகும் செலவு 300 ரூபாய். சாதாரண மக்களால் இதை நினைத்துப் பார்க்க முடியுமா? இது அப்போலோ போன்ற மேட்டுக் கு[illegible] மருத்துவமனைகளில்தான் கிடைக்கிறது. அரசு மருத்துவமனைகளில் எய்ட்ஸ் உள்ளதா இல்லையா என்று கண்டுபிடிக்கும் (எலிஸா, வெஸ்டர்ன் பிளாட் ஆகிய முறைக்கான) மருந்தே பற்றாக் குறையில் உள்ளது. எனவே எயிட்ஸ் எமனின் பாசக்கயிறு ஏழைகள் கழுத்தில்தான் முதலில் விழுகிறது.

நமது அரசாங்க, நகராட்சி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பற்றி சொல்லவே தேவையில்லை. அரசு மருத்துவமனைக்கு வரும் ஆயிரக்கணக்கானோரைக் கவனிக்க போதிய ஊழியர்கள், நேரம், வசதியின்மை காரணமாக எந்திரம் போல், ஊசி குழல்களை சுத்தம் செய்யாமலும் அரைகுறையாக சுத்தம் செய்தும் பலருக்கும் குத்துவதைப் பார்க்க முடியும். வீடுகளுக்கும், கிராமங்களுக்கும், பள்ளிகளுக்கும் அம்மை, காலரா, மலேரியா ஊசி போட வருபவர்களும் யானைக்கால் போன்ற நோய்க்கும் ரத்தம் சோதிக்க வருப[illegible]

படிப்பகம்

வர்களும் இதேமுறையை கடைபிடிப்பதை சாதாரணமாகப் பார்க்கிறோம். ஒரு கிராமத்தில் ஒருவருக்கு எய்ட்ஸ் இருந்தாலும் எல்லோருக்கும் பரவ வாய்ப்பிருக்கிறது.

ரத்த வங்கி சேமிப்பில் அரசு மருத்துவமனையைக் காட்டிலும் தனியார் ரத்த வங்கிகளே ஏராளம் உள்ளன. இவை வியாபாரம் — போட்டி காரணமாக விதிமுறைகளையெல்லாம் மீறி செயல்படுகின்றன. ரத்தம் கொடுக்க வருபவரை முறையாக சோதித்து எந்நோயும் இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ரத்தத்தை அதற்குரிய குளிர்நிலை கொண்ட பெட்டிகளில் சேமிப்பதும் காலம் கடந்த ரத்தங்களை பிறருக்கு செலுத்தாமல் அழித்து விடுவதும் வேண்டும். குறிப்பாக ஒருவருக்கு எய்ட்ஸ் கிருமி (ஹெச்.ஐ.வி) உள்ளதா என்று சோதிக்க வேண்டும். ஆனால் எதுவுமே தனியார் ரத்த வங்கிகளில் கடைபிடிப்பதில்லை.

1987-ல் சென்னை "கன்ஸ்யூமர் ஆக்சன் குரூப்" நடத்திய ஆய்வில், பல வங்கிகள் உரிமம் இல்லாமல், அதற்குரிய தொழில்நுட்ப திறனுள்ளவர்கள் இல்லாமல் இயங்குவதும் தவறான ரத்தம் ஏற்றப்பட்டு பின்னர் தெரிந்ததும் அதை அப்படியே 'அமுக்கி' விட்டதும் எயிட்ஸ் பற்றிய எந்த அறிவும் - அதை சோதிப்பதற்குரிய எவ்வசதியும் இல்லாமலிருப்பதும் தெரியவந்தது. அரசு மருத்துவமனைகளிலோ லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப், ரசிகர் மன்றங்கள், சமூக சேவை நிறுவனங்கள் சேமித்துத் தரும் ரத்தத்தை வெளியே தனியார் மருத்துவமனைக்கு அதிக விலைக்கு விற்று அதிகாரிகள் கொள்ளையடிக்கிறார்கள். இதிலும் ரத்தம் எந்த சோதனைக்கும் உட்படுத்தப்படாமலே விநியோகிக்கப்படுகிறது.

எலும்பு முறிவுக்கு சிகிச்சை செய்யப் போனவர்கள், பல் பிடுங்கப் போனவர்கள், காய்ச்சல், வயிற்றுவலி போன்ற சாதாரண நோய்களுக்கு மருத்துவம் பார்க்கப் போனவர்கள் - எனப் பல அப்பாவிகள் ஊசிக்குழல் மற்றும் ரத்த மாற்றின் மூலம் எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாகி உயிரிழந்திருக்கின்றனர். குழந்தைகளும் முதியவர்களும் கூட இந்தக் கொடுமையிலிருந்து தப்பவில்லை

www.padippakam.com

இவ்வாறு பாதிக்கப்பட்ட அப்பாவிகள் எத்தனைபேர் என்ற கணக்கும் இல்லை. இதில் ஆறுதல் அளிக்கும் விசயம் இரண்டு: ஒன்று இந்தியாவில் 1982-ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 64 சதவிகிதம் பேர் நாட்டு வைத்தியர்களை நாடிச் செல்கின்றனர்; 19 சதவிகிதம் பேர் சுய வைத்தியம் செய்து கொள்கின்றனர்; அல்லது சிகிச்சையின்றியோ இருக்கின்றனர் என்று தெரியவந்தது இந்த சதவிகிதம் தற்போது குறைந்திருந்தாலும்கூட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை குறைவான சதவிகிதத்தில் இருப்பதாலேயே எய்ட்ஸ் கிருமி பரவும் வேகம் இங்கு குறைவாக உள்ளது. இன்னொன்று, சளி, சிறுநீர், எச்சில், கொசு, ஈ, மூட்டைப்பூச்சி மூலம் எயிட்ஸ் கிருமி பரவுவதில்லை; ரத்தம்; புழைநீர், விந்து மூலமே அதற்கு பரவும் தன்மை உள்ளது என்கிற அண்மைகால கண்டுபிடிப்பு. ஆனால் இன்றும் எய்ட்ஸ் நோயாளிகளை தனிசிறையில் கை விலங்கிட்டு அடைப்பதும், தனிமைப்படுத்தி தொடாமல் - கொள்ளாமல் ஒதுக்குவதும், சமூகத்தில் அவர்களை இழிவானவர்களாக பார்ப்பதுமாகிய கொடுமை தொடர்கிறது.

எய்ட்ஸ் கிருமியை அழித்து மனித சமூகத்தை காப்பாற்றும் பொறுப்பு மருத்துவ - விஞ்ஞான உலக அறிஞர்களின் கையிலிருக்கிறது என்றால், எய்ட்ஸ் கிருமி பரவாமல் தடுப்பதும் மக்கள் கைகளிலே இருக்கிறது. இக்கேடுகெட்ட சமூக அமைப்பு நீடிக்கும் வரை நாம் இத்தகைய அபாயங்களிலிருந்து விடுபட முடியாது. ஏனெனில் சிபிலிஸ், கொனோரியா போன்ற பாலுறவு நோய்கள் பரவியபோது விபச்சாரத்தை ஒழிக்க வேண்டும் என்ற குரல் உலகெங்கும் ஒலித்தபோது கூட ஆளும் வர்க்கங்கள் அதை நடைமுறைப்படுத்த சிறிதும் அக்கறை காட்டவில்லை. பிறகு பென்சிவின் கண்டுபிடித்த பின்பு அந்த நெருக்கடியும் இல்லாமல் போனது. தற்போது எய்ட்ஸ் நோய் பரவுவதைத் தொடர்ந்து மீண்டும் விபச்சாரம் - தகாத உறவு - ஓரினச் சேர்க்கை ஒழிப்பு தொடர்பான குரல்கள் எழுந்துள்ளன.

ஆனால் பாலியல் வெறியையும், விபச்சாரத்தையும், போதை மருந்து விற்பனையையும் சர்வதேச வர்த்தகமாகவே நடத்திவரும் ஏகபோகங்களும், மாஃபியாக்களும் அவர்களது தரகர்களான இந்த அரசும் என்ன செய்துவிடப் போகின்றன? வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு விபச்சாரத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள அரசு, விபச்சாரத்தையும் அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கான முன்னுரிமைத் தொழிலாக அறிவிக்காமலிருந்தாலே பெரிய விசயம்.

எயிட்ஸ் நோயாளியை AZT எனும் மருந்து மரணத்திலிருந்து தற்காலிகமாகக் காப்பாற்றக்கூடும்; ஆனால் விபச்சார ஒழிப்பு, போதை மருந்து ஒழிப்பு, அடிப்படை மருத்துவ வசதி, பாலியல் கல்வி, சீரழிவுப் பண்பாட்டு எதிர்ப்பு போராட்டம் ஆகியவை மட்டுமே எயிட்ஸிலிருந்து நாட்டைக் காப்பாற்றக் கூடியவை.

○ *ராசு*

# அரசு தொலைக்காட்சி ஐந்து தலை நாகமானது

"இந்த நடிகர் மூன்று வேடங்களில் நடித்த முதல் திரைப்படம் எது?" - இது சினிமா பத்திரிகைகளில் வரும் வழக்கமான கேள்வி அல்ல. இந்திய அரசு கடந்த ஆகஸ்ட் 15-ந் தேதி முதலாக துவக்கியுள்ள 5 சேனல் ஒளிபரப்பில், பொழுதுபோக்கு சேனலில் நடக்கும் தனியார் சினிமா நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட கேள்வி. தொலைக்காட்சியில் இந்நிகழ்ச்சியைப் பார்க்கும் இலட்சக் கணக்கானோர் மூளைகளைக் கசக்கி சரியான விடையை அறிவுபூர்வமாக அஞ்சலட்டையில் எழுதி அனுப்புகின்றனர். 3 லட்சம் அஞ்சலட்டைகள் மலைபோல் குவிகின்றன.

அடுத்த வாரம் இதே நிகழ்ச்சியில் ஒரு கவர்ச்சி நடிகை வருகிறார். அஞ்சலட்டைக் குப்பை மேட்டிலிருந்து அதிர்ஷ்டசாலிகளைப் பொறுக்கி எடுத்துப் பரிசளிக்கிறார். மீண்டும் அறிவுக்கு விருந்தளிக்கும் சினிமா கேள்வி நேரம் ஆரம்பமாகிவிடுகிறது. அரை மணி நேர நிகழ்ச்சியிலேயே 3 லட்சம் முட்டாள்களை உருவாக்க முடியும் என்றால், நாளொன்றுக்கு ஏறத்தாழ 3 மணி நேரம் ஒளிபரப்பாகும் இத்தகைய நிகழ்ச்சிகளால் எத்தனை லட்சம் முட்டாள்கள் உருவாக்கப்படுவார்கள்?

பொழுதுபோக்கு மெட்ரோ சேனலில் ஒளிபரப்பாகும் தமிழ் சினிமா நிகழ்ச்சிகள் போதாதென்று, தேசிய நிகழ்ச்சிகளில் "பிலிமான் கி துனியா," "மிலிமி அதாலத்", "சூப்பர் ஹிட் முஹாப்லா" என சினிமா நிகழ்ச்சிகள்; இதுதவிர வாரத்திற்கு 4, 5 சினிமாக்கள். மொத்தத்தில் வாரத்திற்கு 15-க்கும் மேற்பட்ட சினிமா நிகழ்ச்சிகள்.

இவை ஒருபுறமிருக்க, ஸ்டார் டி.வி; எம்.டி.வி; ஏ.டி.என்; சி.என்.என்; பி.பி.சி; ஜீ.டி.வி; பாக்.டி.வி; என டிஷ் ஆண்டெனாக்கள் மூலம் தொடுக்கப்படும் கலாச்சார ஆக்கிரமிப்பு யுத்தங்கள். போதாக்குறைக்கு முரசொலி மாறன் குடும்பம் நடத்தும் சன் டி.வி; இதுதவிர உள்ளூர் அளவிலான கேபிள் டி.வி.க்கள் என விடிய விடிய ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள்.

தொலைக்காட்சியின் மெட்ரோ சேனலில் சினிமா நிகழ்ச்சி ஒன்றில் வர்ணனையாளராக வரும் பிரியா எனும் பெண்ணுக்கு சினிமா நடிகைகளை விட அதிகமான ரசிகர்கள். பெரிய எழுத்தாளர்களுக்கு இணையாக பிரியாவுக்கும் "குமுதம்" எனும் ஆபாச குடும்ப பத்திரிகை பக்கங்களை ஒதுக்கித் தருகிறது. அப்பெண்ணின் அருவருப்பான வக்கிரம் நிறைந்த நிகழ்ச்சிகளைப் போன்றே, அவரது பிதற்றல்கள் தத்துவ முத்துக்களாக குமுதத்தில் வெளிவருகிறது.

படிப்பகம்

வாரத்திற்கு அரை மணி நேரம் தொலைக்காட்சியில் தோன்றும் பிரியாவுக்கு இவ்வளவு கவர்ச்சி இருக்கிறதென்றால், நாள் முழுதும் ஒளிபரப்பாகும், ஸ்டார், எம்.டி.வி, ஸ்டார் பிளஸ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தோன்றும் நடிகர்கள், பாடகர்களுக்கு எவ்வளவு கவர்ச்சியும், ரசிகர்களும் இருப்பார்கள்?

கடந்த ஜூலை மாதத்தில் ஸ்டார் தொலைக்காட்சியின் ஒரு குழுவினர் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்தனர். ஸ்டார் டி.வி.யின் முதலாண்டு நிறைவு விழாவை இந்தியாவில் கொண்டாடி, ரசிகர்களின் விருப்பங்களை அறியும் பொருட்டு இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. புனா நகருக்கு இக்குழு வந்தபோது, நீங்கள் ஸ்டார் பிளஸ் தொலைக்காட்சியில் வரும் பாப் இசைப் பாடகர் தானே?" என்று கல்லூரி மாணவிகள் டானிமெக்கில்-ஐச் சூழ்ந்து கொண்டு கொஞ்சத் தொடங்கிவிட்டனர். "இந்தியாவில் இவ்வளவு ரசிகர்களா என்று நான் வியந்து போனேன். அடுத்த முறை நான் இந்தியாவுக்கு வந்தால், என்னை வழிபாட்டுக்குரிய கடவுளாக மாற்றி விடுவார்களோ என்று பயமாக இருக்கிறது" என்கிறார் அந்த ராக் இசைப் பாடகர்.

ஸ்டார் டி.வி.யின் கமல் சித்து எனும் இந்தியப் பெண்ணுக்கு இந்தியா மட்டுமின்றி உலகெங்கும் லட்சக் கணக்கான ரசிகர்கள். "நிகழ்ச்சிகள் தயாரிப்பது, வர்ணனை செய்வது, நடிப்பு, நாகரீக ஸ்டாரின் பிரிக்க முடியாத அங்கம் அவர்" என்கிறார் ஸ்டாரின் நிர்வாக இயக்குனர். கமல் சித்துவின் கிளுகிளுப்போடு, அவரது உளறல்களும் இந்திய இளைஞர்களைக் கவ்விப் பிடித்துக் கொள்கிறது. "எனது வாழ்க்கையைப் பற்றி எந்தவொரு திட்டமோ - இலட்சியமோ என்னிடம் கிடையாது. அதுபோகிற போக்கிலேயே நான் விட்டு விடுகிறேன்" என்று பேட்டியளிக்கிறார் கமல் சித்து. கட்டுப்பாடற்ற சுதந்திரத்தின் மறு அவதாரமாக கமல் சித்துவைக் கருதி இளைஞர்கள் கிறங்கிப் போகிறார்கள்.

அவரது தமிழகப் பதிப்பாக இங்கே பிரியா தோன்றுகிறார். "இருபத்தொன்றாம் நூற்றாண்டு எப்படியிருக்கும்? பிரியா அதற்கு அறிகுறி!" என்று பெருமிதத்துடன் "குமுதம்" அவரை அறிமுகப்படுத்துகிறது. புதுமைப்பெண் பிரியா என்ன சொல்கிறாள்? "நான் ஒரு சரியான பி.ஜே.பி. (BJP) அதாவது பயங்கரமான ஜொள்ளு பார்ட்டி; அழகா, ஸ்மார்ட்டா பசங்க போனா சைட் அடிப்பேன்..." இருபத்தொன்றாம் நூற்றாண்டின் துவக்க உரை எப்படியிருக்கிறது?

"சமீபத்தில் என்னை ரொம்பவும்

www.padippakam.com

பாதிச்ச விஷயம் நடிகர் அரவிந்தசாமியின் திருமண நிச்சயதார்த்தம். நம்மைப் பார்க்காமலே நிச்சயம் பண்ணிவிட்டாரே என்று. என்னைப் பார்த்திருந்தால் ஒருவேளை எனக்கு ஜாக்பாட் கிடைத்திருக்கும்...'' புதுமைப் பெண் பிரியாவின் பிதற்றல் இங்கே இருபத்தோராம் நூற்றாண்டின் சுதந்திரப் பிரகடனமாக எதிரொலிக்கிறதே! உங்களுக்கும் கேட்கிறதா?

தகவல் - தொடர்பு சாதனத் துறையில் ஒரு மாபெரும் புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. உலகமே சாட்டிலைட், டிஷ் ஆண்டெனா எனும் குடையின் கீழ் வந்துவிட்டது. பரபரப்பான இந்த மின்னணுவியல் யுகத்தில் கட்டுப் பெட்டியாக வாழ உபதேசிக்காதீர்கள். காலம் மாறிவிட்டது. தலைமுறை இடைவெளி தப்பபிப்பிராயங்களுக்கே இட்டுச் செல்லும். இந்த வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாவிட்டால் விலகிக் கொள்ளுங்கள் - இதுதான் பிரியாவின், வித்யாவின், கமல் சித்துவின் நியாயங்கள். அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு ஆட்டுவிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின், தரகுப் பெரு முதலாளிகளின் நியாயங்கள்.

தகவல் ஒலி-ஒளி பரப்புத்துறை அமைச்சர் சிங்தியோ, ''எதைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம்'' என்கிறார். ஸ்டார் முதலான அந்நிய தொலைக்காட்சிகளுக்கு இணையாகவும் அதனுடன் போட்டியிடும் அளவுக்கும் தூர்தர்சனை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் புதிதாக 5 சானல்கள் துவக்கியுள்ளோம். விரைவில் மேலும் விரிவுபடுத்துவோம் என்கிறார். ஸ்டார் டி.வி.யின் பக்கம் மக்கள் சாய்வதிலிருந்து மீட்கவும், ஆபாச கலாச்சாரத்தைத் தடுக்கவும் நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது என்று ஒலி பரப்பு அமைச்சகத்தினர் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

ஆனால் நடப்பதென்ன? ஸ்டார் டி.வி.க்குப் போட்டியாக இந்தியத் தொலைக்காட்சியில் ஓயாத சினிமா நிகழ்ச்சிகள்; விளம்பரங்கள். குழந்தைகள் விளம்பரப் பாடல்களை மனப்பாடமாக ஒப்பிக்கின்றனர். எந்தச் சேனலில், எப்போது, என்ன நிகழ்ச்சி என்று விரல் நுனியில் விபரங்களை வைத்திருக்கின்றனர். இரவு 7.30 மணியிலிருந்து 9 மணி வரை குடியிருப்புப் பகுதிகளிலுள்ள தெருக்கள் வெறிச்சோடி விடுகின்றன. மகுடிப் பாம்பாக குடும்பமே தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னே குழுமி விடுகிறது.

சினிமா நிகழ்ச்சி என்றால் மக்களை போதையேற்றி கவர்ந்திழுக்க முடியும். ஆனால் இந்தியத் தொலைக்காட்சியின் மற்ற சேனல்களில் ஒளிபரப்பாகும் இசை, விளையாட்டு, மகளிர் மேம்பாடு, சுற்றுச்சூழல், சமூகப் பிரச்சினைகள், நடப்பு விவகாரங்கள் பற்றிய நிகழ்ச்சிகளோ சலிப்பூட்டுபவையாகவும் அரைத்த மாவையே அரைப்பதாகவும் உள்ளன. இதனால் ஸ்டார் முதலான அன்னிய தொலைக்காட்சியின் பக்கம் மக்கள் சாய்வது தீவிரமாகிறது.

ஸ்டார் டி.வி. என்றால், ஆப்பிரிக்க அதிசயங்கள், கார்ட்டூன் படங்களைப் பார்க்க குழந்தைகள் தாவி ஓடுகின்றன. பெற்றோர்கள் குழந்தைகளுக்குத் தெரியாமலும், இளைஞர்கள் பெற்றோருக்கும் தெரியாமலும் ''போல்டு அண்ட் பியூட்டிஃபுல்'', ''சாந்தா பார்பரா'', ''மடோனா'' நிகழ்ச்சிகளைப் பார்க்கத் துடிக்கின்றனர். குடும்பமே ஸ்டாருக்கு அடிமையாகி விடுகிறது.

ஸ்டார், பி.பி., சி.சி.என்.என் முதலான சேனல்கள் ஒளிபரப்புவது செய்திகளையும், பொழுது போக்கு கேளிக்கை நிகழ்ச்சிகளை மட்டுமல்ல. இடையிடையே பெப்சிகோலா, காபி, செருப்பு, சோப்பு, பற்பசை, பவுடர் விளம்பரங்களையும் சேர்த்துத்தான் ஒளிபரப்புகிறது. ஸ்டார் டி.வி. முழுக்கவும் தனது நிகழ்ச்சிகளை இந்தியாவில் இலவசமாகவே ஒளிபரப்புகிறது. வருவாயை இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள் தரும் விளம்பரங்களின் மூலம் ஈட்டுவதே அதன் நோக்கம். உதாரணமாக எப்.எல்.எல். நிறுவனத்தின் மேகி சூப் வில்லைகள் ஹாங்காங், சிங்கப்பூர் மற்றும் இந்தியாவிலும் விற்பனையாகிறது. என்னே பொதுவான மேகி விளம்பரங்கள் எல்லா இடங்களிலும் அதன் சந்தைக்கு லாபகரமானதாகி விடும்.

இத்தகைய விளம்பரங்களின் நோக்கமே உலகெங்கும் சந்தையைப் பிடிப்பது தான். சென்னைத் தொலைக்காட்சியின் மெட்ரோ சேனலில் வரும் விளம்பரங்கள் ஒரே நேரத்தில் 30 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களிடம் சென்றடைகிறது. ஸ்டார், சி.என்.என். பி.பி.சி சேனல்களில் வரும் விளம்பரங்களோ உலகெங்கும் கோடிக்கணக்கானோரிடம் ஒரே நேரத்தில் சென்று விடுகிறது. இத்தகைய விளம்பரப் போட்டியில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கிறது. நீண்ட காலமாகவே மேல் நிலை வல்லரசுக்கான போட்டியில் அமெரிக்கா தயாரித்துள்ள மோசடியான விளம்பர வித்தைகள் ஏராளம். இவை சி.என்.என்; ஸ்டார் சேனல் நிகழ்ச்சிகளில் நிரம்பி வழிகின்றன.

கண்ணாடிக் குவளைகளில் பொங்கி நுரை வழியும் பெப்சி விளம்பரம். உற்சாகம் பீறிட காதைச் செவிடாக்கும் ஒலி மழை



www.padippakam.com

யில், வண்ண விளக்குகள் மின்னி மறைய அரைகுறை ஆடைகளுடன் இளைஞர்கள் ஆடும் வெறிபிடித்த ஆட்டம். அப்படியே இந்திய இளைஞர்களைச் சுண்டியிழுத்து போதையேற்றுகிறது. ஹாரா ஜீன்ஸ் பேகியும், அடிடாஸ் ஷூவும், அமெரிக்கப் பாணியிலான கலாச்சாரமும் அப்படியே நாயுருவியாகத் தொற்றிக் கொள்கிறது. பேகி பேண்ட்டும், ஷூவும், பங்க் முடி வெட்டும் இல்லாத கல்லூரி இளைஞனையே பார்க்க முடியாது என்கிற அளவுக்கு அமெரிக்கப் பாணியிலான கலாச்சாரம்வேரூன்றிவிட்டது. இன்றுநடை-உடை-பாவனைகள், நாளை? ஏகாதிபத்திய அரசியல் கருத்துக்கள் - சிந்தனைகள் - மனோபாவங்கள்.

ஆபாசம், வக்கிரம், கட்டுப்பாடற்ற போக்கு, வரைமுறையற்ற பாலுறவு என்கிற ஒழுக்கக் கேடுகளைப் பரப்புவதோடு இத்தகைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நின்று விடுவதில்லை. மின்விசிறி, கலர் டி.வி. மிக்சி, குளிர் சாதனப்பெட்டி, கோல்கேட் பற்பசை, நெஸ்காபி, ஏரியல் சோப், அடிடாஸ் அல்லது நிகி ஷூ, பேகி ஜீன்ஸ், யார்ட்லி பவுடர், யமஹா மோட்டார் சைக்கிள், ரே-பான் மூக்குக் கண்ணாடி - என நுகர்பொருள் மோகத்தை ஊட்டி வளர்க்கிறது. ''இவையெல்லாம் இல்லாமல் ஒரு வாழ்க்கையா?'' என்று அன்னியப் பொருட்கள் மீது தீரா வெறியூட்டுகிறது. வருவாய் இல்லாவிட்டாலும் கடன் வாங்கியோ, வரதட்சிணை பிடுங்கியோ, லஞ்சம் - ஊழல் - தில்லுமுல்லுகளில் ஈடுபட்டோ, திருடியோ, கொள்ளையடித்தோ எப்படியாவது இத்தகைய நுகர் பொருட்களை வாங்கி அனுபவிக்க வேண்டும் என்கிற தீராத மோகத்தை ஊட்டுகிறது.

ஸ்டார், எம்.டி.வி. சி.என்.என். மெட்ரோ சேனல்களைத் தொடர்ந்து பார்க்கும் ஒருவன் நாளடைவில் பெண்களை ஒரு இச்சைப் பொருளாகப் பார்க்கத் தொடங்கிவிடுகிறான். தெருவில் போகும் பெண்களெல்லாம் தனது காதலிகளாகக் கருதி அரைப்பைத்தியமாகிவிடுகிறான். அவள் தன்னைக் காதலிக்காவிட்டால், கடத்திச் சென்று கற்பழிக்கத் துணியுமளவுக்கு வெறி பிடித்தவனாகிவிடுகிறான். தான் பிறந்து வளர்ந்த மண்ணே அவனுக்கு வேப்பங்காயாகிவிடுகிறது. நியூயார்க், லண்டன், பாரீஸ், ஹாங்காங் முதலான நகரங்களை சொர்க்கபுரியாகக் கருதி கற்பனையில் மிதக்கத் தொடங்கி விடுகிறான். எதையும் சிந்தித்துப் பார்க்கும் பகுத்தறிவே இல்லாமல், தொலைக்காட்சி பிரச்சாரத்துக்கு அடிமையாகி முட்டாளாகத் திரிகிறான்.

இவையெல்லாம் ஏகாதிபத்திய அடிமைச் சீரழிவுக் கலாச்சாரப் போக்குகள் என்று மேலோட்டமாக ஒதுக்கித் தள்ளிவிடக் கூடியவை அல்ல. நடப்பது கலாச்சார ஆக்கிரமிப்பு யுத்தம். கத்தியின்றி இரத்தமின்றி வான் வழியே ஏழை நாடுகளை மறுகாலனியாக்கி அடிமைப்படுத்த ஏகாதிபத்தியவாதிகள் நடத்தும் யுத்தம். பாரம்பரியமிக்க செழுமை வாய்ந்த புரட்சிகர, தேசிய, இன கலாச்சாரங்களை நிர்மூலமாக்க நடத்தப்படும் யுத்தம். ''என்னுடைய குழந்தைகளும் உன்னுடைய குழந்தைகளும் நம்முடைய குழந்தைகளுடன் விளையாடுகின்றன'' என்று கணவன் தனது புது மனைவியிடம் கூறுவதைப் போன்ற ஏகாதிபத்திய கலாச்சாரத்தை வேரூன்றச் செய்வதற்காக நடத்தப்படும் யுத்தம்.

ஸ்டார் டி.வி. நடத்தும் ஹிட்ச்விஷன் ஏஷியா நிறுவனத்தின் 64% பங்குகளை அமெரிக்காவின் மிகப்பெரிய பத்திரிகை - தொலைக்காட்சி முதலாளியான ரூபர்ட் மர்டோக் என்பவர் அண்மையில் வாங்கியுள்ளார். பிரிட்டனிலும் ஆஸ்திரேலியாவிலும் இவரே மிகப்பெரிய பத்திரிகை முதலாளி. செக்ஸ், வன்முறை, நிர்வாணம், ஒரினச் சேர்க்கை, பாலியல் வக்கிர சிரிப்பு - கேலிச் சித்திரங்கள், இனவெறி பிடித்த ஆபாச கேலிப்படங்கள் முதலானவற்றோடு, கடவுள் - மதம் - மூட நம்பிக்கைகளையும் விற்றுக் காசாக்குவதுதான் மார்டேக்கின் தொழில் ரகசியம். இப்போது ஸ்டாரில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் ஆபாசமும் அருவருப்பும் நிறைந்ததாக இருக்கும்போது, இப்புதிய முதலாளியின் வரவால் மாற்றங்கள் நிகழும் என்பது யாவரும் அறிந்தது தான். ஸ்டாருக்கு இணையாகவும் போட்டியாகவும் ஒளிபரப்பாக உள்ள இந்திய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

தொலைக்காட்சி தொடுக்கும் கலாச்சார யுத்தத்தின் கோரமான விளைவை அறிந்து கொள்ள வேறெங்கும் போக வேண்டாம். அண்மையில் வெளியான ''பாக்யா'' பத்திரிகையில், கல்லூரி மாணவிகளிடம் உங்கள் வருங்காலக் கணவர் எப்படி அமைய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள் என்று பேட்டி காணப்பட்டு வெளிவந்துள்ளது. அதில் ஒரு மாணவி, ''என் கணவர் குடிப்பழக்கம் உள்ளவராகவும், புகை பிடிப்பவராகவும் இருக்க வேண்டும்'' என்று பெருமையாகக் கூறியுள்ளார். இது 21-ம் நூற்றாண்டின் குரலாகக் கருதி ஒதுங்கி நிற்கப் போகிறீர்களா? அல்லது உங்கள் சகோதரியின், உங்கள் மகளின் சீரழிவாகக் கருதி, இந்த கலாச்சார ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடப் போகிறீர்களா? ●

## பாவ'ஆத்மா'க்களும் கருவறைகளும்

பக்திப் படங்கள் வழக்கமாக உணர்த்தும் 'நீதிகள்' இரண்டு. ஒன்று, கடவுள் நம்பிக்கையற்ற இளைஞர்களை பாடம்புகட்டி திருத்துவார் மற்றது, தீயசக்திகளை கடவுளே அழித்துவிடுவார். இந்த வழக்கமான நீதிகளை விட்டு புதியனவற்றைச் சொல்லியிருக்கிறது 'ஆத்மா'.

புனித ஆத்மா ஒன்று கடவுளை அடைய விடாமல் இரண்டு சக்திகள் தடுக்கின்றன.

முதலாவது, கடவுள் நம்பிக்கையற்ற தீவிரவாதிகள் 'இயக்கம்'. (இந்தச் சொல் படத்தில் படுகிறபாடு 'கடவுளுக்கே' பொறுக்காது). இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் கடவுள் காட்சியளிக்கப் போவதாகத் தெரியவரும் கோயிலின் கருவறைக்குள் 'ஜெலட்டின்' குச்சிகள் வைத்து தகர்க்க முயற்சிக்கின்றனர்.

இரண்டாவது, தீய சக்திகள், முற்பிறவியில் புனித ஆத்மாவை 'தீட்டுப் படுத்தி' — பெண் சபலம் உண்டாக்கியும், தம் சாவுக்கு காரணமாக்கியும் — கடவுளை அடையவிடாமல் தடுத்துவிடுகின்றனர். இப்பிறவியில் சவப்பெட்டி செய்பவர்களாக, அதாவது சூத்திரர்களாக பிறக்கின்றனர். கறுப்பு உடைகளுடன், முரட்டுத்தனமாக வந்து புனித ஆத்மாவை கடத்திக் கொண்டுபோய் வைத்து, கடவுளைச் சேரவிடாமல் தடுக்கப்பார்க்கின்றனர்.

இறுதியில், புனித ஆத்மா கடவுளைச் சேர்ந்துவிடுகிறது. கோயில் கருவறைக்குள் நுழைந்து வெடிகுண்டு வைத்த தீவிரவாத இயக்கத்து இளைஞனும், புனித ஆத்மாவை கடவுளைச் சேரவிடாமல் தடுக்க கருவறைக்குள் நுழைய ஓடிவரும் தீயசக்திகளும் — நுழைவதற்கு முன்னேயே — கொடூரமான முறையில் இறக்கின்றனர்.

இயக்கத்தவனும், சூத்திரனும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில், ஒரே காரணத்திற்காக — கருவறைக்குள் நுழைவதையொட்டி — செத்துப் போகிறார்கள். ஏன் தனித்தனியே, வெவ்வேறு இடங்களில் சாகவில்லை?

''சூத்திரன் கோயில் கருவறைக்குள் நுழையக்கூடாது. அந்த உரிமை பார்ப்பனர்களுக்கு மட்டுமே''. இப்படி பட்டவர்த்தனமாகச் சொன்னால், அதை 'கடவுள் வாக்கு' என்பதாகச் சொன்னாலும் கூட, அதை பார்ப்பனரைத் தவிர யாரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பது சாணக்கியர்களுக்குத் தெரியாதா என்ன! என்றாலும் சொல்லியாக வேண்டும்; நுண்மையாக, ஆனால் அழுத்தமாக.

இருக்கவே இருக்கிறது, நமது மக்களிடம் ஆழப் பதிந்திருக்கும் மூட நம்பிக்கைகளும், விதி, கடவுள் தத்துவங்களும். இவற்றை மூலதனமாக வைத்து பக்குவமாய்ப் பின்னப்பட்டிருக்கும் மாயவலைதான் 'ஆத்மா'.

கருவறைக்குள் நுழைந்தால் இயக்கத்தவனும் நுழைய முயற்சித்ததாலேயே சூத்திரனும் கடவுளால் சாகடிக்கப்படுகிறார்கள். இயக்கத்தவன் கருவறைக்குள் தப்பித்தவறி நுழைந்தாலும் சூத்திரன் மட்டும் நுழைந்துவிடக்கூடாது; கவனமாக நுழையும் முன்பாகவே சாகடிக்கப்படுகிறார்கள்.

இருவரும் கொடூரமாக சாகிறார்கள். இறந்துபோன இயக்கத்தவனின் சிதறிய சதைக்கூளத்தைக் காட்டி அவன் காதலி பயங்கரமாக கதறி அழுவதையும் காட்டுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு காத்திருக்கும் முடிவு பார்வையாளர்களை பயத்தில் உறையச் செய்து மனதில் பதிய வைக்கப்படுகிறது.

இன்னும் ஒன்று.

புனித ஆத்மா பார்ப்பான் அல்ல; ஒரு சித்தர் (பார்ப்பான் அல்லாதவன்). பார்ப்பானாக காட்டினால் மீண்டும் தனிமைப்பட்டுவிடுவோம் என்ற அச்சத்தில் இப்படிக் காட்டியிருக்கிறார்களோ?

— வளர்மதி.

படிப்பகம்

www.padippakam.com

# திருச்சியில் எழுச்சிமிகு பொதுக்கூட்டம்

செப்டம்பர் -20 அன்று திருச்சி புத்தூர் நாலு ரோட்டில் இந்து முன்னணியின் விநாயகர் ஊர்வலத்தை எதிர்த்து ம.க.இ.க.வின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முஸ்லிம்களுக்கெதிராக கலகம் நடத்துவதற்கும், ஆட்சியைப் பிடிப்பதற்கும் கீழ்த்தரமான முறையில் முயற்சி செய்யும் பாரதிய ஜனதா பார்ப்பனக் கும்பலை அம்பலப்படுத்தி தஞ்சை மாவட்டச் செயலர் தோழர் காளியப்பன் பேசினார். பார்ப்பனக் கும்பலின் இந்து முகமூடியைக் கிழிக்கும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

கருவறை நுழைவுப் போராட்டத்திற்குப் பேராதரவு தந்த திருச்சி மக்கள் இந்தக் கூட்டத்திற்கும் ஆயிரக் கணக்கில் திரண்டு வந்திருந்தனர். கூட்டம் துவங்கும் பொழுதே மேடையிலிருந்து தோழர்களைப் புகைப்படம் எடுக்க காவல்துறை முயன்றது. கோபம் கொண்ட தோழர்கள் தடுத்தனர். பதட்ட நிலையை உருவாக்கி கூட்டத்தைக் கலைப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்த காவல்துறை உடனே ஆயுத போலீசைக் கொண்டு வந்து குவித்தது. ஆனால் இந்த அரட்டல்களுக்கு மக்கள் அசையாதது மட்டுமல்ல, மேலும் அதிகமாகத் திரளத்துவங்கினர்.

மறுநாள் 21-ம் தேதி காலை திருச்சி மாவட்டச் செயலர் முத்து, கபிலன், நாகராஜ், வடிவேலு ஆகிய தோழர்களை வீடு புகுந்து கைது செய்தது காவல்துறை. கைதாவதைப் பற்றிக் கவலைப்படாமல் அன்று எடத்தெரு பகுதியில் நடக்க விருந்த பொதுக்கூட்டத்திற்கு மேடை அமைத்துக் கொண்டிருந்த தோழர்களையும், பந்தல் அமைத்த தொழிலாளிகளையும் ஒலிபெருக்கி கடைக்காரரையும்கூட போலீசு கைது செய்தது. கைது செய்யப்பட்ட தோழர்கள் ரிமாண்டில் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

இந்து முன்னணி கேடிகளுக்கும், பார்ப்பன ஜெயா அரசுக்கும் வெட்கமின்றி காவடி தூக்கும் காவல்துறையின் இந்த அடாவடித்தனத்தை எதிர்த்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

23-ம் தேதியன்று இந்து முன்னணி நடத்தும் விநாயகர் ஊர்வலத்தை தடை செய்ய வேண்டுமென திருச்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு 23-ம் தேதி தான் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ம.க.இ.க. சார்பில் 40 வழக்கறிஞர்கள் ஆஜராயினர். பார்ப்பன இந்து முன்னணி எதிர்ப்பாளர்கள் ஆதரவாளர்கள் என நீதிமன்றம் இரண்டாகப் பிளந்தது. பார்ப்பனக் கும்பல் சிறுபான்மையாகித் தனிமைப்பட்டுப் போனது.

மத உரிமையைத் தடை செய்வதா என்று குழம்பிய நீதிமன்றம் ''முஸ்லீம்கள் வாழும் பகுதி வழியே போகக்கூடாது'' என்று வேண்டுமானால் உத்திரவிடுவதாகக் கூறியது. ஆனால் இந்த 'நீதி' வழங்கப்படுவதற்குள் இந்து முன்னணியின் மத வெறி ஊர்வலம் புறப்பட்டுவிட்டது. கடப்பாரையும் கோடாரியும் வைத்துக்கொண்டு அயோத்தியில் 'பஜனை' நடத்த அனுமதிக்கும் உச்ச நீதிமன்றம் இருக்கும் நாட்டில் இது ஒன்றும் அதிசயமல்ல.

'மத உரிமையின்' அடிப்படையில் ஊர்வலம் போன இந்து முன்னணி காலிகள் மசூதியின் வாயிலில் நின்று ''ராமர் எங்கள் உயிர் - பாபர் எங்கள் மயிர்'' எனக் கோஷமிட்டனர். முஸ்லீம்களுக்கெதிரான அசிங்கமான வசை மொழிகளைப் பொறுக்க முடியாத 'சொரணையுள்ள' ஒரு (இந்து) போலீஸ் அதிகாரி கோஷமிட்ட அந்த 'இந்துக்களை' அங்கேயே இரண்டு தட்டு தட்டினார்.

அரசு ஆதரவு இருக்கிறது என்ற திமிரில் ஆடிப்பார்க்கிறது அக்கிரகாரம். கருவறை நுழைவுக்கு மக்கள் தந்த ஆதரவினால் கிலியடைந்துபோன 'வீரத்துறவி' ராம கோபாலன் திருச்சியிலேயே மையம் கொண்டிருக்கிறார். விநாயகர் ஊர்வலத்துக்கும் 'அவாள்' தான் தலைமை.

இந்தச் 'சொரணையை' எல்லோருக்கும் ஏற்படுத்தத்தான் பார்ப்பன இந்து முன்னணியைத் தொடர்ந்து தோலுரிக்கிறோம். மக்களுக்கு சொரணை திரும்பும்போது அக்கிரகாரத்தின் தோல் சுத்தமாக உரிக்கப்படும்.

# ஆர்.எஸ்.எஸ்ஸுக்கு நெய்வேலியில் பதிலடி

கடந்த 17-08-93 அன்று நெய்வேலியில் நடந்த பொதுக் கூட்டத்தில் இந்து முன்னணி ராம கோபாலன் ம.க.இ.க. தி.க., பா.ம.க. போன்ற இயக்கங்களை பற்றி அவதூறாகவும், செந்தில்குமார் (ம.க.இ.க.) செல்வராசு (IPF) துரைக்கண்ணு (ம.க.இ.) போன்ற நபர்களை பயங்கரவாதிகள். நக்சலைட்டுகள் எனவே இவர்களை நடு ரோட்டில் நிற்க வைத்து நாயை போல சுட வேண்டும் என கொக்கரித்தான், நெய்வேலியில் நடந்த சில தீ விபத்துகள் போன்றவற்றிக்கும் மேற்படி நபர்களே காரணம் என பேசினான். இது எல்லா தரப்பு மக்கள் மத்தியிலும் ஆத்திரம் உண்டாக செய்தது.

ராம கோபாலன் பேச்சை கண்டித்தும் RSS கும்பலை தடை செய்ய கோரியும் நெய்வேலியில் 21-08-93 அன்று கண்டனக் கூட்டம் நடந்தது. இதில் ம.க.இ.க. தி.க. பா.ம.க. தலித் பண்பாட்டு பேரவை, BSP, ம.க.இ. SUCI, ஜனதாதளம் போன்ற அமைப்புகள் பங்கு கொண்டன. 2000 பேர் அளவில் கூடிய கூட்டம் உணர்ச்சிமயமாக நடைபெற்றது. RSS இயக்கம் தடை செய்யப்பட வேண்டும் என்றும், இந்துமத இழிவை விளக்கியும், RSSஇன் கோரமுகத்தை அம்பலப்படுத்தியும் கூட்டம் நடந்தது. ஆர்.எஸ்.எஸ். இனிமேல் 'சாகா' (ஆயுதப் பயிற்சி) நடத்தக் கூடாது எனவும் எச்சரிக்கை விடப்பட்டது. இதன் பின்னர், 28-08-93 அன்று 'ஷாகார்' நடப்பதாக கேள்விப்பட்டு கூட்டமைப்பை சேர்ந்த 15 பேர் நேரிடையாக தடுக்கச் சென்றபோது பொதுக் கூட்டத்தில் திமிராகப் பேசிய உன்னி கிருஷ்ணன் (BJP) என்பவர் கிடைக்கவே அவனுக்கு 'தக்க சன்மானம்' கொடுத்து எச்சரித்து அனுப்பினார்கள். 30-08-93 அன்று மீண்டும் 'ஷாகா' நடக்கவே மீண்டும் 20 பேர் கொண்ட குழு அதைத் தடுக்கச் சென்றது. ஆனால் முன்னரே செய்தி கேள்விபட்டு எல்லோரும் ஓடிவிட்டதால் அகப்பட்ட ஒருவனை மட்டும் கவனித்து அனுப்பியிருக்கின்றனர். இது முடிந்து திரும்புகையில் RSS கும்பல் கையில் பயங்கர ஆயுதங்களுடன் சில தோழர்களை வளைத்தது. சங்கர் என்ற ம.க.இ.க. தோழருக்கு காயம் பலமாக ஏற்பட்டது. அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் ஆர்.எஸ்.எஸ். கும்பல் போலியான மருத்துவச் சான்று பெற்று காவல் துறையில் புகார் கொடுத்தனர். அந்த புகார் அடிப்படையில் செந்தில்குமார், செல்வராஜ், சுப்பிரமணி, முருகவேல், நாராயணசாமி, அண்ணாமலை ஆகிய ம.க.இ.க. மற்றும் மதவெறி எதிர்ப்பு கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் மீது கொலை முயற்சி மற்றும் பல பிரிவுகளில் பொய்வழக்கு தொடுத்து சிறையிலிட்டுள்ளது. காவல்துறை ஆனால் தாக்கப்பட்ட சங்கர் கொடுத்த புகாரின் மேல் காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அவரையே மிரட்டி வருகிறது.

நெய்வேலியில் உயர் மட்ட பார்ப்பன அதிகாரிகள், காவல் துறை மற்றும் RSS கும்பல் ஒரு கூட்டமைப்பாக செயல்பட்டு வருகிறது. ''முதல்வருடன் நேரடி தொடர்பு கொண்டு ஒடுக்குவேன்'' என ராம கோபாலன் பகிரங்கமாக பேசுகிறார். தொடர்ந்து இயங்கி இந்த கும்பலை முறியடிக்க சபத மேற்று கூட்டமைப்பு தொடர்ந்து செயலாற்றி வருகிறது. கைது செய்யப்பட்டவர்கள் தற்போது நிபந்தனை ஜாமினில் வெளிவந்துள்ளனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன். 45. செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம், சென்னை 600 049. அச்சிடுபவர்: பிரேம் பிரஸ், 107 ஏ, பெரியார் பாதை (மேற்கு), சென்னை - 600 094. புதியகலாச்சாரத்தில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் சமுதாயத்தில் காணப்படும் உண்மை[illegible]

படிப்பகம்

www.padippakam.com

# செய்திகளுக்கிடையே.....

ஆயுதங்களைப்பற்றி
அதிகம் கவலைப்படுகிறார்கள்
அதன் தயாரிப்பாளர்கள்

மயிற்பீலி விசிறிகளுக்கிடையே
மலர்ந்தும்
இமை செருக முடியாமல்
விழிபிதுங்கும் செட்டைகளால்
விரட்டப்படுகிறார்கள்.

அந்தப்புரத்தில் ஆசையாய் வளர்க்கும்
பூச்செடிகளின்
மொட்டு வெடிக்கும் ஓசையையும்
ரசிக்க முடியாத சந்தேகம்
விஷமிகளோ
பழிவாங்கத் துடிக்கும் விழிகளால்
துன்புறுத்துகின்றன.

நிலவிலும் ரத்தக்கறை பீதி
கட்டுக்கடங்காமல் கைமாறி
ஆயுதங்கள் திரும்பும்போது
அவர்கள் கையிலெடுக்கும் ஆயுதம்
"அகிம்சை... மனிதாபிமானம்...
நீதிபோதனை"

பறிக்கும் கைகள்
பாடம் சொல்கின்றன
"ரோஜாக்களே முட்களை
போட்டுவிடுங்கள்"

தேனடை திருட வந்தவர்கள்
பேசிக் கொள்கிறார்கள்
"தேனீக்கள் விஷமப் பிரச்சாரம் செய்கின்றன"

மிதிக்கும் கால்கள்
கடிக்கும் எறும்புகளை கண்டிக்கின்றன
"இது பண்பாடல்ல"

பதுங்கியிருந்த பூனைகள்
பசியாறியவுடன் வெளியேற்றும்
சவச்சி வெறுத்த வார்த்தைகள்
"சைவம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம்"

புரிகிறது வரலாறு
ஆயுதங்களின் சத்தத்தை விடவும்
அகிம்சாவாதிகளின் அலறலே
'பொது அமைதிக்கு' பங்கம்.

உறைந்த இரத்தத்தில்
உருவப்பட்ட சேலைகளில்
மதக்குறி தேடிய நிர்வாணத்தில்

இன்னும் புரியவில்லையா
இந்த ஜனநாயகத்தின் பொருள்?

காரணமறிந்தும் கருத்துத் தளம் தேடும்
கைக்கூலிகளே

முதலில் நிராயுதபாணிகளிடம்
நீதிபோதனை செய்வதை நிறுத்துங்கள்

ஆயுதபாணிகளிடம்...
அவர்கள் "ஜோதியில்"
நீங்கள் வெளிச்சம் தேடுங்கள்.

நெருப்பு மூட்டும் வேலை
நிறைய இருக்கிறது எங்களுக்கு.

● துரை. சண்முகம்

PUTHIYA KALACHARAM R. No. 42647/85 Regd. No. TN/MS (S) 376

படிப்பகம்